க.நா.சு.



# வாழ்ந்தவர் கெட்டால்

# வாழ்ந்தவர் கெட்டால்

க.நா.சு

சந்தியா பதிப்பகம்

சென்னை

க.நா.சு என்றழைக்கப்படும் கந்தாடை நாராயணன் சுப்ரமண்யம் தஞ்சாவூர் ஜில்லா வலங்கைமானில் 31.01.1912இல் பிறந்தவர். சென்னையிலும் டில்லியிலும் இவரது இலக்கிய வாழ்க்கை குடிகொண்டிருந்தது. இலக்கிய வட்டம், சூறாவளி, சந்திரோதயம் ஆகியவை இவர் நடத்தி வந்த இலக்கிய இதழ்கள். சிறந்த இலக்கிய விமர்சகராகவும் அயல்மொழி செவ்விலக்கியங்களை தமிழுக்கு அளித்த மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் வாசகர்களிடம் கவனம் பெற்றுள்ள க.நா.சு பல்வகைப்பட்ட நாவல்களையும் எழுதி சாதனை புரிந்தார். ‘இலக்கியத்துக்கு ஒரு இயக்கம்’ என்ற இவரது நூலுக்கு சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப் பட்டது. சிறுகதைகளும் கவிதைகளும் எழுதி வெளி யிட்டிருந்தாலும் தனது நாவல்கள் மூலமாகத்தான் க.நா.சு ஒரு சிறந்த படைப்பாளியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார். ‘பொய்த் தேவு’ இவரது பிரபலமான நாவல்; ‘அசுரகணம்’ ஆகச்சிறந்த நாவல்; ‘அவரவர்பாடு’ இவரெழுதிய மர்ம நாவல். இல்வாழ்க்கையை பொருட்படுத்தாது இலக்கிய வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்த க.நா.சு 16.12.1988இல் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார்.

## பதிப்புரையாக ஒரு சொல்

இந்த நாவல் தஞ்சாவூர் நகரத்தில் தொடங்கி அங்கேயே முடிகிறது. அதாவது 70 ஆண்டுகளுக்கு முந்தைய தஞ்சாவூர். அப்போது காவிரி கரை புரண்டு ஓடியது. ஹோட்டல்களில் டிகிரி காபி கிடைத்தது. ஐப்பசியில் அடை மழை பெய்தது. வில் வண்டிகள் பண்ணயார்களின் அந்தஸ்தைக் காட்டும் வாகனங்களாக இருந்தன. அப்படியிருந்த தஞ்சாவூரில் நடைபெறுகிறது இந்த நாவலின் கதை.

ஒரு சந்தேகத்தின் விளைவு, ஒரு மரணம்; ஒரு தற்கொலை; மற்றொரு மரணம். சஞ்சலமும் சந்தேகமும் ஒருவனை நிலை குலையச் செய்கிறது. அவன் விரக்தியில் வாழ்கிறான். மன உளைச்சல் ஆட்டிப்படைக்கிறது. அமைதியானவன் ஆவேசப்படுகிறான். ஏதோ ஒரு எண்ணம், ஏதோ ஒரு சந்தேகம் இடைவிடாமல் அவன் இதயத்திற்கு எரிச்சல் ஊட்டி அதை கொதி நிலையிலேயே வைத்திருக்கிறது.

இதற்கு காரணமான ஒரு நபரையோ சூழ்நிலையையோ அந்த மனம் பொறுத்துக் கொள்வதில்லை. மனத்தின் வெளிப்பாடு வார்த்தைகளாய் வந்து கொட்டுகின்றன. அந்த எரிமலையின் தகிப்பை எதிராளியால் பொறுக்க இயலாது. அந்த ஆவேச தாக்குதலும், அவமானச் சொற்களும் சில நொடி நேரங்களில் வாழ்ந்து கெட்ட ஒருவனை ‘இனி வாழ வேண்டாம்’ என்ற முடிவுக்கு கொண்டு செல்கின்றன. வசை பாடியவனும் எதிர்பாராத விளைவுகளில் திகைத்து உறைந்து தன் கணக்கை தீர்க்கும் திசை தெரியாது மன அதிர்ச்சியில் வீழ்ந்து மடிகிறான்.

இந்த நாவல் மனித மனங்களின் சஞ்சலங்களையும் சஞ்சலங்கள் விதைக்கும் சந்தேகங்களையும் சந்தேகங்கள் போடும் விபரீத கோலங்களையும் துல்லியமாகப் பிரதிபலிக்கின்றன.

கொஞ்சம் தஞ்சாவூர்;

கொஞ்சம் வாழ்ந்தவர்கள்;

கொஞ்சம் வீழ்ந்தவர்கள்.

# 1

தஞ்சாவூர் எனக்குப் புதிய ஊர் அல்ல.

சர்க்கார் இலாக்காக்களில் ஏதாவதொன்றில் சிறு உத்தியோகம் வகிப்பவருடைய பிள்ளையாகப் பிறக்கிற பாக்கியம் படைத்தவன், சிறு வயதிலேயே பல ஊர்களிலும் வசிக்கும் பாக்கியத்தைப் பெறுகிறான்.

தஞ்சாவூரில் அந்த நாட்களில் வசிக்கும் பாக்கியம் எனக்கு இப்படித்தான் கிடைத்தது. என் தகப்பனார் தஞ்சாவூரில் உத்தி யோகம் பார்த்துக் கொண்டிருந்த போது நான் அங்கே உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். என் பள்ளிப் படிப்பு முடிவதற்கும் என் தகப்பனாருக்குத் தஞ்சாவூரிலிருந்து மாற்றலாவதற்கும் சரியாக இருந்தது. இது சர்க்கார் உத்தி யோகஸ்தர்கள் எப்படியோ சாமர்த்தியமாகச் சாதித்துக் கொள்ளுகிற ஒரு விஷயம்.

பள்ளிப்படிப்பு முடிந்த பிறகு பல வருஷங்கள் தஞ்சாவூர் செல்ல எனக்கு சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. ஆனால் போய் வரவேண்டும். பத்துநாள் தங்கிவர உல்லாசமாக அலைந்து திரியவேண்டும் என்கிற எண்ணம் மட்டும் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. இப்படித் தஞ்சாவூரைப்பற்றி நான் அடிக்கடி நினைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. இளம் பிராயத்திலே ஓடியாடித் திரிந்து விளையாடிய இடங்களை நடு வயதிலே போய்ப் பார்க்க வேண்டுமா என்ன? அதிலே அலாதியான ஓர் இன்பத்தை அநுபவிக்காதவன் மனிதனே அல்ல என்றுதான் சொல்லவேண்டும். அந்த இடம் அன்றைக்கின்று மாறியிருக்கிறது; அந்த இடம் சிறிதும் மாறவேயில்லை. மனிதன் அன்றைக்கின்று மாறாமல் அழியாத மேனியாய் குழந்தைப் பருவத்திலேயே தங்கிவிடுவானானால் எவ்வளவோ நன்றாக இருக்குமே என்று எண்ணிப் பார்க்காமல் யாரால் இருக்க முடியும்? பழைய, பழக்கப்பட்ட இடங்களைப் பதினைந்து இருபது வருஷங் களுக்குப் பிறகு மீண்டும் போய்ப் பார்ப்பது என்பது ஒரு ஆத்மீக அநுபவம்.

தவிர தஞ்சாவூரைப் பற்றிய வரையில் எனக்கு இன்ப கரமானவை என்று சொல்லக் கூடியவையாகப் பல ஞாபகங்கள் உண்டு; துன்பகரமானவையும் பல உண்டு. என் தாயார் இறந்தது தஞ்சாவூரிலேதான். ஆனால் அந்தத் துயரமான சம்பவத்தின் ஞாபகம், இன்று அப்படி ஒன்றும் துன்பகரமானதாக இருக்க வில்லை. இன்பமோ துன்பமோ சிறு வயதுக்குரிய சில விஷயங்களை, சம்பவங்களை, சந்தர்ப்பங்களை எண்ணிப் பார்ப்பதிலே மனிதனுக்கு எல்லையற்ற ஆனந்தம் இருக்கத்தான் இருக்கிறது!

இத்தனையும் தவிர, தஞ்சாவூரில் எனக்கு அலுவலும் இல்லாமல் இல்லை. சரஸ்வதி மஹாலில் உட்கார்ந்து ஏதாவது சில நாட்கள் எட்டுகிற வரையில், 'ஆராய்ச்சி' நடத்தினால், சமீப காலத்திய நமது சிறுமை பெறுமைகளைப் பற்றி, சுவாரஸ்யமாக மிகைப்படுத்தி எழுதுவதற்கு விஷயம் கிடைக்கலாம்; தொழில் முறையிலும்கூடத் தஞ்சாவூர் போய்வருவது லாபகரமாக இருக்கும் என்று தான் எண்ணினேன்.

போகவேண்டும், போகவேண்டும், போகத்தான் வேண்டு மென்று நான் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கையில் என் நண்பன் ரகுவிடமிருந்து கடிதம் வந்தது. அந்தக் கடிதம் தஞ்சாவூரிலிருந்து வந்தது என்பதுதான் விசேஷம்.

நானும் ரகுவும் சேர்ந்து படித்தவர்கள்: தஞ்சாவூரில் பள்ளியில் அல்ல; சிதம்பரத்தில் சர்வ கலாசாலையில் நாலு வருஷங்கள் மிகவும் நெருங்கிப் பழகியவர்கள். எவ்வளவு நெருங்கி அப்போது பழகினோம் என்பது எங்களோடு அந்தக் காலத்தில் படித்தவர்களுக்குத் தெரியும். அந்த நாட்களில் யாராவது ரகுவைத் தனியாகப் பார்த்தால் என்னைப்பற்றி விசாரிப்பார்கள்; என்னைப் பார்த்தால் ரகுவைப்பற்றி விசாரிப்பார்கள். கலாசாலைப் படிப்பு முடிந்த பிறகும் இரண்டு மூன்று வருஷங்கள் நாங்கள் அடிக்கடி கடிதங்கள் எழுதிக் கொண்டோம். ஆனால் கலாசாலை விட்டு இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பிறகு நாங்கள் இருவரும் அதிகமாகச் சந்தித்ததில்லை. அதிகமாக ஒருவர் பற்றி மற்றவருக்குத் தகவலும் தெரியாது! ஆனாலும் எங்களுக் கிடையில் இருந்த நட்பு மாறிவிடவில்லை! மனத்தில் அந்தரங்கமாக இருந்தது என்று சொல்லலாம். அடிக்கடி ரகுவின் யோக க்ஷேமங்களையும் வரவு

செலவுகளையும் வெற்றி தோல்விகளையும் பற்றி நான் சிந்திப்பதுண்டு. அவனும் என்னைப்பற்றிச் சிந்தித் திருப்பான் என்பதில் சந்தேகமில்லை; பத்திரிகைகளில் என் பெயரைப் பார்க்கிற சந்தர்ப்பங்களிலாவது நினைத்திருப்பான் என்பதில் சந்தேகமேயில்லை.

மனத்திலே இருந்துவந்த நட்புணர்ச்சி காரணமாக நான் ரகுவுடன் சில நாள் சேர்ந்திருக்கவேண்டும் என்று அடிக்கடி நினைப்பதுண்டு.

ரகுவினிடமிருந்து ஒரு கடிதத்தை நான் எதிர்பார்க்க வில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் தஞ்சாவூரிலிருந்து எதிர் பார்க்கவில்லை — அந்தச் சமயத்திலும் எதிர் பார்க்கவில்லை. ஆகவே அவன் கடிதம் எனக்கு இரட்டிப்பு சந்தோஷத்தைத் தந்தது.

வழக்கத்துக்கு விரோதமாக ரகு சற்று விரிவாகவே எழுதி யிருந்தான். அவனுக்குக் கலியாணமான செய்தி மட்டுமே எனக்குத் தெரியும். அவன் மனைவி, இரண்டு குழந்தைகளைப் பெற்று அவன் பொறுப்பில் விட்டுவிட்டு இறந்து விட்டாள் என்பதைத் தெரிவித்திருந்தான். அவன் மனைவி இறந்து ஒரு வருஷம் பூராவும் ஆகிவிடவில்லை என்றும் எழுதியிருந்தான். தஞ்சாவூரில் நாற்பது ஐம்பது ரூபாய் சம்பளத்தில் ஓர் ஆபீஸில் உத்தியோகம் பார்த்து வருவதாக எழுதியிருந்தான். அவன் மறு விவாகம் செய்து கொள்ள உத்தேசமில்லை என்றும் எழுதி யிருந்தான். வீட்டு வேலைகளைச் செய்வதற்கு ஒரு கிழவி இருந்தாள். மற்றப்படி அவனும் அவன் குழந்தைகளும் தான். ஏதோ உள்ள சௌகரியத்துடன் வாழ்ந்து வருவதாகவும், ஒரு பத்துநாள் லீவு எடுத்துக்கொள்ளப் போவதாகவும் சில நாட்கள் தஞ்சாவூரிலேயே தங்கப் போவதாகவும் எழுதியிருந்தான். நானும் வந்து அந்தப் பத்து நாட்களும் அவனுடன் தஞ்சாவூரில் தங்கினால் அவனுக்கு ஆறுதலாகவும் ஆனந்தமாகவும் இருக்கும் என்றும் எழுதி யிருந்தான்.

மறு தபாலிலேயே நான் வருவதாக எழுதிவிட்டேன். ஆனால் நாலைந்து நாட்கள் கழித்துத்தான் என்னால் கிளம்ப முடிந்தது.

தஞ்சாவூரிலே பத்து நாள் தங்கிவிட்டுத் திரும்புவதாகப் போன நான் ஒரு மாதத்திற்கு அதிகமாகவே தங்கி விட்டேன். நண்பர் ரகு பத்து நாள் லீவு என்று இருபது நாள், முப்பது நாள், நாற்பது நாள் என்று தொடர்ந்து லீவு

எடுத்துக் கொண்டான். ரகுவின் குழந்தைகளுடன் விளையாடுவதே எனக்கு மிகவும் இன்பமாக இருந்தது.

வேறு எங்கேயும் அப்பொழுது — அப்பொழுது மட்டும் என்ன? எப்பொழுதுமேதான் — எனக்கு அவசர ஜோலி எதுவும் இல்லை. ஒரு நாளில் இருந்த அறுபது நாழிகைப் பொழுதில் தூங்குகிற நேரம் பன்னிரண்டு பதினைந்து நாழிகைப் போக மற்றப் பொழுதெல்லாம் இன்ப மயமாகவே கழிந்தது என்று சொல்லவேண்டும். பேச்சு, பேச்சு! ஓயாத பேச்சு! அப்படிப் பேசுவதற்கு என்ன தான் விஷயம் இருக்குமோ என்று மற்றவர்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் விஷயம் என்னவோ இருந்து கொண்டேதான் இருந்தது! அந்தப் பேச்சை ரசமுள்ளதாகச் செய்வதற்குப் போதிய அளவு, இடை இடையே மௌனமாக இருக்கவும் எங்களால் முடிந்தது. பேச்சும், பேச்சின் தொடர்ச்சியாக எழுந்த மௌனமும் இன்பம் தருவதாகவே இருந்தன.

காலையில் எழுந்து காபி சாப்பிட்டுவிட்டு எங்கேயாவது ஊர் சுற்றப் போவோம். மத்தியான்னம் பத்து, பத்தரை மணிக் கெல்லாம் சாப்பாடாகி விடும். பிறகு சரஸ்வதி மஹாலுக்குப் போய் ஏதாவது ஏடுகள் புரட்டுவோம்.

ரகுவுக்கு இலக்கியத்திலே, அதாவது புஸ்தகங்களிலும் படிப்பதிலும் அவ்வளளவாக ஈடுபாடு இல்லை என்று தான் சொல்லவேண்டும். ஆனால் அவன் எதைப் பற்றியுமே தெளிவாகச் சிந்தனை செய்யக் கூடிய மனிதன். அக்காலத்திலே ஓரளவு புஸ்தகங்களில் பரிச்சயம் உண்டு. இலக்கியத்தையே தொழிலாகக் கொண்டு பிழைக்க வேண்டியிருந்த எனக்கு, ‘இலக்கியத் தொழில் மனம்’ படைக்காத அவனுடைய பல சிந்தனைகளும், பேச்சும் மிகவும் உதவியாக இருந்தன. அவனுடைய இலக்கியச் சிந்தனைகளும் விமரிசனங்களும் உண்மையிலேயே எனக்கு மிகவும் உதவியாக இருந்தன.

மாலை மூன்று மணிக்கு காபிக்கு வீடு திரும்பினால் ரகுவின் குழந்தைகளுடன் விளையாடிக் கொணடே என் பொழுது ஆனந்தமாகக் கழிந்துவிடும். ரகு சிறிது நேரம் படுத்து உறங்குவான். நான் அந்தக் குழந்தைகளுக்குத் திருப்தி தராத கதைகளைச் சொல்லிக்கொண்டே பொழுதை போக்குவேன். பொறுமையாகக் கதை பூராவையும் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு அந்தக் குழந்தைகளில் சின்னது (பெண் — அதன் பெயர் ராஜி) சொல்லும்: “மாமாவுக்குக் கதையே

சொல்லத் தெரியவில்லையடா மணி; நீ சொல்லு ஒரு கதை’’ என்று தன் அண்ணாவைக் கதை சொல்லச் சொல்லும். மணி கதைகள் சொல்வான் — ஆறு வயசுப் பையன் சொன்ன அந்தக் கதைகள் எனக்கும் கூடச் சுவாரசியமாக இருக்கும்.

மாலையில் வெயில் தாழுகிற சமயத்தில், ‘வாக்’ கிளம்புவோம். ரகுவின் வீடு வடக்கு வீதியில் இருந்தது. கிளம்பி மேற்கே போய், மேல வீதியோடு போய், தெற்கு அலங்கம் தாண்டி, சிவகங்கைத் தோட்டம், பெரிய கோயில் தாண்டி, மேம்பாலத்தில் ரெயில் பாதையில் இறங்கி ரெயில் பாதையோடு மேற்கே ஒரு மைல், இரண்டு மைல் நடந்துவிட்டுத் திரும்புவோம். திரும்புகையில் ரெயில் பாதையோடு, ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, ரெயிலடியில் புஸ்தகக் கடையில் ஏதாவது புதுப் புஸ்தகங்களும் புதுப் பத்திரிகைகளும் வாங்கிக் கொண்டு மணிக் கூண்டுத் தாண்டிக் கீழவீதி வழியாக இரவு ஒன்பது ஒன்பதரை மணி சுமாருக்கு வீடு திரும்புவோம்.

இரவு சாப்பாடு, சிறிது நேரம் வாசிப்பு, பேச்சு, தூக்கம்.

இப்படியாக நான் தஞ்சாவூர்ப் போய்ச் சேர்ந்து முதல் ஏழெட்டு நாட்கள் கழிந்துவிட்டன.

ஒன்பதாவது நாள் நான் சொன்னேன். ‘‘ரகு, இன்று வழக்கப் படிப் போகாமல் கீழ வீதியோடு போய் மணிக் கூண்டடியில் காபி சாப்பிட்டுவிட்டு, முதலில் ஸ்டேஷனுக்குப் போய்விட்டு, பிறகு மேம்பாலத்தோடு வல்லம் ரோடில் இரண்டு மூன்று மைல் நடந்துவிட்டு வருவோம்’’ என்றேன்.

பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் வல்லம் ரோடில் வெகுதூரம் நடந்துவிட்டு வந்திருப்பதாக ஞாபகம் எனகககு. பள்ளிக்கூடத்தில் படிக்கிற நாட்களிலும் சரி, இன்றும் சரி, எனக்கு நண்பர்கள் அதிகம் இல்லை. நண்பர்கள் இல்லாத குறையைப் போக்கிக் கொள்வதற்காக சாயங்கால வேளையிலும்கூடக் கையில் புஸ்தகத்துடன் — படிக்கிறேனோ இல்லையோ அது வேறு விஷயம்! — வெகுதூரம் தனியாக நடந்துவிட்டு வருவேன். அந்த நாட்களில் அநேகமாக வல்லம் ரோடில்தான் நடப்பேன். தனிமையும் அந்த அமைதியும் திருப்தி தருவதாக இருக்கும். சில நாட்களில் இரவு வெகுநேரம்

ஆகிவிட்டால் மட்டும் அந்த ரோடில் நடப்பதற்குப் பயமாக இருக்கும். ஓட்டமும் நடையுமாகத்தான் பாதி நாள் வீடு திரும்புவேன்.

"போகலாமே!" என்றான் ரகு. ஆனால் அதை அவன் சற்றுத் தயக்கத்துடன்தான் சொன்னான் என்று எனக்குத் தோன்றியது. அந்தச் சமயம் அதைப் பற்றி நினைக்க எனக்குத் தோன்ற வில்லை. அவன் வேறு ஏதோ ஞாபகமாக இருக்கிறான் என்று தான் எண்ணினேன்.

அன்று மாலை சற்று அவசரப்படுத்தினேன் ரகுவை. வாக் கிளம்புவதற்கு. ஆனால் வீட்டை விட்டு வெளியே வந்ததும் ரகு வழக்கம் போலவே மேற்கே திரும்பினான்.

"ஏன் ரகு — இன்று இப்படிப் போகலாமே!" என்றேன் நான்.

"போகலாம்" என்றான் ரகு. ஆனால் இந்தத் தடவையும் அவன் அதைச் சற்றுத் தயக்கத்துடனே தான் சொன்னான்; சற்றுத் தயக்கத்துடனேதான் அவன் கீழ வீதிப் பக்கம் திரும்பினான் என்பதை நான் நினைத்தேன். என்ன காரணம் இருக்க முடியும் அவன் தயக்கத்துக்கு என்றுதான் எனக்குப் புரியவில்லை.

"இப்படிப் போக உனக்கு இஷ்டமில்லையானால் வழக்கப் படியே போவோமே" என்றேன் நான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை; போகலாம்" என்றான் ரகு.

"இல்லாவிட்டால் மேல வீதியோடு தெற்கு அலங்கம் தாண்டி, ஆஸ்பத்திரி ரோடு வழியாக நடந்து மணிக்கூண்டு ரோடுக்குப் போவோம்" என்றேன் நான்.

"எப்படிப் போனால் என்ன?" என்று கூறிக்கொண்டே ரகு நடந்தான்.

நானும் நடந்தேன்.

பேசுவதற்கு விஷயம் இருந்தது. அன்று பகலில் சரஸ்வதி மஹாலில் பார்த்த ஒரு சித்திரப் புஸ்தகத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே நடந்தோம். ஐதிகப் படங்கள் என்கிற பெயரிலே பெருமை கொண்டு, கலையே அழிந்துவிட்டது என்பதற்கு அந்தச் சித்திரப் புஸ்தகமே ஓர் உதாரணம் என்பது என் கட்சி.

ஐதிகப் படங்கள் என்பதனாலேயே நன்றாக இல்லை என்று ஏற்பட்டுவிடாது; நன்றாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவற்றில் உள்ள ஐதிக அம்சமே முக்கிய அம்சம்; அதைப் பாராட்டத்தான் வேண்டும் என்பது ரகுவின் கட்சி.

''சைத்ரிகன் ஒரு வரம்புக்கு உட்பட்டு வேலை செய்யச் சம்மதிக்கிறான். எந்தக் கலையுமே கட்டுப்பாடுகளையும் எல்லைகளையும் வகுத்துக் கொண்டுதான் செயல் தொடங்குகிறது. இந்தக் கட்டுப்பாடுகளும் ஐதிகத்தில் நன்கு தெரிகின்றன — இவற்றிற்குத் தனி அழகும் சிறப்பான அர்த்தங்களும் உண்டு'' என்றான் ரகு.

''கட்டுப்பாடு, எல்லை என்பதிலே அழகு இருக்கிறது. நானும் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் ஒவ்வொரு கலைஞனும் தனக்குத் தேவையான எல்லைகளையும் கட்டுப்பாடுகளையும் தானே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவன் கலை, உயிரும் உருவமும் ஒளியும் பெற்று விளங்கும்'' என்றேன் நான்.

''நீ சொல்லுகிறபடி செய்ய ஒவ்வொரு கலைஞனுமே அபார மேதையாக இருக்கவேண்டும் என்று ஏற்பட்டுவிடும். சாதாரணக் கலைஞரிடையே அந்த அம்சம் எவ்வளவு உண்டு என்பது நமக்குத் தெரியாதா? கலைஞர்கள் என்று சொல்லிக் கொண்டு முன் வருபவர்களிலே எத்தனை பேர் மேதைகள் என்று நமக்குத் தெரியாதா?'' என்று கூறி நகைத்தான் ரகு.

நான் சொன்னேன்: ''மேதைமை எல்லோர்க்கும் இராது; இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. இருந்தாலும் ஆபத்து தான்''

''கலையின் ஓர் ஆபத்தான, இக்கட்டான நிலையை உணர்ந்தே ஐதிகங்கள் என்று சொல்லிக் கட்டுப்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்'' என்றான் ரகு.

''அப்படிச் சொல்வதானால், ஐதிகம் என்கிற அம்சத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது; அதாவது கலையின் உத்திகள் தெரிந்தவன் மேதையற்றவன். அவன் ஐதிகத்துக்குக் கட்டுப்பட்டு கலை செய்யலாம். அவனால், கலைக்கு ஏற்பட்டுள்ள ஐதிகங்களை மீறிக் கலை செய்யமுடியாது

— செய்தாலும் கலையில் உயிர் அதிகம் இராது. ஐதிகத்துக்கு அப்பாற்பட்டு அது கலையாகாது. சரி.''

ரகு குறுக்கிட்டான்: ''அதுமட்டும் அல்ல, பழகிப் பழகி இன்னதென்றால், இன்னதுதான் என்று அர்த்தம் தருகிற மாதிரி ஐதிகங்கள் ஏற்பட்டிருப்பதை, மிகவும் கவிதை நிரம்பிய, அழகான விஷயம் என்று நான் சொல்லுகிறேன்.''

அவன் சொன்னதைச் சிந்தித்துக்கொண்டே மௌனமாக நடந்தேன் நான். கீழ வீதியும் தெற்கு வீதியும் சேருகிற இடம் தாண்டி, மாமா சாஹேப் மூலையைத் தாண்டிக் கொண்டிருக்கும் போது, ரகு மேலும் தொடர்ந்து சொன்னான்: ''உதாரணமாக வார்த்தைகளை எடுத்துக் கொள்வோம். வார்த்தைகளிலே ஐதிகம் தான் ஆட்சி செலுத்துகிறது. 'ஐதிகமே வேண்டாம். நான் கலைஞன்' என்று சொல்லிக்கொள்கிற சிலர், 'வார்த்தைகளின் கொடுங்கோல் ஒழிவதற்காக, இரண்டு என்றால் மூன்று என்றும், கறுப்பு என்றால் சிவப்பு என்றும், சூரியன் என்றால் சந்திரன் என்றும் சந்தேகங்களை மாற்றித்தான் அர்த்தம் சொல்வானேன்; அப்படித் தான் வார்த்தைகளை உபயோகிப்பேன் என்று சொன்னால், அதற்கு அர்த்தம் உண்டா? இப்படிச் சொல்கிறவர்களைக் கலைஞர்கள் என்று உலகம் மதிப்பதில்லை — பைத்தியக்காரர்கள் என்றுதான் சொல்லும்.''

''சைனாவிலே கவிகளைப் பைத்தியக்காரர்கள் என்று சொல்லுகிற ஐதிகம் இன்றும் இருக்கிறதாம்'' என்றேன் நான் சிரித்துக்கொண்டே.

'நம் ஊரிலும்தான் இருக்கிறது. கவிகளை மட்டும் என்ன? மஹான்களையும் பைத்தியக்காரர்கள் என்று செல்லப் பெயரிட்டுப் போற்றுகிற வழக்கம் நமக்கும் உண்டு. அதையும் ஒரு ஐதிகம் ஆக்கிவிட்டதனால் தான் அழகாகவும் இருக்கிறது தவிரவும்...' என்று வேறு ஏதோ புதிதாகச் சொல்லத் தொடங்கியவன் சட்டென்று நிறுத்திவிட்டு, மௌனமானான்.

நானும் நிமிர்ந்து பார்த்தேன். முதலில் அவனையும் பிறகு எதிரேயும் மணிக்கூண்டண்டையில் வந்து சேர்ந்துவிட்டோம். மணிக்கூண்டுக் கடிகாரம் மணி ஐந்து முப்பத்தைந்து என்று காட்டியது.

ரகு சற்றுப் பதட்டத்துடன் சொன்னான்: ‘‘வேகமாக வா, மணி; எதிரே அதோ வந்து கொண்டிருக்கிற மனிதன் கண்ணில் படாமல் ஆஸ்பத்திரி ரோடில் திரும்பிவிடுவோம்’’ என்றான்.

ஆச்சரியத்துடன் நான் ரகுவை நிமிர்ந்து பார்த்தேன். யாரோ ஒரு மனிதனைச் சந்திப்பதற்கு ரகு — என் நண்பன் ரகு — தயங்கினான் என்பது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது. வேறு யாராவது ரகுவைப்பற்றி இப்படிச் சொல்லியிருந்தால் நான் இதை நம்பியிருக்க மாட்டேன். எக் காரணம் கொண்டும் அப்படித் தயங்குகிற சுபாவம் படைத்தவன் அல்ல ரகு என்று தான் நான் நினைத்திருந்தேன்.

‘‘யாரப்பா அது, அப்படி நீ சந்திக்க விரும்பாத மனிதன்?’’ என்று ரகுவைப் பாதிக் கேலியாகக் கேட்டுக்கொண்டே எதிரில் பார்த்தேன்.

தெருவிலே அந்தச் சமயத்தில் சற்று அதிகமாகவே ஜன நடமாட்டம் இருந்தது. ஆனால் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தவர்களுள் ஒரு நாலைந்து பேர்வழிகள் தான் முப்பது நாற்பது கஜ தூரத்திற்குள் இருந்தார்கள், அந்த நாலைந்து பேர்வழிகளில் யாரை ரகு சந்திக்காது தப்ப விரும்பினான் என்று அனுமானிக்க முடியாதவனாக, சிந்தித்தவனாக நான் ரகுவைப் பார்த்தேன்.

ரகு சொன்னான்: ‘‘கையில் வாக்கிங் ஸ்டிக்குடன் ஜரிகை அங்கவஸ்திரம் தோளில் துவள, நரைத்த மீசையுடன் உயரமாக, கால் எட்டிப் போட்டு நடந்து வருகிறாரே, அவரைப் பார்க்க நான் இச்சமயம் விரும்பவில்லை.’’

நிமிர்ந்து ரகு சொன்ன ஆசாமியைப் பார்த்தேன். நல்ல உயரம்; முகத்தில் நல்ல களை; நடை, உடை, பாவனைகளில் அவர் பெரிய மனிதர் மாதிரித்தான் இருந்தார். சற்றுக் கம்பீர மாகவே இருந்தார்.

ஆஸ்பத்திரி ரோடில் திரும்பிக்கொண்டே நான் ரகுவைப் பார்த்துச் சிரித்தேன். ‘‘எத்தனை நாளாகப் பெரிய மனுஷ்யாளுடைய விரோதத்தை எல்லாம் சம்பாதிக்கத் தலைப்பட்டிருக்கிறாயப்பா நீ?’’ என்று நான் கேட்டேன்.

‘‘பெரிய மனுஷ்யனா? யாரு? அவனா!’’ என்று கேட்டான் ரகு. அவன் குரலில் தொனித்த கசப்பும் வெறுப்பும் எனக்குத் திகைப்பூட்டியது. நான் பதில் சொல்ல வில்லை. ரகுவே இரண்டு நிமிஷம் கழித்துச் சொன்னான்: ‘‘நீ சொல்றதும் ஒரு

விதத்தில் சரிதான்! அவனைப் பார்த்தால் பெரிய மனிதன் மாதிரித்தானே இருக்கிறது. ஆனால் உண்மையில் அவன் பெரிய மனிதன் அல்ல; மாஜி பெரிய மனிதன் என்று வேண்டுமானால் சொல்லலாம். பெரிய மனிதன் வீட்டில் பிறந்து, வளர்ந்து, சிறுமைகள் எல்லாம் அடைந்துவிட்டவன் என்று வேண்டுமானால் சொல்லலாம்'' என்றான்.

ஆஸ்பத்திரி ரோடில் திரும்பி, சற்று வேகமாகவே இருபது முப்பது கஜம் நடந்த பிறகு, ரகுவே மீண்டும் பேசத் தொடங்கினான். ‘‘நல்லவேளை! சமயத்தில் நிமிர்ந்து பார்த்தேன் நான்! அவனைச் சந்திக்க நான் விரும்பவில்லை. அவன் என்னைப் பார்த்திருந்தானானால் கூப்பிட்டு, நிறுத்தி, வம்பளந்து விட்டு இன்றைய பீருக்குக் காசு வாங்கிக்கொண்டு போயிருப்பான்'' என்றான் ரகு.

கேவலம் சில்லறைக்குப் பயந்துவிடுகிற மனிதன் அல்ல ரகு என்பது எனக்குத் தெரியும். இந்தக் கசப்புக்கும் வெறுப்புக்கும் வேறு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றியது. அந்தரங்கத்தில் வேறு என்ன இருந்ததோ?

‘‘அவன் பெயர் என்ன?'' என்று கேட்டேன் நான்.

‘‘மம்மேலியார் என்று பெயர்; சதாசிவ மமம்மேலியார்'' என்றான் ரகு.

‘‘மம்மேலியாரா? அது என்ன பெயரப்பா அது?'' என்று நான் கேட்டேன்.

ரகு சற்றுத் தயங்கிவிட்டுச் சொன்னான். ‘‘இப்போது என்னை ஒன்றும் கேட்காதே! சொல்லக்கூடிய மன நிலையில் இல்லை. நான் சவாசிவ மம்மேலியாரைப் பற்றிப் பிறகு ஒரு நாள் விவரமாகச் சொல்லுகிறேன்'' என்றான்.

கலையில் ஐதிகம் என்பது பற்றிய பேச்சும் அறுந்து விட்டது. இருவரும் மௌனமாகவே நடந்தோம். இடை இடையே பேசிய பேச்சுக்களும் ரசிக்கவில்லை. அன்று நாங்கள் வல்லம் ரோடில் ‘வாக்' போகவும் இல்லை. வழக்கம்போல் ரெயில் பாதை யோடி, அப்ரஹாம் பண்டிதர் தோட்டத்து எல்லைவரை நடந்து விட்டுத் திரும்பினோம்.

# 2

அதற்குப் பிறகு சதாசிவ மம்மேலியாரைப் பற்றி நானாகப் பேச்சு எதுவும் எடுக்கவில்லை. ரகுவின் மனத்துக்கு எந்தக் காரணத்தினாலோ பிடிக்காத விஷயம் அது என்கிற தீர்மானத்துக்கு வந்தவனாக, அவனாகச் சொல்லட்டும், தானே பின்னர் சொல்லுவான் என்றிருந்தேன்.

மறுநாள் பொழுதும் வழக்கம் போலவே கழிந்தது. மறுநாள் மாலையில் ‘வாக்’ கிளம்புகிறபோது ரகு தானாகவே கீழ வீதிப் பக்கம் திரும்பினான். நான் எதுவும் சொல்லாமலே அவனைப் பின்பற்றினேன். மணிக் கூண்டண்டை போகும்போது மணி ஐந்தடிக்கவில்லை. அவ்வளவு சீக்கிரம் மம்மேலியார் வெளியே கிளம்புகிற வழக்கம் இல்லை போலும். அவர் அன்று அந்தப் பக்கத்தில் எங்கள் கண்ணில் தட்டுப்படவில்லை.

அதற்கு மறுநாள் காலையில், காபி பலகாரம் ஆன பிறகு, நீங்கள் சரஸ்வதி மஹாலுக்குப் புஸ்தகம் பார்க்கக் கிளம்பினோம். தற்செயலாகவே அன்று பேச்சு மீண்டும் மரபு. ஐதிகம் என்கிற விஷயங்கள் பற்றித்தான் நடந்து கொண்டிருந்தது.

வடக்கு வீதியிலிருந்து ஐயன் கடைத் தெருவுக்குள் திரும்புகிற சமயம் ரகு சொன்னான்: “முந்தாநாள் நீ சொன்னாயே! சைனாவிலே கவிகளைப் பைத்தியக்காரர்கள் என்று கூறுவது ஐதிகமாயிருக்கிறது என்று...”

“ஆமாம். கவி மரபே அப்படித்தானே! ஷேக்ஸ்பியர் சொல்லவில்லையா? பைத்தியக்காரனும் கவியும் காதலனும் என்று” என்றேன் நான்.

ரகு சொன்னான்: “அது எவ்வளவு அழகான ஐதிகம் பார். அதே போல நம் பேச்சிலும் நடையிலும் தினசரிப் பழக்க வழக்கங்களிலும் எவ்வளவோ கணக்கற்ற கவிதை ததும்பும் ஐதிகங்கள் நிறைந்திருக்கின்றன.”

“நான் மட்டும் ஒப்புக் கொள்ளவில்லையா அதை? ஒப்புக் கொள்கிறேன்” என்றேன். “ஆனால் கவிதையை மறந்துவிட்டு ஐதிகங்களை மட்டும்

கைக்கொண்டுள்ளவர்களைப் பற்றி என்ன சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை''

''ஒரு சமயம் ஒருவன் — அவனும் சீனாக்காரன் என்று தான் எனக்கு ஞாபகம் — சொன்னதாக எங்கேயோ படித் திருக்கிறேன். ஆட்டுக் குட்டியை ஒரு சடங்கில் பலியாகக் கொல்வதைத் தடுப்பதற்காகப் புத்தர் சிஷ்யர்களில் ஒருவன் வந்தபோது அவனைக் கேட்டானாம் சீனாக்காரன்: 'இந்த ஆட்டுக் குட்டியின் உயிர் உனக்கு முக்கியமாகத் தோன்றுகிறது — ஆனால் எனக்கோ இந்தச் சடங்கு — தலைமுறைத் தத்துவமாக வந்துவிட்ட இந்தச் சடங்கு — அழகானதாகவும் முக்கியமானதாகவும் தோன்றுகிறதே! என்ன செய்வது என்று' கேட்டானாம்'' என்றான் ரகு.

ரகு, தான் எப்பொழுதோ படித்ததை இவ்வளவுதூரம் ஞாபகம் வைத்துக்கொண்டு சொன்னது எனக்கும் கூட ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக ரகுவுக்குப் படிப்பிருந்த அளவுக்குப் புஸ்தக ஞாபகம் இல்லை என்பது எனக்குத் தெரியும். நான் சொன்னேன்: ''ஏதேது? ரகு கூடப் பெரிய பண்டிதன் ஆகி விடுவான் போல் இருக்கிறதே! படித்ததை எல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டானே!'' என்றேன். மேலும் தொடர்ந்து கேட்டேன்: ''அப்படிச் சொன்னது யார் தெரியுமா? சீனாவின் இன்றைய வாழ்க்கைக்கும் அடிப் படையான தத்துவமாக விளங்குகிற கொள்கைகளை ஸ்தாபித்துத் தந்த சீன குரு கங்கின் சிஷ்யன்தான் இப்படிச் சொன்னவன்''

ரகு சொன்னான். ''எனக்குப் பெயர் மறந்துவிட்டது. ஆனால் அவன் சொன்ன விஷயம் மட்டும் ஞாபகம் இருக்கிறது. பலி, சடங்கு என்பதற்கு ஐதிகத்தாலும் பழக்க வழக்கத்தாலும் ஏற்பட்டு விட்ட அழகு எல்லையே அற்றது...''

நாங்கள் இதற்குள் ஐயன் கடை மார்க்கெட்டிற்குள் புகுந்து விட்டோம். மார்க்கட்டில் நல்ல கூட்டம். காலை வேளை அல்லவா? தவிரவும் தினமும் காலையில் நேரில் போய்க் காய்கறிகள் வாங்குவது என்பதை அழகான ஒரு ஐதிகமாகப் பயிற்சி செய்து கொண்டிருப்பவர்கள் தஞ்சாவூரிலே இன்னும் அநேகர் இருக்கிறார்கள். குடித்தனக்காரரின் மறுக்கமுடியாத, அதி அவசியமான உரிமை, தருமம் என்பதை உணர்ந்து அநுசரித்து நடப்பவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் அந்தச் சமயத்தில் புகுந்து

புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று நாங்கள் நினைத்ததே பிசகுதான் — தவிர அந்த இடத்திலே வந்து, சுவாரசியமான ஓர் இலக்கிய தத்துவ விசாரம் அதன் உச்சியை எட்ட வேண்டியிருந்தது என்பது மிகவும் தவறான காரியம்தானே!

மார்க்கெட்டில் புகுந்து புறப்பட்டு, கூட்டத்தின் ஓரத்தை எட்டும் வரையில் ரகுவும் நானும் பேசவில்லை — பேச முடியவில்லை — பேசியிருந்தாலும் அது தகுந்த மாதிரியில் பலன் அளித்திராது என்பது நிச்சயம். இலக்கிய, தத்துவ விசாரத்தை விட அதிமுக்கியமான தினசரி வாழ்வுக்கு அதி அவசியமான, தவிர்க்கமுடியாத கத்திரிக்காய் வாங்கும் பேரத்தில் மனமும் காயமும் லயித்தவர்களாக அங்கே நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். எங்களுடைய முடிவற்ற தத்துவ விசாரத்துக்கு அவர்கள் ஒரே முடிவு — 'சொத்தைக் கத்திரிக்காய் வீசை இரண்டனாவாமே!' என்று கூறி, அலட்சியமாக முடிப்பதுதான்.

மார்க்கெட் கூட்டத்தின் கீழண்டை எல்லையை எட்டியதும் ரகு சொன்னான்: "நமது இன்றைய நாகரிகத்தின் சிறந்த சின்னமாகக் கையில் சாக்குப் பையை எடுத்துக் கொண்டு, காலையில், சில்லறையுடன், 'இன்று நாலணாவுக்குக் கறிகாய் வாங்கிவிடுவது' என்று கிளம்புகிறவனைத்தான் சொல்லவேண்டும். அவசர அவசரமாகத் துண்டை விசிறித் தோளில் போட்டுக் கொண்டு, போர்க்கோலம் பூண்ட மகாவீரனைப் போலக் கிளம்பி, கால்மணி நேரத்தில் மார்க்கெட் காரியங்களை முடித்துக் கொண்டு திரும்புவது என்று கிளம்பி, முக்கால் மணி நேரத்தில் வீட்டுக்கு வருபவன் ஒரு ஜாதி. நிதானமாகக் கிளம்பி, அவசரமே படாமல் தெருவில் எதிர்ப்படுபவர்களுடனெல்லாம் பேசிவிட்டு, வழியில் ஒரு காபி ஹோட்டலில் புகுந்து இரண்டு இட்டிலி சாம்பார், ஒரு வடை சட்னி, ஒரு கப் காபி — சர்க்கரை டிகாக்ஷன் ஜாஸ்தி — சாப்பிட்டுவிட்டு இதில் ஒரு ஹோட்டலில் இட்டிலியும் வேறு ஒரு ஹோட்டலில் காபியும் சாப்பிடுபவர்கள் தனி ரகம்; சாவகாசமாக மார்க்கெட்டிலிருந்து வீடு திரும்பி, 'மார்க் கெட்டிலிருந்நது இப்பத்தானே வந்தேன்' என்று சஹதர்மிணி ஞாபகப்படுத்துகிற வரையிலும், 'சமையல் இன்னும் ஆக வில்லையே! ஆபீஸுக்கு நேரமாகிவிட்டதே!' என்று கோபித்துக் கொள்ளுகிற ஜாதி ஒன்று. மார்க்கெட்டுக்குத்தான் போனாலும் பிறர் தன் மேல் படாமல் இருக்க வேண்டுமென்று அவஸ்தைப் பட்டு ஒதுங்கி ஒதுங்கிச் செல்ல முயலும் ஜாதி

ஒன்று. ‘மார்க்கெட்டுக்குப் போய்விட்டு வந்தால் நான் ஸ்நானம் செய்யாமல் இருந்துவிட மாட்டேன்’ என்று சொல்லுகிற ஜாதி ஒன்று. மார்க்கெட்டில் இருக்கிற எல்லோர் மேலும் ஓர் இடி இடித்துவிட்டுத் தான் வரவேண்டும் என்று தீர்மானமாகக் கிளம்பிச் செயலாற்றுகிற ஜாதி ஒன்று. காலணாவுக்கு வாங்க நாலு கடை பார்க்கிற ஜாதி ஒன்று. எது கேட்டாலும், ‘இவ்வளவு தானே!’ என்று காசை விசிறுகிற ஜாதி ஒன்று...’’

ரகுவினுடைய ஜாதிப் பிரசங்கம் சீக்கிரம் முடிவடைவதாகக் காணோம். நான் சிரித்துக் கொண்டே குறுக்கிட்டேன். “எல்லா வற்றிற்கும் மேலாக இன்னொரு ரகம் — ஜாதியும் உண்டு. மார்க்கெட்டில் தன்னைத் தவிர வேறு யாருக்கும் எதுவும் சரியாக வாங்கத் தெரியாது என்று நினைக்கிற ஜாதி அது. எங்கப்பா அப்படித்தான். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தஞ்சாவூரிலிருந்த நாட்களில் எங்கப்பா பிரமாதமாகக் காய்கறி வாங்குகிற தத்துவத்தை எல்லாம் பற்றிப் பேசிக்கொண்டே மார்க்கெட்டுக்குப் போய்க் காய்கறி வாங்கி வருவார். ‘உங்களுக் கென்று இந்தச் சொத்தை காயை எல்லாம் நாலு நாளாகச் சேர்த்து வைத்திருந்து கொடுத்திருக்கானே கடைக்காரன்; அந்தக் கடைக் காரன் கெட்டிக்காரன்தான்’ என்று அம்மா அந்தக் கடைக் காரனின் சாமர்த்தியத்தைப் புகழ்வாள். அப்பாவுக்குக் கோபம் கோபமாக வரும்’’

என் பேச்சுச் சுவாரசியம் எனக்கு. சற்று அஜாக்கிரதையாக நடந்ததில் அரண்மனை வடக்குக் கோபுர வாசற்படியிலே கால் தடுக்கிவிட்டது. நல்ல வேளையாக நகம் பெயர்ந்து விட வில்லை; வலித்தது. பேச்சை நிறுத்தி விட்டு, “அப்பாடா!’’ என்றேன்.

ரகு சொன்னான்: “பெரிய பெரிய விஷயங்களை, ஆகாயத்தை எட்டுகிற விஷயத்தைத்தான் பேசுகிறோம். வாய் ஓயாமல் ஆனால் எவ்வளவு பெரிய அரண்மனை வாசற்படிதான் என்றாலும் அதிலும் கால் தடுக்காமல் நடக்கத் தெரிவதில்லை நமக்கு’’

கால் வலித்ததுதான் காரணமோ என்னவோ, எனக்கு ஒரு நிமிஷம் அவனிடம் கோபமே வந்துவிடும் போல் இருந்தது. கோபத்தைச் சற்று சிரமப்பட்டுத்தான் அடக்கிக் கொண்டேன். மறு விநாடி சிரித்தேன். ரகுவும் என்னுடன் சிரித்தான்.

நான் சொன்னேன்: ‘‘வாசற்படிகள் என்கிற ஐதிகங்களை நாம் மறந்துவிடாமல் இருப்பதற்காகத்தான் நாம் அடிக்கடி அவற்றில் தடுக்கிக்கொண்டு, கால் விரல் நோக, ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. கால் நகம் பெயர்ந்துவிடாமலும் ஆளே கீழே சாய்ந்துவிடாமலும் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும்’’

‘‘ஆமாம் வாசற்படிகள்....’’ என்று ஏதோ தத்துவ விசாரத்தைத் தொடரத் தொடங்கினான் ரகு.

எனக்கு என்னவோ அச்சமயம் ரகுவின் தத்துவ விசாரம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. ‘‘போதுமே இந்தப் பேச்செல்லாம்’’ என்றேன் நான்.

ரகு சிரித்தான்.

நான் தொடர்ந்து சொன்னேன்: ‘‘ஐதிகத்துக்கெல்லாம் சப்பைக்கட்டுக் கட்டிக் கொண்டு வருகிற உன் காலில் பட்டிருக்க வேண்டும்; அப்பொழுது தெரியும்.’’

‘‘ஏன்? நன்றாகப் பட்டுவிட்டதோ? ஐயோ பாவம்!’’ என்றான் ரகு.

வடக்கு வாசலுக்கு அப்பாலுள்ள திறந்த சதுரத்தைத் தாண்டி அரண்மனை வாசலை அடைந்தோம். அங்கு முன் ஒரு காலத்தில், தஞ்சையில் மன்னர்கள் ஆண்ட காலத்தில், எத்தனை வீரர்கள் எப்படிக் காவல் காத்து நின்றார்களோ! எத்தனை கவிகளும் இலக்கிய ஆசிரியர்களும் சிலேடைப் புலிகளும் மஹா பண்டிதர்களும் மஹா பண்டிதர்களின் மிகச் சின்ன மனது படைத்த பெரியவர்களாக எண்ணிக் கொள்கிற சிறிய குஞ்சுகளும் எத்தனை நாள் பட்டினியாக எவ்வளவு நம்பிக்கையுடன் அந்த விசாலமான முன் திண்ணையில், அந்த உயரமான தூண்களில் சாய்ந்து கிடந்தார்களோ! எத்தனை பிரபுக்களும் சீமான்களும் ராஜ பேட்டி காண வந்து காத்திருந்தார்களோ! வாசனைகள் வீச, சேவகர்கள் கட்டியங் கூற, காத்திருந்த மற்றச் சின்ன மனிதர்களைக் கண்டும் காணததுபோல் இருக்கப் பழகியவர்களாக, எப்படி எப்படி நின்றார்களோ! எத்தனை யானைகள், குதிரைகள், போர் வீரர்கள், ரதங்கள்... தஞ்சாவூரிலே அரசர்கள் அரசர்களாக ஆண்ட நாட்களிலே எவ்வளவு கலகலப்பும் உயிரும் ஏக்கமும் நிராசையும் நம்பிக்கையும் அவ்விசாலமான வாசலிலே ஊசலாடினவோ!

பின்னால் ஏதோ ஜனத்திரளும் குதிரைகளும் யானைகளும் வருவதுபோல் ஒரு நினைப்பு ஏற்பட்டது எனக்கு; ஒரு பிரமிப்புத் தட்டியது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன் நான். அலங் காரமாகப் பரந்து, ஓங்கி வளர்ந்திருந்த நெட்டிலிங்க மரங்களின் இலைகளினூடே காலைக் காற்றுப் புகுந்து விளையாடிச் சல சலப்புச் சத்தம் செய்து கொண்டிருந்தது. வேறு ஒன்றுமில்லை.

பெரிய பெரிய தூண்கள் தாங்க, பெயர்ந்து விழுந்துவிட்ட வர்ணம் பூசிய மேல் தளத்துடன், மண் படிந்து புல் முளைத் திருந்த கீழ்த் தளத்துடன் காட்சி அளித்தது வெளி மண்டபம். அதிலே ஓர் ஓரத்தில் நாலைந்து பிச்சைக்காரக் குடும்பங்கள், கரியேறிய பானைகள், கிழிந்த பாய்கள் சகிதம் குடியேறி இருந்தார்கள். ஒரு பெரிய தூணின் மேல் சாய்ந்துகொண்டு, காலை நீட்டிக் கொண்டு, சிவப்புக் குல்லாயைக் கீழே பக்கத்தில் எடுத்துவைத்துவிட்டு, நரைத்த தலை மயிரை இரண்டு கைகளாலும் சுவாரசியமாகச் சொறிந்துகொண்டு உட்கார்ந் திருந்தான் போலீஸ்காரன் ஒருவன்.

இது இன்றையத் தஞ்சை; பிரிட்டிஷார் தஞ்சை. மராட்டியர் தஞ்சையும் அல்ல; நாயக்கர் தஞ்சையும் அல்ல; அதற்கும் பழமையான சோழர் தஞ்சையும் அல்ல.

அந்த நிமிஷத்தில் எனக்கும் தோன்றியது: ஐதிகங்கள் என்பவை அவசியம் மனிதனுக்குத் தேவை தான் என்று. ஐதிகங்கள் பலவற்றிற்கு ஒரே உருவத்தைக் கொண்டு, அதன் பின் ஒன்றன்பின் ஒன்றாகப் பல பல உருவங்களைக் காட்டும் சக்தியும் ஏற்பட்டு விடுகிறது. மனிதனுடைய மனம் உருவத்தைப் பற்றிக்கொள்வது போல், ஒரு கொள்கையோ தத்துவத்தையோ மட்டும் பற்றிக்கொள்ளத் தீர்மானமாக மறுக்கிறது. வார்த்தை களுக்கு உள்ள மந்திர சக்தி ஓரளவு இந்த ஐதிக உருவகச் சக்தியைப் பொறுத்ததே என்று தோன்றியது அச்சமயம் எனக்கு.

மன்னன் என்கிற ஒரு வார்த்தையை எடுத்துக் கொள்ளலாமே! மன்னன் என்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தம் அகராதியில் இருக்கிறது என்பது நமக்கு எல்லோருக்குமே தெரியும். ஆனால் மன்னன் என்கிற வார்த்தையின் முழு அர்த்தத்தையும் அகராதியில் உள்ள வார்த்தைகள் பூராவும் சேர்ந்து உழைத்தாலும் கூடச் சொல்லி மாளாது. வார்த்தைகளுக்கு அகப்படாத ஒரு

தத்துவத்தை, ஓர் உருவகத்தை மன்னன் என்கிற வார்த்தை நமக்குத் தந்து விடுகிறது. மன்னன் என்றவுடனேயே, நாம் நமக்கு எட்டுகிற வரையில் அவரவர்களுக்குச் சுயமாக உள்ள ஒரு கற்பனையுடன், ஒரு மன்னனையே உருவகப்படுத்திக் கொள்கிறோம். இன்றைய நாடக மேடையும் சரித்திர அறிவும் நமது கற்பனைக்கு உதவுகின்றன. அந்த மன்னனை உருவகப்படுத்திக் கொள்ள, அவன் வீற்றிருக்கும் சிம்மாசனம், அவன் ஆளும் நாடு, அவனுடைய தலைநகரம், அவன் கைச் செங்கோல், அவன் மந்திரி பரிவாரங்கள் அவன் நடத்தும் அல்லது நடத்தாமல் இருக்கும் நகர சோதனை, அவனைப் பாடிப் பரிசு பெற்ற கவிகள், அவன் அந்தப்புரமும் அதிலுள்ள வதந்தி வம்புகளும், அவன் குடிபடைகள் — எல்லாமே, வார்த்தைகளில் முழுவதும் அகப்பட்டுவிடாத ஓர் அளவுக்கு நமக்குத் தெளிவாக ஞாபகம் வருகின்றன; நம் கண்முன் தோன்றுகின்றன.

வெற்றிகரமான இலக்கியம் என்று சொல்லப்படுவதன் ரகசியமே இதுதான் என்கிற முடிவுக்கு நான் வருவதற்கும் ரகு மீண்டும் பேசத் தொடங்குவதற்கும் சரியாக இருந்தது.

அப்போது நாங்கள் முதல் வாசலைத் தாண்டி இரண்டாவது உள் வாசலைத் தாண்டிக்கொண்டிருந்தோம். அந்த வாசலில், இரு புறத்துச் சுவர்களிலும் நான்கு சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன. நிரம்பப் பழைய காலத்தவை அவை; வெகு சமீப காலத்தவையும் அல்ல. சுமார் நூற்றைம்பது அல்லது இருநூறு வருஷங்களுக்கு முன் தீட்டப்பட்டவையாக இருக்கலாம். ஒரு மன்னன், தன் பரிவாரங்களுடன் குதிரையேறி நகர் சுற்றி வருவதுபோல் நாலு காட்சிகள். மராட்டியத் தலைப்பாகையுடன் முகத்தில் பாவமே இல்லாத அந்த மன்னனின் உருவம் இன்னமும் என் கண்முன் நிற்கிறது என்றுதான் சொல்லவேண்டும். வெள்ளைச் சுவரில் சிவப்பு வர்ணம் தூக்கலாக, எடுப்பாக இருந்தது. மற்ற வர்ணங்கள் — வேறு என்ன இருந்தனவோ, ஞாபகமில்லை: என் கண்ணில் பட்ட மாதிரியே இல்லை.

ரகு சொன்னான்: “இந்தப் படங்களில் எவ்விதமான தனி மேதையும் இல்லை. ஆனால் இவற்றில் குதிரைகள் ஓடுகிற பாவம் தெரிகிறது; மனிதர்கள் கம்பீரமாகப் பவனி வருகிற பாவம் தெரிகிறது. மட்டரகமான, அதிக

மேதையற்ற கலைஞர்களுக்கு கலை ஐதிகங்கள் அளித்துவிட்ட பரிசு இந்த வெற்றி'' என்றான் ரகு.

நான் பதில் சொல்லவில்லை.

ரகு நிமிர்ந்து பார்த்து, நின்று, சொன்னான்: ''அரண்மனை ஸ்திரீகள், சூரியனோ காற்றோ தங்கள்மேல் நேரில் படக்கூடாது என்று கோஷர்களாக வசித்த தர்ம பத்தினிகள், தங்கள் நாயகர்கள் குதிரை ஏறி பவனி வர வெளியே கிளம்பும்போது மேலே அதோ தெரிகிற அந்தச் சாளரங்களுக்குப் பின்னால் நின்று பார்ப்பார்களாம்''

நானும் நிமிர்ந்து பார்த்தேன். சல்லடைகளாகத் துளைத்த சாளரங்கள் தெரிந்தன; அவற்றிற்குப் பின்னால் இருப்பவர்கள் வெளியே பார்க்கலாம். வெளியே இருப்பவன் சாளரத்துக்குப் பின்னால் இருந்தது யார் என்று அனுமானிக்கக் கூட முடியாது. ''அந்தத் தர்ம பத்தினிகள் தங்கள் நாயன்மார்களைத்தான் பார்த்தார்களோ அல்லது ஆசைக் கண்களுடன் தங்கள் கள்ளக் காதலர்களைத் தான் பார்த்தார்களோ அந்தச் சாளரங்களின் வழியாக — யார் நிச்சயமாகச் சொல்ல முடியும்?'' என்றேன் நான்.

''தங்கள் சொந்த நாயகர்களைத்தான் பார்த்தார்கள் என்று வைத்துக் கொள்ளலாமே? அதில் நமக்கென்ன நஷ்டம்!'' என்றான் ரகு.

''ஆட்சேபம் இல்லை. அப்படியேத்தான் வைத்துக் கொள்ளலாமே!'' என்றேன் நான். மேலே நடக்குமுன் நான் சொன்னேன்: ''தஞ்சாவூர் மன்னர்களிலே கடைசியாக ஆண்டு, பிரிட்டிஷார் கையில் நகரையும் ராஜ்யத்தையும் ஒப்படைத்து விட்டுப் போன சிவாஜி ராஜாவைப்பற்றி நான் எங்கேயோ படித்த ஒரு வாக்கியம் எனக்கு இச்சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகிறது!'' என்றேன்.

''என்ன வாக்கியம் அது?''

''சிவாஜி ராஜாவுக்கு மனைவிகள் நூற்று நாற்பத்தெட்டுப் பேர்; குழந்தைகள் இல்லை என்று ஏதோ ஒரு சரித்திர புஸ்தகத்தில் படித்திருக்கிறேன்'' என்றேன் நான்.

ரகு சொன்னான்: ''ஒரு கம்பீரமான, கௌரவமான, சரித்திரப் பிரசித்தமான ராஜ குடும்பத்துக்கு முற்றுப் புள்ளி வைத்த ஓர் உண்மை அது. கிரேக்க

நாடகங்களில் சிறந்தவற்றிற்கிடையே இடம் பெற வேண்டியது அந்த வாக்கியம்!”

“ஒரு சரித்திராசிரியன் சோக சிகரமான அந்த வாக்கியத்தை லேசாக ஒரு தட்டுத் தட்டிவிட்டான் அசப்பிலே, கேலியாக” என்றேன் நான்.

இப்படிப் பேசிக் கொண்டே நடந்து, நாங்கள் இருவரும் இரண்டாவது வாசற்படியையும் தாண்டித் திறந்த முற்றத்தை அடைந்தோம். அந்த முற்றத்திலிருந்து அப்பாற் போக மூன்று வாசல்கள் உண்டு. ஒன்று சபா மண்டபம் போக வழி: அதாவது தஞ்சாவூரில் அந்த அரண்மனையில் அரசர்கள் சபை நடத்திய காலத்தில் சபா மண்டபமாக இருந்த இடத்துக்குப் போகும் வாசல். அடுத்துள்ளது, கலா விற்பன்னனாக இருந்த சரபோஜி மகாராஜா சேர்த்து வைத்து, இப்போது சரஸ்வதி மஹால் என்று புகழ்பெற்றுள்ள நூல் நிலையத்துக்குப் போகும் வாசல். மூன்றாவதாக நாங்கள் வந்ததற்கு நேர் எதிராக இருந்த வாசல்: சங்கீத மண்டபத்துக்குப் போகும் வாசல்.

இந்த மூன்று வாசல்கள் வரையிலும் கார்களும் வண்டிகளும் வரலாம்.

நானும் ரகுவும் போன அச்சமயம் சரஸ்வதி மஹாலுக்குப் போகும் வாசலுக்கு எதிரே ஒரு புழுதிபடிந்த பெரிய ஸெடான் கார் நின்று கொண்டிருந்தது.

“தஞ்சாவூர் என்கிற பண்டைப் பெருமை, இப்போது இருக்கிற அழகைப் பார்க்க வெளியூர்க்காரன் யாராவது வந்திருப்பான்” என்றான் ரகு.

“வெளி நாடுகளிலிருந்து வருகிற பல பண்டிதர்களும் கூடச் சரஸ்வதி மஹாலில் படிக்க வருவதுண்டு அல்லவா?” என்றேன் நான்.

“யாரோ அந்நியர்கள், — ஜெர்மானிய சாஸ்திரியர் என்று சொல்லிக் கொள்கிறார்கள் — முன் ஒரு தரம் வந்து சரஸ்வதி மஹால் சுவடி, நூல்களில் முக்கியமானவை பலவற்றை அடித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று பலரும் பல தடவைகள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்” என்றான் ரகு.

இப்படி நாங்கள் பேசிக் கொண்டு, வெளி முற்றத்தைக் கடந்தபோது சபா மண்டபத்துக்குப் போகும் பாதை வழியாக மூவர் வெளியே வந்து அந்தக் கார் அருகே போய் நின்றார்கள். அந்த மூவரில் இருவர் அந்நியர்கள் — ஆங்கிலேயர்கள். ஊர் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு வந்தவர்கள் என்பது

தெரிந்தது பார்க்கும் போதே. அவர்களுடைய முகங்களிலே படர்ந்திருந்த பெருமையும் திருப்தியும் சொல்லும் தரமானதல்ல. இருவரும் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடன் சரி சமானமாக ஆங்கிலம் பேசிக்கொண்டு, சிகரெட்டைப் பிடித்துக் கொண்டு, ஜரிகை அங்கவஸ்திரம் தரித்து, கரு கருவென்ற மீசையுடன், கையில் வாக்கிங் ஸ்டிக் பிடித்தவர் ஒருவர் நின்றார். சற்று உயரமாக, பார்ப்பதற்குக் கண்ணியமாகவும் கௌரவ முள்ளவர் மாதிரியும் அவர் இருந்தார்.

ஏதோ பேசிக்கொண்டு வந்த ரகு சட்டென்று பின்னடைந் தான். அவன் எனக்குப் பின்னால் ஒளிந்துகொள்ள முயல்வது போல் இருந்தது.

ஆனால் சரஸ்வதி மஹாலுக்குப் போக நாங்கள் இருவரும் அங்கு நின்ற காரைத் தாண்டித்தான் போக வேண்டியிருந்தது. வண்டியில் ஏறிக்கொள்ளப் போன வாக்கிங் ஸ்டிக் ஆசாமி ரகுவையும் என்னையும் கண்டதும் சற்றுத் தயங்கினார். பிறகு அவர் ரகுவைப் பார்த்து ‘‘நமஸ்காரம்’’ என்றார்.

‘‘நமஸ்காரம்’’ என்று மெல்லிய குரலில் அவருக்குப் பதில் சொல்லிவிட்டு ரகு மறுபடி கார்ப் பக்கம் திரும்பாமலே அவசரமாக முந்தி நடந்து சரஸ்வதி மஹால் போகும் வாசலுக்குள் புகுந்தான். நானும் அவனுடன் நடந்தேன். பத்துக்கஜ தூரம் தளமிட்ட அந்த வாசலில் நடந்த பிறகு நான் சற்று அவசரப் பட்டவனாகவே, ‘‘யாரப்பா ரகு, அது?’’ என்று கேட்டேன்.

‘‘அவன் தம்பி அங்கதன்’’ என்று சற்று இழுத்தாற் போல் தயக்கத்துடன் பதில் அளித்தான் ரகு.

அவன் அதைச் சொன்ன குரல் எனக்கு ஏனோ சதாசிவ மம்மேலியாரை ஞாபகமூட்டியது. ‘‘யாரு? அந்தச் சதாசிவ மம்மேலியாருடைய தம்பியா?’’ என்று கேட்டேன்.

‘‘ஆமாம், அவனுக்கு ஏற்ற தம்பிதான் இவன்!’’ என்றான் ரகு.

‘‘பீர் ஆசாமிதானோ இவனும்!’’

‘‘அதையும் மிஞ்சிய ஆசாமி இவன்!’’

ஆனால் ரகுவுக்கு மம்மேலியார்களைப் பற்றிப் பேச விருப்ப மில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. ‘சாதாரணமாக எவ்வித ஒளிவு மறைவும் இல்லாமல் பேசிப் பழகக்கூடிய என் நண்பனுக்கு ஏன் இந்தத் தயக்கம்? மம்மேலியார்களைப் பற்றிய மர்மம்தான் என்ன?’ என்று அறிந்து கொள்ள எனக்கு ஆவலாக இருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

நான் நேரே சரஸ்வதி மஹாலுக்குள் போனேன். ரகு என்னுடன் வரவில்லை. “பிறகு வருகிறேன்” என்று போனான். எங்கே போனான் என்று, சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் கவனிக்கவில்லை.

# 3

அன்று சரஸ்வதி மஹாலில் நான் எடுத்துப்படிக்கத் தொடங்கிய புஸ்தகத்தில் அவ்வளவாகக் கவனம் செலுத்திப் படித்தேன் என்று சொல்ல முடியாது. என் மனசில் மம்மேலியார், மம்மேலியார் என்கிற ஒரே வார்த்தைதான் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது. பெயர் ஒரு தினுசாக, புதுசாக, முன்பின் கேட்டிராததாக இருந்தது  என்பதே இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ‘அவர்களைப்பற்றி ஏதோ சுவாரசியமான ரகசியம் இருக்கிறது; அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்,’ என்று என் மனத்தில் தோன்றிய அவாவும் ஆசையும் இதற்குக் காரணமாக இருக்கலாம். எனக்கு எப்பொழுதுமே வழிவிட்டு பிசகி விலகி நிற்கிற பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆசை உண்டு.

தவிரவும் இதுவரை என்னிடமிருந்து எதையுமே ஒளித்து வைத்திராத நண்பன் ரகு இந்த மம்மேலியார்களைப் பற்றி எப்படி என்ன சொல்லுவது என்று அறியாமல் மென்று விழுங்குகிறான் என்பதே என் ஆவலை மேலும் மேலும் தூண்டியது. ‘ஏதோ கல்மஷமான ஒரு விஷயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு அதை வெகுவாக மறைத்து வைக்கப் பாடு படுகிறானே; இது என்ன அதிசயம்; இது அப்படி என்ன அதிரகசியம்’ என்றுதான் எனக்கிருந்தது. நான் அறிந்திருந்த வரையில், ரகு சாதாரண மனிதர்களை விட ஓரளவுக்கு வெறுப்பு விருப்புக்களை மீறியவன் என்று சொல்லலாம். ஓரளவுக்கு வேதாந்த மனப்பான்மையை எட்டியவன் என்றுகூடச் சொல்லலாம். எதிலும் அதிகமாக, அளவுக்கு மீறி ஈடுபட்டு விடமாட்டான். ஈடுபாடு அவனையும் மீறி எதிலாவது ஏற்பட்டாலும்கூட அது தன்னை, தன்னுடைய மற்ற அலுவல்களை, அதிகமாகப் பாதிக்க விட்டுவிடாமல், பார்த்துக்கொள்ளக் கூடிய மனப்பக்குவமும் மனோதிடமும் பெற்றவன். ஆனால் இப்படிப்பட்டவனுடைய வெறுப்பையும் மனக்கசப்பையும் கூடத் தாண்டக்கூடிய அளவுக்கு இந்த மம்மேலியார்கள் அப்படி என்னதான் செய்திருக்கமுடியும் என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நான் சிந்தித்துப் பார்த்தேன். ஆனால் எனக்கு எதுவும்

புரியாததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரிதான் இருந்தது. அதுவும் என் நண்பன் பள்ளிக்கு வருமுன் அவனுடைய வாழ்வும் சூழ்நிலையும் எனக்குச் சரிவரத் தெரியாது; கலாசாலைப் படிப்புக்குப் பிறகுகூட அவனுடைய போக்குகளும் வரவு செலவுகளும் வாழ்க்கை வழிகளும் அவ்வளவாகத் தெரியாது தான்.

தஞ்சாவூரில் இந்த இரண்டு மம்மேலியார்களும் தற் செயலாகத்தான் என் கண்ணில் பட்டார்கள். நான் பள்ளியில் படிக்கும்போது அந்தக் காலத்திலேயே யாரோ மம்மேலியார்கள் என்று ஒரு பெரிய குடும்பத்தினரைப் பற்றி வதந்திகள் என் காதிலும் விழுந்ததுண்டு என்று, இப்போது, கையில் ஏதோ ஒரு புஸ்தகத்தைப் பிரித்துக்கொண்டு யோசித்துப் பார்க்கும் போது தான் எனக்கு ஞாபகம் வந்தது. அதைத் தவிர வேறு ஒன்றும் எனக்கு ஞாபகம் வரவில்லை. நான் தஞ்சாவூரிலேயே வாரக் கணக்காகத் தங்கியிருந்தாலும்கூட அகஸ்மாத்தாகக் கேள்விப் பட்டது தவிர, வேறு எதுவும் அறிந்து கொள்ளாதிருந்திருக்க முடியும். இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேரோ? அவர்கள் குடும்பத்தின் நிலை என்ன? அவர்களுடைய பெண்மணிகள் எப்படிப்பட்டவர்களோ? எனக்கும் என் நண்பன் ரகுவுக்கும் துளிகூட சம்பந்தமில்லாத இப்படிப்பட்ட கேள்விகள் நூறாயிரம் என் மனத்தில் எழுந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஓர் ஆசிரியன். கதைகள் எழுதுபவன். கழுகுக்கு மூக்கில் வேர்க்கும் என்பார்களே, அது போலக் கதை என்றால் எங்கே என்று காத்திருப்பவன் நான். சற்றே சுவாரசியமான கதையின் அம்சங்கள் எல்லாமே இங்கிருப்பதாக எனக்குத் தோன்றியது. நான் அப்படி நினைத்தது — இது சுவாரசிய மான விஷயம் என்று நினைத்தது — தவறாகவும் இருக்கலாம். ஆனால் அதுபற்றித் தீர ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும் என்கிற சிந்தனை மட்டும் எனக்குச் சற்றுத் தீவிரமாகவேதான் இருந்தது.

ஆனால் ரகுவிடம் இதுபற்றிப் பேசி அறிந்துகொள்ள முடியாது என்பதும் தெளிவாகவே தெரிந்தது. மம்மேலியார்களைப் பற்றி அவனாகப் பேச விரும்பவில்லை. நான் பேச்செடுத்தாலே போதும். டக்கென்று எலிப்பொறி மாதிரி

வாயை மூடிக்கொண்டு மௌனம் சாதிக்கிறான். அல்லது வேறு விஷயம் பற்றிப் பேசத் தொடங்கி விடுகிறான். ‘‘இப்பொழுது அவன்களைப் பற்றி வேண்டாமே. பிறகு நானாகவே சொல்லுகிறேன்’’ என்கிறான். அவனுக்கு மம்மேலியர்களைப் பற்றிய பேச்சு மனத்துக்கு மிகவும் அருவருப்பும் கசப்பும் தருவதாக இருந்தது. அன்று காலையில்கூட என்னுடன் உரக்க உத்ஸாகமாகப் பேசிக் கொண்டு வந்தவன் மம்மேலியார்களில் ஒருவரைக் கண்டவுடன் சட்டென்று, பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டானே! என்னுடன் கூடப் பேச விரும்பாமல், தனிமையை நாடி எங்கேயோ சென்று விட்டானே! சாதாரணமாக என்னுடன் சரஸ்வதி மஹாலுக்கு வந்தால் ஏதாவது பழைய புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு பாதிப்படிப்பும் பாதிக் கேலிப் பேச்சுமாக இருப்பவன், அன்று அப்போது என்னுடன் வாசக சாலைக்குள்கூட வர வில்லையே!

எனக்கும் மனது குழம்பிற்று. படிப்பு ஓடவில்லை. புஸ்தகங்கள் இரண்டு மூன்றை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துப் பார்த்துப் பக்கங்கள் புரட்டினேன். ஒரு மணி நேரம் இப்படிப் படிக்கிறமாதிரி பாவனை செய்துவிட்டு, நான் வெளியே வந்தேன். சரஸ்வதி மஹாலுக்கு எதிரேயுள்ள, மராத்திய மன்னர்களின் காலத்திய சபாமண்டபத்துப் பெரிய தூண்களில் ஏதாவதொன்றில் சாய்ந்து ரகு சிந்தனையில் ஆழ்ந்திருப்பான் என்று நான் எண்ணினேன். அங்கு அவனைக் காணவில்லை.

கதை எனக்கு முக்கியம்தான் என்றாலும், ரகுவினுடைய மனக் கசப்பும் இப்போதைய மனோபாவமும் மாறிவிட வேண்டும். அவன் எப்போதும் போலப் பழைய ரகுவாகக் கல கலப்பாக என்னுடன் பேசவேண்டும் என்பது என் முதல் ஆசை.

நான் அவனைத் தேடிக்கொண்டு வந்து கண்டுபிடித்து விடுவேன். அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்று வேண்டு மென்றே அவன் வேறு எங்கேயோ போயிருப்பான் என்று எனக்குத் தோன்றியது. அப்படியிருக்குமாயின் நான் அவனைத் தேடாமல் இருப்பதே சிலாக்கியம் என்று தீர்மானித்தேன். சாப்பிடுகிற நேரத்துக்குத் தானாக வருவான் என்று எண்ணி, நான் வெளியே சற்று நேரம் நின்றுவிட்டு மீண்டும் வாசக சாலைக்குள் போகக் கிளம்பினேன்.

அகஸ்மாத்தாக சரஸ்வதி மஹாலில் வெளி வராண்டாவில் கீழ்ப்படியில் நின்று நிமிர்ந்து பார்த்தேன். எதிரே தெரிந்த ‘தொள்ளைக் காது’ மண்டபத்தில் மேல் மாடியில், அதாவது ஏழாவது தளத்தில் ஒரு உருவம் தெரிந்தது. இரண்டு தரம் உற்றுப் பார்த்துத்தான் அது ரகு என்று என்னால் அனுமானிக்க முடிந்தது. அவ்வளவு உயரத்திலிருந்த அவ்வுருவம் என் கண்ணில் சரியாகப் படவில்லை. — ஏதோ மனித உருவமாக மட்டும் பட்டது. ஆனால் அது ரகுதான் — சந்தேகத்துக்கு இடமே இல்லை.

இரண்டு விநாடிகள் நான் நின்ற இடத்திலேயே தயங்கி நின்றேன். ஓங்கி எழுந்திருந்த மண்டபத்தின் ஏழாவது மாடியின் இரண்டடி உயரமேயுள்ள கைப்பிடிச் சுவர்மேல் சாய்ந்துகொண்டு நின்ற அந்த உருவத்தைப் பார்த்துக் கொண்டே இரண்டு விநாடி நின்றேன். வார்த்தைகளுக்கு எட்டாத ஒரு பயம். ஒரு பீதி, ஓர் அதைரியம் என் மனத்தில் உதித்தது. இந்த மம்மேலியார்கள் — அற்பன்கள் யாரோ, பலர் சேர்ந்துகொண்டு என் அருமை நண்பன் ரகுவை இவ்வுலகிலிருந்து துரத்தியடிக்க முற்பட்டிருக்கிறார்கள். அவன் தப்ப முடியாதபடி விரட்டுகிறார்கள் என்று உண்மையில் ஆதாரமற்ற ஒரு சிந்தனை என் உள்ளத்தில் தோன்றியது.

ஏன் அப்படித் தோன்றவேண்டும் எனக்கு?

எனக்கே தெரியவில்லை.

தொள்ளைக்காது மண்டபத்தின் ஏழாவது மாடியிலிருந்து ரகு தானாக வேண்டுமென்றேயோ கால் தவறியோ கீழே விழுவது போன்ற ஒரு காட்சி என் மனக்கண்ணில் தோன்றியது. ஒரு விநாடி தோன்றி மறைந்துவிட்ட அந்தக் காட்சி என்னை அடியோடு ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. அந்த ஒரு விநாடியில் என் மனம் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.

ஆனால் அடுத்த வினாடி, “சீ! இதெல்லாம் என்ன அசட்டுச் சிந்தனைகள்!” என்று எனக்குள்ளாகவே கூறிக் கொண்டு சமாளித்துக்கொண்டேன். மீண்டும் நிமிர்ந்து பார்க்க அதற்குப் பிறகும் சில விநாடிகள் எனக்குத் தைரியம் வரவில்லை. ஆனால் தைரியம் வந்து நான் நிமிர்ந்து பார்த்தபோது என் நண்பன் ரகுவின் உருவம் முன்பிருந்த இடத்தில் நன்றாகவே தெரிந்தது. அவன் அணிந்திருந்த அங்கவஸ்திரம் காற்றில் லேசாக அலைந்து

ஆடிக்கொண்டிருந்தது. நான் சற்று முன் பயந்தமாதிரி எதுவும் நடந்துவிடவில்லை. கைப்பிடிச் சுவரின்மேல் சாய்ந்துகொண்டு ரகு உலகத்தின் அசுத்தம் எட்டாது உயரத்தில் வீசும் காற்றை அனுபவித்துக் கொண்டு நின்றான்.

எனக்கும் அப்போது அந்தக் காற்றுத் தேவை என்று தோன்றியது. என் நண்பனுடன் அளவளாவ. அவனைத் தேடி நானும் தொள்ளைக் காது மண்டபமேறிப் போகலாம் என்று இரண்டு எடுத்து வைத்தேன். ஆனால் அச்சமயம் ரகு தனிமையை விரும்பினான். என் பேச்சை அவன் வரவேற்கவில்லை. அதனால் தான் அவ்வளவு உயரத்தில் தனிமையில் போய் நின்று கொண்டிருந் தான் என்பது ஞாபகம் வரவே, பேசாமல் மறுபடியும் நிமிர்ந்து கூடப் பார்க்காமல் நான் நேரே சரஸ்வதி மஹாலுக்குள் போய் ஒரு புஸ்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டேன்.

# 4

இரண்டாவது தடவையாக நான் எடுத்துக்கொண்ட புஸ்தகத்தில் லயித்து உட்கார்ந்துவிட்டேன். என்னையும் மீறி, மம்மேலியர்களைப் பற்றிய என் சிந்தனைகளை மறந்துவிட்டு, நேரம் ஆனதே தெரியவில்லை.

ரகு கடைசியாக என் எதிரில் வந்து நின்றுகொண்டு, ‘‘நாழியாக வில்லையா?’’ என்று கேட்ட பிறகுதான் நிமிர்ந்து கடிகாரத்தைப் பார்த்தேன். மணி இரண்டடித்து இருபது நிமிஷம் ஆகியிருந்தது.

‘‘மணி பார்த்த பிறகுதானப்பா பசி தெரிகிறது!’’ என்று சொல்லிக்கொண்டே புஸ்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்தேன். வெளியே வந்ததும் ‘‘இவ்வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருந்தாய்?’’ என்று ரகுவைக் கேட்டேன்.

‘‘சும்மா இருப்பதே சுகம்’’ என்று இருந்தேன். கையில் கடிகாரமும் இல்லாததால் நேரம் தெரியவில்லை. பன்னிரண்டு மணி இருக்கலாம் என்று எண்ணி வந்தேன். மணி இரண்டரை ஆகப்போகிறது என்றான் ரகு.

‘‘தேவலையே! ஆறு மணி நேரத்தை மூன்று மணிநேரமாகக் கழிக்கிற விந்தையை நான் கற்றுக் கொள்ளவில்லையே என்று எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது’’ என்றேன் நான்.

‘‘ஆறு மணி நேரம் மூன்று மணி நேரமாகக் கழிந்தது ஆறு யுகங்களாகக் கழியவில்லையே எனக்கு!’’ என்றான் ரகு. கசப்புத் தொனிக்க.

அவன் குரலில் தொனித்த ஒரு பாவம் என் மனத்தில் சுருக்கென்று தைத்தது. நிமிர்ந்து பார்த்தேன். ஆனால் அவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் போலும். நான் அவனுடன் வருவதையே மறந்துவிட்டு அவன் பாட்டுக்கு நடந்து கொண்டிருந் தான். பசி போலும் சற்று விருவிரு வென்றே நடந்து கொண்டிருந்தான். அவனுடன் சற்று வேகமாகவே நானும் நடந்தேன். அந்த மௌனத்தை நான் கலைக்கவில்லை.

வீடு போய்ச் சேருகிறபோது பசி மந்தித்துவிட்டது. லேசாகத் தலையையும் வலிக்க ஆரம்பித்துவிட்டது. இரண்டு கவளம் சாப்பிட்டு விட்டுப் படுத்தோம். பகலில் தூங்கிப் பழகாத எனக்குத் தூக்கம் வரவில்லை; அசதியாக மட்டும் இருந்தது. படுத்துத்த தரையிலே புரண்டேன்; நூறு இருநூறு மைல் ஓடி விட்டு வந்த குதிரை மாதிரி. ரகுவின் குழந்தைகள் இரண்டும் வீட்டில் இல்லை; அடுத்த வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடப் போயிருந்தன போலும். படிப்பும் ஓடவில்லை. கடைசியாகச் சாப்பிட்டு ஒரு மணி நேரம்கூட ஆகவில்லை என்றாலும் காபி சாப்பிட்டு விட்டு வந்தாலாவது தலைவலி தீருமா பார்க்கலாமே என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினேன்.

பதைபதைக்கிற வெயிலில் வடக்கு வீதியில் நிழல் இல்லாத பக்கத்தில் நடந்துபோய் ராஜகோபாலசாமி தெருவில் திரும்பும் போது மீண்டும் எனக்கு மம்மேலியார்களின் ஞாபகம் வந்தது. சதாசிவ மம்மேலியாரைப் பற்றி முதல் முதலாகக் கேள்விப்பட்ட நாள் முதலாகவே என் மனத்தில் வேறு ஒரு நினைப்பும் குடி புகவில்லை என்று தோன்றிற்று. எனக்கு இப்படி மம்மேலியர்களின் நினைவு என் உள்ளத்தில் விசுவரூபம் எடுத்து என்னை அரிக்க விட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்று தோன்றியது. அதற்கு ஒரு வழிதான் உண்டு. அவர்களைப்பற்றிய பூரா விஷயத்தையும் விசாரித்து அறிந்து கொள்வதுதான் அந்த வழி. என் நண்பன் ரகுவுக்கும் அவர்களுக்கும் உள்ள மர்மமான சம்பந்தத்தை விசாரித்து அறிந்து கொள்வதுதான் அந்த வழி. என் நண்பன் ரகுவுக்கும் அவர்களுக்கும் உள்ள மர்மமான சம்பந்தத்தை விசாரித்து அறிந்து கொண்டு விடத்தான் வேண்டும் என்று நான் நினைத்தேன்.

எது எப்படியானாலும் தானாக எதுவும் சொல்லி விடுவதாக ரகுவுக்கு உத்தேசமில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. நான் அந்த விஷயத்தை அறிந்து கொள்வதில் அவனுக்கு மனப் பூர்வமாக விருப்பமில்லை என்பது தெரிந்தது. இந்த மாதிரி சந்தர்ப்பம் காரணமாக எனக்கே அதில் மேலே செல்லக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. பிறரைக் கேட்டு அதுபற்றித் தெரிந்து கொள்வது ரகுவுக்கு, என் நண்பனுக்குத் துரோகம் இழைப்ப தாகுமே என்று தோன்றிற்று எனக்கு. ஆனால் எப்படி, ஏன், எதனால் அது துரோகமாகும் என்பதுதான் எனக்குத் தெளிவாக வில்லை;

தவிர மூன்றாவது ஆசாமி ஒருவனிடம் போய் மம்மேலியர்களைப் பற்றி என்ன என்று சொல்லி, எப்படி விசாரிப்பது? கொஞ்சமாவது தெரிந்தால் மேற்கொண்டு ஏதாவது விசாரிக்கலாம். ஒன்றுமே தெரியாத இடத்தில் எதை எப்படி விசாரிப்பது?

இதற்குள் மணி ஐயர் கிளப்பை அடைந்துவிட்டேன். பழைய பரமசிவ ஐயர் ஹோட்டலின் இன்றைய வாரிசு தஞ்சாவூரில் மணி ஐயர் ஹோட்டல்தான். காபிப் பிரியனான எனக்கு மணிஐயர் ஹோட்டலைப்பற்றி நன்கு தெரியும் — மணி ஐயர் ஹோட்டலிலும் எல்லோருக்கும் என்னைப் பற்றித் தெரியும். அங்கு எனக்கு வழக்கமான அம்பிப் பையன்கள் என்னைச் சற்று பிரியமாகவே வரவேற்று உபசரிப்பார்கள். காபி ரசிகனுக்கு ஏற்ற உபசாரம் அது என்று, எனக்கு அதை உரிய தாகவே நானும் ஏற்றுக் கொள்வேன்.

வழக்கம் போலவே மணி ஐயர் கிளப்புப் பலகாரமும் காபியும் நன்றாகத்தான் இருந்தன. நான் காபியை ருசி பார்த்துச் சிறுகச் சிறுகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, இரு வாலிபர்கள் பணம் கொடுக்கிற மேஜையண்டை வந்தார்கள்.

நான் பணப் பெட்டிக்குப் பக்கத்து மேஜையில் உட்கார்ந்து காபி சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அது சற்று அகாலமாதலால் ஹோட்டலில் அதிகக் கும்பல் இல்லை. எனக்குக் காபி கொண்டுவந்து கொடுத்த பையன், கவனிப்பதற்கு வேறு யாரும் இல்லை என்பதனால் என் மேஜை யண்டை வந்து நின்று, ‘‘காபி நன்னாயிருக்கா ஸார்?’’ என்று கேட்டான்.

‘‘திவ்யமாயிருக்கிறது!’’ என்று நான் சொன்ன பதில் அவன் காதில் விழுந்ததோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஏனென்றால் அதே சமயம்தான் அந்த இரண்டு பெயர்களும் கையில் பில்லுடன் பணம் வாங்குகிறவர் மேஜையண்டை வந்தார்கள். அவர்களைக் கண்டதும் அம்பி, ‘‘வந்துவிட்டார்களா மறுபடியும்?’’ என்று தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான். அவர்களைக் கவனித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற மாதிரியிலே என்னைப் பார்த்துக் கண்ணடித்தான்.

அம்பிப் பையன் சொல்லாவிட்டாலும்கூட நான் அவர்களைக் கவனித்திருப்பேன். சற்றே அசாதாரணமான களையுடன்தான் இருந்தார்கள். அண்ணன் — தம்பி

என்பது முகச் சாயலிலே தெரிந்தது. ஷோக்காகத்தான் சட்டை அணிந்திருந்தார்கள். பார்ப்பதற்கு ரொம்பவும் 'டீக்'காகத்தான் இருந்தார்கள். ஆனால் அவர்கள் பெட்டியடியில் வந்தவுடன் மெல்லிய குரலில் ஏதோ ரகசியம் பேசுகிற மாதிரி பேசியது என் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது.

பெட்டியடியில் இருப்பவர் சற்று உரக்கவே சொன்னார்: "இப்படி மாசக் கணக்காக வளரவிட்டுக் கொண்டிருந்தால்....?" அவர் குரலில் சலிப்பும், அலுப்பும், அசிரத்தையும் அலட்சியமும் கலந்து தொனித்தன.

இப்படிச் சட்டை போட்டுக்கொண்டு, பெரிய மனிதர்கள் மாதிரி இருப்பவர்களிடம், சாதாரணமாக இரைந்தே பேசியறியாத முதலாளி, இப்படிப் பேசுகிறாரே என்று எனக்கு வியப்பாக இருந்தது.

ஆனால் அந்த வாலிபர்கள் இருவரும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு மிகவும் பழக்கப்பட்டவர்கள் போலக் குரலைத் தாழ்த்தியும் உரத்தும் பேசி, எப்படியோ அன்றைய பில் தொகையையும் கணக்கில் எழுத வைத்து விட்டுப்போய் விட்டார்கள்.

'சாமர்த்தியக்காரர்கள்தான்' என்றேன் நான். அம்பியைப் பார்த்து.

"அடேயப்பா! மம்மேலியார்களின் சாமர்த்தியத்துக்கு நீங்களும் நானும் போவது எங்கே?" என்றான் அம்பி.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. எதிர்பாராத விஷயம் இது. நான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன்: "அம்பி, இதே மாதிரி இன்னொரு கப் காபி கொண்டு வா!" என்றேன்.

தான் கொண்டுவந்து கொடுத்த காபி எனக்குத் திருப்தி அளித்தது என்பதில் அம்பிக்குப் பரம திருப்தி. அதே மாதிரி காபி இன்னொரு கப் இரண்டு நிமிஷத்தில் கொண்டுவந்து என்முன் வைத்தான்.

"யார் அம்பி அது மம்மேலியார்கள்? பெயரே புதுசாக இருக்கிறதே!" என்றேன் நான் சாவதானமாக. என் பதட்டத்தைக் காட்டிக்கொள்ளாமல் புதுசாக வந்த காபியில் இரண்டு வாய் சாப்பிட்டுவிட்டுக் கேட்டேன்.

அம்பி சொன்னான்: ‘‘மம்மேலியார்களைப் பற்றியா கேட்கிறேள்? சொல்லுகிறேன். ஆனால் அது முழு நீளக் கதையாயிற்றே!’’

‘‘பாதகமில்லை சொல்லு! இந்த மாதிரி இன்னொரு கப் காபி கொடுத்தாலும் சாப்பிடுவேன். கதையைப் பாதி சொல்லிவிட்டு மூன்றாவது கப் காபி கொண்டு வா! மற்றப் பாதியை அதைச் சாப்பிட்டுக்கொண்டே கேட்கிறேன்’’ என்றேன் நான்.

‘‘நல்ல வேளையாக இப்பொழுது கூட்டமும் அதிகம் இல்லை. மூணரை நாலு மணிக்குத்தான் கூட்டம் வர ஆரம்பிக்கும்! அதற்குள் கதையைச் சொல்லி விடுகிறேன்’’ என்ற பீடிகையுடன் அம்பி சொல்லத் தொடங்கினான்.

ஹோட்டல் அம்பி சொன்னான்:

‘‘இந்த உலகத்திலே பரிதாபகரமான காட்சிகளுக்குக் குறைவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அதுவும் தஞ்சாவூர் என்கிற இந்த நகரத்தையே மிகவும் பரிதாபகரமான காட்சி என்றுதான் சொல்லவேண்டும். பழைய நாட்களில் இருந்த பெருமைகளைத் தவிர புதுசாகச் சொல்லிக்கொள்ள அதற்குப் பெருமை ஒன்றும் இல்லை. அற்புதமான அலங்காரமான கட்டிடங்கள் பல இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. உயர்ந்த ஸ்திதியிலிருந்து நாளுக்கு நாள் படிப்படியாக இந்நகரம் இறங்கி வந்து கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையாகவே தெரிகிற உண்மை.

மனிதர்களைப் போலவே நகரங்களும் நாகரிகங்களும் நாளடைவில் ஷீணகதி அடைகின்றன.’’ அல்லது அதை மாற்றி சரித்திரப் பிரசித்தமான நகரங்களுக்கும் நாகரிகங்களுக்கும் வருவதுபோலவே தனி மனிதர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஷீணதசை வருகின்றது என்று சொல்வோமா?

மனிதர்களிலே மிகவும் பரிதாபகரமான காட்சி எது என்று என்னை யாராவது கேட்டால், நான் இந்த மம்மேலியார்கள்தான் என்று சிறிதும் தயங்காமல் பதில் சொல்லிவிடுவேன். மம்மேலியார்களைப் போலப் பரிதாப கரமான குடும்பம் இந்தப் பரிதாபகரமான தஞ்சாவூரிலே வேறு இல்லை என்றுதான் நான் தயங்காமல் கூறுவேன்.

‘இது ஏதடா? கதாசிரியன் நாமிருக்க இந்த அதிகப் பிரசங்கி ஹோட்டல்காரப் பையன் இப்படிக் கதாசிரியன் மாதிரி பேச ஆரம்பித்துவிட்டானே!’ என்று நீங்கள் நினைக்கிறீர்கள்! அப்படித் தானே யோசிக்கிறீர்கள்? தெரிகிறது! ஆனால் நான் என்ன செய்வது? இந்த மம்மேலியார்களை நினைத்தால் எனக்குக்கூடக் கதை சொல்லும் திறன் வந்துவிடும் போலத்தான் இருக்கிறது.

பெரிய கதை அது. அவர்கள் இருந்த இருப்பு என்ன? இப்பொழுது அவர்கள் இருக்கிற நிலை என்ன? இதை எண்ணும் போது எனக்குக் கதை தானே வருகிறது. கவிதை வரவில்லையே என்று வருத்தம் ஏற்படுகிறது. அந்த அவர்களுடைய கதையை எண்ணும்போது அவர்களைப் பற்றி அவ்வளவாக அறியாத வர்களுக்கும் கூடக் கண்களில் நீர் சுரக்க ஆரம்பித்துவிடும்.

ஆடம்பரமாகப் பெரிய மனிதர்கள் மாதிரி வாழப் பழகி விட்டார்கள். அப்பழக்கத்தை மறப்பதோ மீளுவதோ சிரமம் என்றுதான் சொல்லவேண்டும். நாம் சிறு வயதில் பணக் காரர்களாக இருந்து விட்டு வாலிபப் பருவத்தில் திடீரென்று ஒருநாள் ஏழைகளாகி விட்டால் சமாளித்துக் கொள்வதென்பது மிகவும் சிரமமான காரியம்தான். இப்படிப் பட்டவர்களில் நூற்றில் ஒருவர் இருவர் சமாளித்துக் கொண்டால் ஜாஸ்தி. அந்த ஒருவர் இருவர் சிரமப்பட்டுச் சமாளித்துக் கொள்வார்களே தவிர அதற்கு மேல் எதுவும் செய்யச் சக்தியற்றுப் போய்விடுவார்கள். அவர்களால் சாதாரண மனிதர்களாக வாழ்வதென்பது இயலாமலே போய்விடும். மனிதர்களாக வாழ அவர்கள் முயலுவதும் இல்லை முயன்றாலும் முடியாது. யார் கண்ணிலும் படாமல் ஏதோ குற்றம் செய்துவிட்டுப் பகல் வெளிச்சத்தில் சகோதர மனிதர்கள் கண்ணில் படாமல் பதுங்கிப் பதுங்கி இரவில் நடமாடுபவர்கள் மாதிரி ஒரு பயத்துடன் வாழத் தொடங்கி விடுவார்கள்?

இப்போது நீங்கள் பார்த்த இந்த இரண்டு மம்மேலியர்களும் இந்தச் சமாளித்துக் கொள்கிற ஒருவர் இருவர் அல்ல — இவர்கள் ஆழத்தில் அழுந்தித் தலை நிமிரமுடியாது தவிக்கிற மற்றப் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பணக்காரர்களாகத் தாங்கள் ஆதிகாலத்தில் அடி நாட்களில் இருந்து இப்போது ஏழைகள் ஆகிவிட்டவர்கள் என்பதை இவர்கள் மனத்தில் வைப்பதில்லை. எப்போதும் போலவே இப்பொழுதும் வாழ்க்கைத் தரத்தில்

சிறிதும் நலியாதவர்கள் போல் மெலியாதவர்கள் போல் நடப்பவர்கள். அப்படித் தாங்கள் பாவித்து நடந்து கொண்டால் மற்றவர்களும் அப்படியே பாவித்துத் தங்களை அப்படியே மதித்து நடத்தி விடுவார்கள் என்று எண்ணுகிறார்கள். எப்படியோ தரம் மாறாமலே தங்கள் வாழ்வு நடந்துவிடும் என்று எண்ணுகிறார்கள்: உலகை ஏமாற்ற எண்ணி ஆரம்பித்துத் தாமே ஏமாந்து போகிறார்கள் அறிவிலிகள்! ஒவ்வொரு தடவையும் அவர்கள் மண்டையில் தட்டி அறிவுறுத்த வேண்டியதாக இருக்கிறது அவர்களுடைய இன்றைய நிலைமையை!

நான் இந்த ஹோட்டல் பையன்: அரைகுறைப் படிப்புக் காரன். கதையைச் சுருக்கமாகச் சொல்லுகிற அழகு நன்றாக தான் இருக்கிறது என்று எண்ணி நீங்கள் மனத்திற்குள் சிந்தித்துக் கொள்கிறீர்கள் என்பது எனக்கும் தெரிகிறது. ஆனால் அதற்கு என்ன ஷார் பண்ணுவது? இருந்தாலும் அதனதற்கு ஏற்ற வேகத்திலேதானே ஒவ்வொரு விஷயத்தையுமே சொல்ல வேண்டியதாக இருக்கிறது. தவிரவும் இன்னும் இருபது நிமிஷம் அரைமணி நேரம் எனக்கு ஓய்வுதான். அவசரம் எதுவும் இல்லை எனக்கு. உங்களுக்கும் அவசரம் இல்லையானால் நான் சொல்ல விரும்புகிறபடியே நிதானமாகவே சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையாக உங்கள் எல்லைக்குள் புகுந்து நான் துவம்சம் செய்வதைச் சகித்துக் கொண்டு என்னை மன்னித்து விட்டுக் கேளுங்கள்!

இப்போது ஹோட்டலிலே வந்து தாராளமாக வயிறாரச் சாப்பிட்டுவிட்டுக் காசு கொடுக்காமல் கணக்கெழுதி விட்டு, ஹோட்டல் முதலாளி சொன்னதை எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு துடைத்துவிட்டு மறுவார்த்தை பேசாமல் தலை இரங்காமலும் போகிறார்களே, இந்த இரண்டு வாலிபர்களும் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகள். அதாவது அவர்கள் பிறக்கும்போது, பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளாகப் பிறந்தவர்கள், பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளாக வந்து அவ தரித்தவர்கள். அந்தத் தலைமுறையிலே, மம்மேலியார்களின் வீட்டிலே பிறந்தவர்களை மகா பாக்கியசாலிகளாகத்தான் எல்லோரும் கருதினார்கள்.

அந்த நாளில் — அதாவது சுமார் ஐம்பத்தைந்து அல்லது ஜாஸ்தி போனால் அறுபது வருஷங்களுக்கு முன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்; அதற்குமேல் இராது; மம்மேலியார்கள் என்றால் தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டும் அல்ல. சென்னை ராஜதானியிலும் கூட எல்லோருக்கும் தெரியும். இந்தப் பையன்களுடைய தாத்தா எப்படியெல்லாமோ கரடி வித்தைகள் எல்லாம் செய்து, நிறையச் சம்பாதித்தார். அவர் அவ்வளவாகப் படித்தவரும் அல்ல. ஏதோ லஷ்மி கடாஷம் இருந்தது. அவர் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று. துடைத்ததெல்லாம் வைர மாயிற்று. அவர் வாழ்ந்து பொருளீட்டியதும் சொல்பகாலம்தான்; ஐம்பது வயதுக்குள்ளாகவே இறந்துவிட்டார் அவர். அவருடைய ஐம்பது வயதில் கடைசி இருபது வருஷங்களில் அவரிடம் ஏராளமாக பொருள் சேர்ந்தது. நாகரிகமான, வெளியே சொல்லிக் கொள்ளக் கூடிய சில வழிகளிலும், அநாகரிகமான வெளியே சொல்லிக் கொள்ள முடியாத பல வழிகளிலும் அவர் பொருளீட்டினார் என்று ஊரில் பலவிதமாகச் சொல்லிக் கொள்ளுவார்கள்.

அதெல்லாம் எப்படியானால் என்ன? பொருள் சேர்ந்தது என்பது முக்கிய விஷயம். ஏராளமாகக் குவிந்த பணம் காரணமாகத் தான் என்று சொல்லவேண்டும். அவருக்குப் பல பெரிய பெரிய இடத்து நட்பும் சம்பந்தமும் கிடைத்து நிலைத்தது. அவர் வீட்டிலே உறவினர்களும் அண்டிப் பிழைப்பவர்களுமாக அந்தக் காலத்தில் ஜே ஜே என்று சதா திருவிழாக் கும்பல் மாதிரிதான் இருக்குமாம். இரட்டை மாட்டு வண்டியும் ரேக்ளா வண்டியும் கோச்சு வண்டியுமாக டஜன் வண்டிகளாவது அவருடைய வீட்டு வாசலில் காத்திருக்குமாம் எப்போதும். உள்ளூர்ப் பெரிய மனிதர்கள் இணைந்து எக்காரியம் செய்வதானாலும் அவரில்லாமல் செய்யவே மாட்டார்களாம்!

படிப்பு அதிகம் இல்லாதவர்: பணம் நிறையச் சேர்த்தவர்: எனினும் ஓரளவுக்குப் படிப்பு இல்லாமையையும் புதுப் பணத்தையும் சேர்த்துச் சமாளித்துக் கொள்ளப்போதிய மனத்தெம்பு படைத்தவர். எல்லோருடனும் அவரவர்களுக்குரிய மாதிரியில் பழக அவரால் இயன்றது. பெரிய மனிதர்களுடன் பெரிய மனிதராகவும் சாதாரண மனிதர்களுடன் சாதாரண மனிதராகவும் பழகுகிற ஒரு தன்மையினால் அவரை எல்லோருமே

போற்றினார்கள். தான தருமம் செய்வதில் அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது. காசியிலே ஒரு மடம். இன்னும் பல கோயில்களில் திருப் பணிகள், தஞ்சை ஜில்லாவிலே பல ஊர்களில் கட்டளைகள். ஊரில் இரண்டொரு சத்திரங்கள் எல்லாம் இன்னமும் அவருடைய பெயரைத் தாங்கி அவருடைய தயாள சிந்தனைக்குச் சின்னமாக நிலைத்திருக்கின்றன. அவர் பெயர் சதாசிவ மம்மேலியார்.

அவருக்குப்பின் வந்தவர்களிடம் பணம் சம்பாதிப்பதற்கான சாமார்த்தியமோ அதை வைத்துப் பரிபாலிப்பதற்கான மனத் திடமோ இல்லை. அவர்கள் தாங்களாகச் சம்பாதிக்காவிட்டாலும் பாதகமில்லை. இருந்ததை வைத்துக்கொண்டு சரிவர ஆண்டு வந்திருந்தார்களானால், சென்னை ராஜதானியிலேயே சிறந்த பணக்காரக் குடும்பங்களில் ஒன்றாக இன்னமும் இருக்கலாம். அதற்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை.

குடும்பம் ஷீணதசை அடைந்ததற்கு முக்கிய காரணம் ஒன்று. சதாசிவ மம்மேலியாருடைய மனைவியைத்தான் சொல்ல வேண்டும்.

சதாசிவ மம்மேலியார், வயதான பிறகுதான் கலியாணம் செய்துகொண்டார். அவருக்குப் பணம் சேர ஆரம்பித்ததே கல்யாணம் செய்துகொண்ட பிறகுதான். பானை பிடித்தவளின் பாக்கியம் என்றுதான் சொல்லிக் கொண்டார்கள். ஆரம்பத்தில் அந்தக் கல்யாணத்தின் போது சதாசிவ மம்மேலியாருக்கு வயது முப்பத்தைந்தாவது இருக்கும். அவருக்கு வந்து வாழ்க்கைப் பட்ட போது சிவகாமிக்கு வயது பதினைந்து பதினாறுதான் இருக்கும். பெரிய இடத்துப் பெண்; அதாவது ஒரு ஜமீனின் தூரத்து ஏழைப் பந்து. பார்ப்பதற்கும் சிவப்பாக நன்றாக இருப்பாள். சதாசிவ மம்மேலியாரின் பணத்தைப் போலவே சிவகாமியின் அழகும் நடத்தையும் சில நாட்களிலே ஊரெல்லாம் பிரசித்தமடையத் தொடங்கிவிட்டன. அவளுடைய காதலர்கள் என்று வாரத்திற்கொருவர் ஊரில் பிரசித்தி அடைந்து வந்தார்கள்.

இந்தச் சிவகாமியின் காதலர்கள் வரிசையில் சென்னை யிலிருந்து அப்போதுதான் படித்துவிட்டு வந்திருந்த வாலிப டாக்டரும் ஒருவர். அவர் பெயர் எனக்கு இன்னமும் தெரியாது. ஆனால் அவரைப் பற்றி இன்று சொல்வதானால் கூட டாக்டர் சிவகாமி அல்லது மம்மேலியார் வீட்டு டாக்டர் என்றுதான்

சொல்வார்கள். அந்த டாக்டரும் சிவகாமியுமாக, சதாசிவ மம்மேலியார் சம்பாதிக்கச் சம்பாதிக்கச் சலிப்பில்லாமல் செலவு செய்து வந்தார்கள். சிவகாமியின் காதலர்களிலே நிலைத்தவர் இந்த டாக்டர் தான். இவருக்கும் தன் மனைவிக்கும் உள்ள உறவு சதாசிவ மம்மேலியாருக்கும் தெரியும்; தெரியாமல் இருக்குமா? என்றுதான் ஊரில் சொல்லிக் கொண்டார்கள். அது காரணமாகத் தான் அவர் தம் குடும்ப விவகாரங்களிலிருந்து பூரணமாக விலகி நின்று பொருளீட்டுவதில் மட்டும் கவனம் செலுத்தினார் என்றும் ஊரார் சொன்னார்கள். கடைசி வரையில் அவர் சிவகாமியைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவர் உயிருடன் இருக்கும்போதே பிறந்த இரண்டு பிள்ளைகளைப் பற்றியும் அவர் அதிகமாகக் கவலைப்பட்டதாகத் தெரிய வில்லை. அவர் கவனம் பூராவும் பணம் சேர்ப்பதிலும் அந்தப் பணத்தில் சொல்பத்தைச் செலவு செய்துவிட்டு மற்றதைத் தன்னைப் பற்றியவரையில் மீத்து வைத்து விடுவதிலும் லயித்திருந்தது.

அவர் இறந்தபோது சிவகாமிக்கு வயசு முப்பதுக் குள்ளாகவேதான் இருக்கும். அவள் அழகு அழிந்து விடவில்லை; அவளுடன் அந்த டாக்டரும் இருந்தார். அவர்களுடைய பங்களாக்களில் ஒன்றிலே, அவளுக்கு மிகவும் சமீபமாகவே, அவர் குடியேறியிருந்தார். அவளுக்குப் பன்னிரண்டு வயதில் ஒரு பிள்ளை. ஏழு வயதில் ஒரு பிள்ளை. ஐந்து வயதில் ஒரு பெண் என்று மூன்று குழந்தைகள் இருந்தன. சதாசிவ மம்மேலியார் இறக்கும்போது அவள் மூன்று மாதம் கர்ப்பம் என்று பிறகு சொல்லிக் கொண்டார்கள். ஆனால் இது, ஒரு வருஷம் கழித்துச் சிவகாமிக்கு மூன்றாவது பிள்ளை ஒன்று பிறந்தபின் பிறகு ஏற்பட்ட பேச்சு!

சதாசிவ மம்மேலியார் இறக்கும்போது தஞ்சாவூரில் ஏழெட்டு மாளிகைகள். ரொக்கமாக நிறையப் பணம். நஞ்சை புஞ்சைகள் ஏராளம். காண்டிராக்ட் தொழில் ஒன்று, என்று நிறையவேதான் வைத்துச் சென்றார். ஆனால் அவருடைய பையன்கள் சிறுவர்கள், சொத்து நிர்வாகம் பூராவும் சிவகாமியின் கையிலே இருந்தது. அவள் தன்னுடைய காதல் டாக்டர் வசம் இருந்தாள். டாக்டரும் சிவகாமியுமாகச் சேர்ந்து ஏராளமாகச் செலவு செய்தார்கள் — அப்படியும் ஏராளமாக மிஞ்சியிருக்கத் தான் வேண்டும். ஆனால் அதற்கும் ஒரு தாயாதி எங்கிருந்தோ திடீரென்று முளைத்தான். சதாசிவ மம்மேலியாரும்

தானும் சேர்ந்து கூட்டாகவே கான்டிராக்ட் தொழில் செய்து வந்ததாகவும், அவர் சொத்தில் பாதி தனக்கும் சேரவேண்டும் என்றும் அந்தத் தாயாதி கோர்ட்டில் வழக்குத் தொடுத்தான். கீழ்க்கோர்ட்டில் அவனுக்குச் சாதகமாகத் தீர்ப்பாயிற்று. நாலைந்து வருஷங்கள் கேஸ் நடந்து பிறகு சதாசிவ மம்மேலியார் சம்பாதித்த சொத்தில் பெரும் பகுதி கரைந்துவிட்டது. இருந்ததையும் பங்கிட்டு அந்தத் தாயாதிக்குக் கொடுத்துவிடக் கோர்ட்டு உத்தரவிட்டு விட்டது.

இதன் மத்தியில் அந்த டாக்டருக்கு — அவர் பெயரோ மற்று முள்ள விவரங்களோ எனக்குத் தெரியாதென்று சொன்னேனல்லவா? சிவகாமியின் காதல் அலுத்துவிட்டது போலும்! அவளைவிட அந்த டாக்டர் நாலைந்து வயது சின்னவர்! அலுத்துப்போய் விட்டது நியாயம்தானே. இவர்களுடைய வழக்கு சென்னை ஹைகோர்ட்டில் நடந்து கொண்டிருக்கையில் கோர்ட்டுச் செலவுக்கு என்று இரண்டாயிரம் மூவாயிரம் கையில் பணம் வாங்கிக் கொண்டு, சிவகாமிக்குத் தெரியாமல் அவளுடைய நகைகளில் விலையுயர்ந்தவை பலவற்றைச் சுருட்டிக்கொண்டு டாக்டர் போய்விட்டார். போனவர் போனவர்தான். அவர் திரும்பி இன்றுவரை தஞ்சாவூருக்கு வரவேயில்லை என்றுதான் நினைக்கிறேன்.

சிவகாமியும் அவளுடைய மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பெரிய மனிதர்கள் என்கிற பெருமைப் பெயருடன், பெருங்காயம் இருந்த பாத்திரமாகத் தஞ்சாவூரிலே வாழ்ந்து வந்தார்கள். ஒரு தலைமுறைக்குப் போதுமான செல்வமும் இருந்தது. மூத்த பிள்ளை தியாக ராஜ மம்மேலியாருடைய பிள்ளைகள் இருவரையும் தான் நீங்கள் சற்றுமுன் பார்த்தது.

மூத்த பிள்ளை தியாகராஜ மம்மேலியார் ஆரம்ப காலத்தில் கொஞ்ச நாள் நல்லவனாக, அதாவது தன் பொறுப்புக்களை உணர்ந்து நடந்து கொள்கிறவனாக இருந்தான். சிறிய அளவில் ஏதோ கான்டிராக்ட் குத்தகை என்று சிலநாள் சிரமப்பட்டுப் பார்த்தான். சம்பாதித்ததைவிடச் செலவு அதிகமாயிற்று. இருபத்தைந்து வயது ஆவதற்கு முன்னாடியே ஸ்திரீலோலனாகித் திரியத் தொடங்கி அல்பாயுஸிலே முப்பது வயது நிரம்புமுன் இறந்தும் விட்டான். அவனுக்கு இந்த இரண்டு பிள்ளைதாம்.

தியாகராஜ மம்மேலியார் வாழ்ந்த மாதிரி சதாசிவ மம்மேலியார்கூட வாழ்ந்திருப்பாரா என்பது சந்தேகம் தான். தியாகராஜனை நான் பார்த்திருக்கிறேன். மூக்கும் முழியுமாகப் பார்ப்பதற்கும் கம்பீரமாக ஆஜானு பாஹுவாக இருப்பான். சரிகை வேலை செய்த வெல்வெட்டுச் சட்டையும் கறுப்புக் குல்லாயும் அணிந்து பிரம்மானந்தமாக இருக்கும். அந்தக் காலத்தில் தஞ்சாவூரில் ராஜ குமாரர்கள் இப்படித்தான் வீதியில் பவனி வந்திருப்பார்கள் என்று சொல்லத் தோன்றும் ஜாதிக் குதிரைகள் பல வைத்திருந்தான் அவன். அந்த நாட்களில் அதாவது பன்னிரண்டு பதினைந்து வருஷங்களுக்கு முன் அவனுடைய இந்தப் பிள்ளைகளும்கூடக் குதிரை ஏறித்தான் பள்ளிக்கூடம் வருவார்கள்.

அவனுடைய பிள்ளைகளில் இரண்டாவது பையனின் பெயர் அண்ணாமலை அவனும் நானும் ஒரே வகுப்பில் இரண்டு மூன்று வருஷங்கள் சேர்ந்து வாசித்தோம். பிறகு ஏழாவது வகுப்பில் இருவரும் அதைத் தாண்டத் தீர்மானமாக மறுத்துவிட்டோம். பள்ளியை விட்டு விட்டு நான் ஹோட்டலில் காபி ஆற்றிக் கொடுக்கிற தொழிலுக்கு வந்து விட்டேன். அவன் இப்போது காபி சாப்பிட்டுவிட்டுப் பல்லைக் காட்டிக் கணக்கில் எழுதிக் கொள்ளச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

# 5

பையன் தான் சொல்லிக் கொண்டிருந்த கதையை இந்தக் கட்டத்தில் நிறுத்திக் கொண்டு அடுத்த மேஜையில் வந்து உட்கார்ந்த இருவருக்குப் பலகாரம் காபி சப்ளை செய்யப் போய்விட்டான். இந்தக் கதையிலிருந்து வேறு என்னவெல்லாமோ எதிர்பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. பணக்காரர்களாக இருப்பவர்கள் அடுத்தத் தலை முறையில் ஏழைகளாவது சகஜம் தான். பணக்காரர் வீட்டுப் பெண் பிள்ளைகளில் சிலர் அசட்டுத்தனமாக சகவாசத்தால் அவஸ்தைப் படுவதும் நடக்காத காரியம் அல்லவே! இதில் புதிதாக என்ன இருந்தது! என் நண்பன் ரகுவுக்கு இதில் எங்கே இடம் என்றுதான் எனக்குப் புரியவில்லை.

மறுபடியும் ஹோட்டல் அம்பி என் மேஜையண்டை வந்து 'பில் போடட்டுமா?' என்று கேட்டபோது நான் சொன்னேன்: "பாக்கிக் கதையையும் சொல்லு. கதையைத் தவிர முதலில் கொடுத்த மாதிரி இன்னொரு கப் காப்பியும் கொடு. இரண்டாவது தடவை கொடுத்தது அவ்வளவாக நன்றாக இல்லை" என்றேன்.

"நான் சொன்ன கதை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று இவ்வளவு நாஸூக்காக தெரிவிக்கிறீர்களே! சாமர்த்தியக்காரர் தான் ஷார், நீங்கள்" என்றான் அம்பி.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான் கதையைப் பற்றி அர்த்தம் படும்படியாக எதுவும் சொல்லவில்லையே என்று எனக்குத் திகைப்பாக இருந்தது. பின் எப்படி அந்த அம்பி, கதை எனக்குச் சுவாரசியப்படவில்லை என்று தெரிந்து கொண்டான் என்று எனக்குப் புரியவில்லை. காபி கொண்டு வரப்போனவன் வரட்டும் என்று காத்திருந்தேன்.

காபியை ஓர் ஆற்று ஆற்றி என் முன் வைத்து விட்டு அம்பி என்னைப் பேசவிடாமல் பேசத் தொடங்கினான்: "நான் அண்ணா மலையுடன் வாசித்துக் கொண்டிருந்த நாட்களில் அவனுடன் அடிக்கடி அவன் வீட்டுக்குப் போயிருக்கிறேன். சிவகாமியை நான் பார்த்திருக்கிறேன். அவள் இறந்தது

சமீபத்தில்தான். வயதாகி விட்ட போதிலும்கூட அவள் முகத்திலே ஓர் அழகும் கவர்ச்சியும் களையும் இருந்தன. பார்ப்பதற்கும் வசீகரமாக இருக்கும். பேச்சும் ரஸமாக இருக்கும். தியாகராஜ மம்மேலி யாரையும் அவர் தம்பி, தங்கைகளையும் நான் பார்த்துப் பேசி அளவளாவி யிருக்கிறேன். அவர்களுடைய வீட்டிலே நான் சாப்பிட்டிருக்கிற பழங்களும் தின்பண்டங்களும் குடித்திருக்கிற பாலும் காபியும் கணக்கில் அடங்காது. இப்போது என்னடா என்றால் மம்மேலியார் வீட்டுப் பையன்கள் இங்கே வந்து கையில் காசில்லாமல் சாப்பிட்டு விட்டுக் கணக்குச் சொல்கிறார்கள்! அவர்களுக்கு எப்படி இருக்கிறதோ! எனக்கு வெட்கமாக இருக்கிறது.''

அடுத்த மேஜையில் அம்பியைக் கூப்பிட்டார்கள். அவன் போய் அவர்கள் கேட்டதைக் கொடுத்துவிட்டு வருமுன் நான் என் காபியைக் குடித்துவிட்டேன். அம்பி மறுபடியும் என் மேஜையண்டை வந்ததும், ''இந்தத் தடவை காபி பலே ஜோர்'' என்றேன் நான்.

''என்ன ஷார் கேலி செய்கிறேளே!'' என்றான் அம்பி.

''கேலியில்லை, அம்பி, கேலியில்லை. காபி இந்தத் தடவை உண்மையிலேயே முதல் தரமான காபிதான். ஆனால் மம்மேலியார்களில் மற்றவர்களைப் பற்றி....'' என்று நான் சொல்லுமுன் அம்பி குறுக்கிட்டுச் சொன்னான்: ''இன்றைக்கு நாழிகை ஆகிவிட்டது. எனக்குச் சொல்ல வேறு அதிகமாக எதுவும் தெரியாது. தெரிந்ததை இன்னொரு நாள் சொல்கிறேன்'' என்றான்.

வேறு வழியில்லை என்று கண்டவுடன் பில்லை வாங்கிக் கொண்டு கிளம்பினேன்.

பில் பணம் கொடுக்கும்போதுதான் எனக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது; ரகுவின் தகப்பனார் ஒரு டாக்டர் என்பது.

அதற்கும் ஹோட்டல் அம்பி சொன்ன கதைக்கும் இருந்த சம்பந்தம் என்ன என்றுதான் என்னால் தீர்மானித்துக்கொள்ள இயலவில்லை.

மணி ஐயர் ஹோட்டலிலிருந்து கிளம்பிப் பதை பதைக்கிற வெயிலில் நான் வீடு வந்து சேர்ந்த போது மணி நாலடித்துப் பத்து நிமிஷம் ஆகிவிட்டது. ஆனால் அதற்குள்ளாகவே ரகு விழித்தெழுந்து, முகம் கழுவிக் காபி சாப்பிட்டுவிட்டுச் சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பத் தயாராக இருந்தான்.

என்னைக் கண்டதும் ரகு சொன்னான்: ‘‘நான் கொஞ்சம் அவசரமாக ஒருவரைப் பார்க்க வெளியே போக வேண்டி யிருக்கிறது. ஆறுமணிக்குள் திரும்பிவிடலாம் என்று நினைக்கிறேன். ஆனால் நீ எனக்காகக் காத்திருக்க வேண்டாம். வழக்கம்போல நீ வாக் போ. முடிந்தால் மேம்பாலத்துக்கு மேற்கே ரெயில் லைனில் சரியாக இருட்டுவதன் முன் உன்னைச் சந்திக்கிறேன். அதிக நேரம் ஆகிவிட்டதானால் நான் இங்கே வீடு திரும்பி விடுகிறேன், நேராக’’ என்றான்.

‘‘சரி’’ என்றேன்.

ரகு போய்விட்டான். வெயில் தாழட்டும் என்று முந்திய தினம் வாங்கி வந்த பத்திரிகைகளில் எதெதையோ புரட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். நேரம் போனது தெரியவில்லை. ஐந்தேகால் மணிக்குத்தான் வாக் கிளம்பினேன். வடக்கு வீதியோடு கிழக்கே சென்று கீழவீதி வழியாக மணிக்கூண்டு வரையில் சென்றேன்.

நல்ல காபிக்கடை கண்ணில் பட்டால் அநாவசியமாகவே கூட எனக்குக் காபித் தாகம் எடுக்கத் தொடங்கி விடும். மணிக் கூண்டுக்கருகில் இருந்த ஹோட்டலில் காபி நன்றாகவே இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆகவே அன்றைத் தினத்தின் ஒன்பதாவது கப் காபி சாப்பிட எதிர்ப்பட்ட ஹோட்டலில் புகுந்தேன்.

மாலை வேளை; அதுவும் பலகாரம் காபி எல்லாமே நன்றாக இருக்கும். அந்த ஹோட்டலில் என்று பிரசித்த மாகையால், கூட்டம் சற்று அதிகமாகவே தான் இருந்தது. நம் ஊர் நாகரிகத்தின் இன்றைய சின்னம் வேதகோஷம் அல்ல. கோயில் குளம் அல்ல, பள்ளிக்கூடங்களும் அல்ல; காபி ஹோட்டல்கள் தான் என்பது என்னுடைய அநுபவம். காபி கிளப்பில் டவரா டம்ளர் கழுவுகிற சப்தமும் காபியைத் தரம் தெரிந்து ஆற்றுகிற ரசிகர்களின் முக பாவமும்

அந்தப் பில் தொகையை நாலு பேருக்கு மத்தியில் எடுத்துத் தருகிற அலட்சிய பாவமும்தான் இன்றைய உண்மையான நாகரிகத்தின் உயர்சின்னங்கள் என்று சிந்தித்தவாறே நான் உட்கார இடம் தேடினேன். ஷில்க் ஷர்ட், வைரப் பொத்தான்கள், பச்சை மோதிரம், தங்க மூக்குக் கண்ணாடி, மல்வேஷ்டி இவற்றை அணிந்து, பார்க்க வெகு வெகு அந்தமாக இருந்த ஒருவர் என்னை ஆங்கிலத்தில், "இப்படி வாருங்கள் ஸார்!" என்று நிரம்பச் சொந்தமாக அழைத்துப் போனார். அவர் சொந்தம் கொண்டாடியது என்னுடன் அல்ல; அந்த ஹோட்டலுடன் தான் என்று புரிய எனக்கு இரண்டு நிமிஷம் ஆயிற்று.

சற்றே இருட்டாக இருந்த இடத்தில் ஒரு மேஜையில் காலியாக இருந்த ஓரிடத்தைக் காட்டினார் அவர். நான் உட்கார்ந்து கொண்டேன். உடனேயே வந்து நின்ற அம்பியிடம், "காபி, சர்க்கரை டிகாக்ஷன் தூக்கலாக" என்றேன்.

"வேறு ஒன்றுமே வேண்டாமா ஷார்?" என்று அம்பி கேட்ட கேள்வியால் எழுந்த ஆசைகளை அடக்கிக்கொண்டு, அந்த மேஜையில் என்னுடன் உட்கார்ந்திருந்தவர்களைக் கவனித்தேன். ரெயில் சிநேகிதம் என்று சிநேகிதத்தில் ஒரு ரகம் இருப்பதுபோல் ஹோட்டல் சிநேகிதம் என்றும் ஒரு ரகம் உண்டு என்று எனக்குத் தெரியும். சிநேகத்துக்கு, ஐந்து நிமிஷம் பேச்சுக்கு உதவக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்தேன்.

நிமிர்ந்து பார்த்தவுடன் அவரைக் கண்டேன் நான். ஆமாம்; ரகுவும் நானும் பார்த்து, சந்திக்க விரும்பாமல் போய்விட்ட அந்த மனிதர் எனக்கு எதிர் சீட்டில் உட்கார்ந்திருந்தார். அவரே தான்; சதாசிவ மம்மேலியார் என்று ரகு சொன்ன அவரே தான்; சந்தேகத்துக்கு இடமே இல்லை. அதே அங்கவஸ்திரம், அதே வாக்கிங் ஸ்டிக், அதே முகம், அதே மீசை, அவரேதான்!

அவரும் ஒரு நிமிஷம் என்னை உற்றுப் பார்த்தார். முகத்தைச் சுளித்துக் கொண்டார், மீசையை ஒரு தரம் தடவி ஒதுக்கி விட்டுக்கொண்டார். அங்கவஸ்திரத்தைக் கழுத்தில் சரியாக இழுத்துவிட்டுக் கொண்டார். மீண்டும் ஒரு தரம் என்னைப் பார்த்தார்.

இதற்குள் அவரைச் சரியாகக் கவனிக்க எனக்குப் பொழுது இருந்தது. சாதாரணமாக அவரை யாரும் முதல் தடவையாகப் பார்க்கும்போது பெரிய மனிதர் என்றுதான் நினைப்பார்கள். முகத்திலும் சரி, உடையிலும் சரி,

பாவனையிலும் சரி ஒரு கம்பீரம் இருந்தது. ஆனால் அந்தக் கம்பீரத்தை மறைத்துக் கொண்டு லேசாக நிழல் போலப் படர்ந்திருந்த ஏதோ ஒன்று அவரைப்பற்றி முதல் பார்வையில் நினைப்பது தவறாகவேதான் இருக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தியது.

சற்றே நரைத்த மீசை, நல்ல உயரம். சிவந்த மேனி, விசாலமான நெற்றி, சற்றே பின்னால் ஒதுங்கின நரைத்த கேசம், நீண்ட கைகள், நீளமான விரல்கள், ஜரிகை பளபளத்த விசிறி மடிப்பு அங்கவஸ்திரம், ஸில்க் ஜிப்பா, கையில் பச்சை, சிவப்பு நீலக்கற்கள் பதித்த மோதிரங்கள். அவர் கையில் அணிந்திருந்த மோதிரங்களை ஒரு தரம் பார்த்துவிட்டு என் கை விரலிலிருந்த ஒற்றைக் கல் நீல மோதிரத்தைப் பார்த்துக் கொண்டேன், மழை மேகங்களால் மூடப்பட்டிருந்த வானம்போல என் மோதிர நீலம் ஒளியில்லாமல் இருந்தது.

சதாசிவ மம்மேலியார் அந்த மோதிர விஷயமாகவே என்னுடன் பேச்சுக் கொடுத்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "நல்ல நீலமாக இருக்கிறதே! இந்த மாதிரி நீலம் எல்லாம் இந்த நாட்களிலே கிடைக்கிறதில்லை ஷார்" என்றார்.

நான் மீண்டும் என் கை மோதிரத்தையும் அவர் கை மோதிரங்களையும் பார்த்தேன். "அப்படி ஒன்றும் நல்ல கல் இல்லையே இது" என்றேன் நான்.

"மாமனார் வீட்டுப் பிரசெண்டாக இருக்கும். அதனால் தான் அதன் மகிமையை ஒப்புக்கொள்ள மனது வரமாட்டேன் என்கிறது" என்றார் அவர்.

கெட்டிக்காரர்தான் என்று தீர்மானித்துக் கொண்டேன். சாமர்த்தியமாகப் புது மனிதர்களிடம் பழக அறிந்தவர். சிரித்துக் கொண்டே நான் சொன்னேன்: "தேவலையே! தஞ்சாவூர்க்காரர் என்பதை இரண்டு வாக்கியம் பேசுவதற்குள்ளேயே காட்டி விட்டீர்களே!" என்றேன்.

"நீங்கள் எந்த ஊரோ?" என்று விசாரித்தார் அவர்.

"நானும் தஞ்சாவூர் ஜில்லாதான். கும்பகோணத்துக்குப் பக்கத்திலே, சாத்தனூர்" என்றேன் நான்.

சதாசிவ மம்மேலியார் சிரித்துக் கொண்டே சொன்னார்: "அப்ப சரிதான்; நான் ஜாக்கிரதையாகவே இருந்து கொள்கிறேன்."

நானும் சிரித்தேன்.

இதற்குள் என் காபியும் வந்துவிட்டது, காபியை எடுத்து ஆற்றிக்கொண்டே நான் சொன்னேன்; "என்ன சொன்னாலும் தஞ்சாவூரிலே இன்றைக்கும் காபி கிடைக்கிற மாதிரி வேறு எந்த ஊரிலுமே கிடைப்பதில்லைதான்."

"இந்த ஹோட்டலிலே வெகு நன்றாக இருக்கும்" என்றார் சதாசிவ மம்மேலியார்.

எனக்குப் பிடித்த இன்னொரு காபி கிளப்பையும் அத்துடன் பேச்சு வாக்கில் இயலுமானால் அந்தக் கிளப்பில் அவருடைய அண்ணாவின் பிள்ளைகள் இருவரையும் நான் பார்த்ததையும் தெரிவித்துக் கொள்ளலாமே என்று எண்ணி சொன்னேன்; ஐயன் கடைத் தெருவில் காசுக் கடைகளுக்கு மத்தியில்....

"ஆமாம் மணி ஐயர் கிளப்பிலும் காபி நன்றாக இருக்கும். ஆனால் அதைவிடக் 'கோதுமை ஹல்வா' வெகு நன்றா யிருக்கும், முன்னெல்லாம் அவர்கள் கடையிலிருந்து தினம் இரண்டு சேர் அல்வா வீட்டுக்குவரும்!" என்றார் சதாசிவ மம்மேலியார். அவர் இதை பெருமூச்சுடன் சொல்லவில்லை, பெருமையாகவும் சொல்லவில்லை. முன் நடந்த ஒரு காரியம் இப்போது நடப்பதில்லை. என் லேசான ஓர் உண்மையைச் சாவதானமாகச் சொல்லுகிற பாணியிலே சொன்னார்.

நான் காபியை ருசி பார்த்துச் சாப்பிட்டேன். நான் காபி சாப்பிட ஆரம்பிக்கும் முன்னரே சதாசிவ மம்மேலியார் காபி சாப்பிட்டு முடித்துவிட்டார். பையன் அவர் முன் பில்லைக் கொண்டு வந்து வைத்தான். அவர் உடனே எழுந்து போய்விட வில்லை. நான் காபி சாப்பிட்டு முடிக்கிற வரையில் எழுந்திருக்காமல் கார்த்திருந்தார்.

அவர் சொன்னார், "நீங்கள் தேவலையே! ஊருக்குப் புதியவராக இருந்தாலும் வந்ததும் வராததுமாக நல்ல ஹோட்டல்களை எல்லாம் விசாரித்துத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களே!"

பையன் என் பில்லையும் கொண்டு வந்தான். அதையும் வாங்கிக் கொண்டு கொடுத்துவிட விரும்புகிறவர் மாதிரி "இங்கே கொடு" என்றார் சதாசிவ மம்மேலியார். நான் மரியாதைக்காக "வேண்டாம் நானே கொடுத்து விடுகிறேன்.

உங்கள் பில்லையும் கொடுங்கள்'' என்றேன். அவர் வேண்டாம் என்று சொல்ல வில்லை. உடனே தம் பில்லையும் கொடுத்துவிட்டார்.

ஒன்பதரையணாக் கொடுத்துவிட்டு வெளியே வந்தோம். மணிக்கூண்டுக் கடிகாரம் மணி ஐந்தே முக்கால் என்று காட்டியது. இன்னும் இருட்டத் தொடங்கவில்லை. மணிக்கூண்டின் உச்சியில் சூரியன் அஸ்தமனக் கிரணங்கள் விழுந்து அதை அழகுபடுத்திக் கொண்டிருந்தன. செம்மண் புழுதி நாலு ஆள் உயரத்துக்குக் கிளம்பி எங்கும் பரவியிருந்தது. சலவை செய்து துல்லிய வெள்ளையாக இருந்த அவருடைய வேஷ்டி முனையை ஒரு கையால் தூக்கிப் பிடித்துக்கொண்டு பெரிய மனிதர்கள் தோரணையில் மெதுவாகக் கம்பீரமாக நடந்தார் மம்மேலியார்.

என்னைக் கேட்டார் ''வாக்தானே போகிறீர்கள் ஸ்டேஷன் பக்கம் போகலாமே. நானும் அப்படித்தான் போகிறேன்'' என்றார்.

''போகலாம்'' என்று சொல்லிவிட்டு நானும் அவருடன் அவருக்குச் சரியாக மெதுவாகவே நடந்தேன்.

தெரு ஓரத்தில் அரட்டை அடித்துக்கொண்டு நின்றிருந்த வாலிபர்கள் நால்வர் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது எனக்கு. நான் அவர்களைத் தாண்டிய பிறகு திரும்பிப் பார்த்தேன். அவர்கள் என்னைப் பார்த்துத்தான் சிரித்துக் கொண்டிருந்தார்கள். நான் திரும்பிப் பார்த்ததும் அவர்கள் சட்டென்று தெருப் பக்கம் பார்ப்பதுபோலப் பார்த்துக் கொண்டு சிரித்தார்கள். அவர்களில் ஒருவன் என் காதில் விழும்படியாக உரத்த குரலில் சொன்னான்: ''இன்றையச் செலவுக்கு ஆள் கிடைத்துவிட்டதையா!'' என்றான். எனக்குக் கூடச் சிரிப்புத்தான் வந்தது.

அவன் சொன்னது என் காதில் விழுந்த மாதிரி சதாசிவ மம்மேலியாரின் காதிலும் விழுந்திருக்கத்தான் வேண்டும்! விழுந்திருக்குமானால் அவர் என்ன நினைத்தார் என்று அவர் முகபாவத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம் என்று நிமிர்ந்து அவரைப் பார்த்தேன். அவர் மீசையை உருவித் தடவி விட்டுக் கொண்டிருந்தார். நான் அர்த்தம் புரிந்துகொள்ளும்படியாக அவர் முகத்தில் எதுவும் இல்லை; எவ்விதமான பாவமும் இல்லை.

இதற்குள் அந்த வாலிபர்களில் வேறு ஒருத்தன் முதலில் சொன்னவனுக்குப் பதில் சொல்லுகிற மாதிரி என் காதில் விழும்படியாகவே சொன்னான். ''புதுப் புள்ளியைப் பார்த்தாலே தெரிகிறதே! அசட்டுப் புள்ளிதான். நிறையக் காசை விட்டுவிட்டு அப்புறம் அம்மாவிடம் போய் அழும்? 'ஹூம் ஹூம்' என்று அழுதும் காட்டினான். என்னை அவர்களில் ஒருவன் அப்படி விவரித்தது பற்றி எனக்கே சிரிப்பாக இருந்தது. சிரித்துக் கொண்டே திரும்பிய நான் மீண்டும் ஒருமுறை அந்த வாலிபர்களைப் பார்த்தேன். நான் சிரித்ததை அவர்கள் கவனித்தார்கள். தாங்கள் பேசியது என் காதில் விழுந்தது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

சதாசிவ மம்மேலியார் சொன்னார்: ''இப்போது வெளிச்சத்தில் வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது: உங்களை இரண்டொரு நாட்களுக்கு முன் இதே இடத்தில் பார்த்தேன்; அதனால்தான் கவனத்தில் இருந்தது. யார் யார்... யாருடன் பார்த்தேன் என்றுதான் சட்டென்று ஞாபகம் வரவில்லை'' என்றார்.

''என்னோடு படித்தவன்; ரகுராமன் என்று ஒருவன் வடக்கு வீதியில்....'' என்று நான் தொடங்கினேன்.

''ஆமாம், ஆமாம். ரகுவோடுதான் போய்க் கொண்டிருந் தீர்கள். அதான் அன்று உங்களைக் கவனித்தேன். இரண்டுபேரும் அவசரமாகப் போய்க் கொண்டிருந்தீர்கள். கூப்பிடலாமா என்று கூட நினைத்தேன்; வேண்டாம் என்று போய்விட்டேன். ரகுவை எனக்கு நன்றாகவே தெரியுமே!'' என்றார் மம்மேலியார்.

''ரகு எனக்கு மிகவும் வேண்டிய நண்பன். என்னோடு படித்தவன். எனக்கு இருபது இருபத்தைந்து வருஷங்களாகத் தெரியும். நானும் அவனும் அண்ணா தம்பி மாதிரி'' என்றேன் நான்.

சதாசிவ மம்மேலியார் சொன்னார்: ''லஷ்த்திலே தேடினாலும் ரகுவைப்போல் ஆசாமி கிடைக்கிறது வெகு கஷ்டம். தங்கமான மனுஷ்யன் என்றால் அவனைத் தான் தங்கமான மனுஷ்யன் என்று சொல்லவேண்டும். எனக்கு நன்றாகவே தெரியும் உங்கள் நண்பரை.''

மற்றவர்கள் யாரையாவதுபற்றி யாராவது இப்படி ஏதாவது சொன்னால் கதை அளக்கிறார்கள் என்று நான் ஒதுங்கி விடுவேன். ஆனால் ரகுவைப்பற்றிய

வரையில் இதைத் தவிர வேறு அபிப்பிராயம் யாருக்கும் இருக்க முடியாது என்பது நிச்சயம். அவனைப்பற்றி இவ்வளவு நல்ல அபிப்பிராயம் வைத்திருந்த மம்மேலியாரைப்பற்றி ரகு ஏன் அவ்வளவு கசப்புடனும் அலட்சியத்துடனும் பேசவேண்டும் என்றுதான் தெரியவில்லை எனக்கு.

‘‘நீங்கள் வந்து ரொம்ப நாள் ஆகிறதோ?’’ என்று கேட்டார் சதாசிவ மம்மேலியார்.

‘‘ஏழெட்டு நாள் இருக்கும். சரஸ்வதி மஹாலிலே கொஞ்சம் படிக்கலாம் என்று வந்தேன். இன்னும் நாலைந்து நாளாவது இருப்பேன்’’ என்றேன்.

‘‘ஆமாம், அன்று என் தம்பிகூடச் சொன்னான்: அன்று ரகுவையும் வேறு யாரோ ஒருவரையும் சரஸ்வதி மஹால் வாசலில் பார்த்ததாகச் சொன்னான்’’ என்றார் சதாசிவ மம்மேலியார்.

இதற்குள் நாங்கள் புது ஆற்றுப் பாலத்தண்டை வந்து விட்டோம். பாலத்தின்மேல் சாய்ந்துகொண்டு தலை மயிரை அவிழ்த்துவிட்டு ஆற்றிக்கொண்டிருந்த ஒருவர் எங்களைக் கண்டதும் எழுந்து வந்தார். ‘‘என்ன சதாசிவ அண்ணே! தினம் போகிறமாதிரிதானே!’’ என்று மம்மேலியாரைக் கேட்டார்.

இப்படிக் கேட்டவருக்கு வயது ஐம்பது, ஐம்பத்திரண்டு இருக்கலாம் என்பதை அவர் முகம் காட்டியது. ஆனால் அவர் உடலிலே தளர்ச்சி இல்லை. அசப்பிலே பார்த்தால் மளிகைக் கடை வைத்திருக்கிற முதலியார் என்றுதான் அனுமானித் திருப்பேன்.

‘‘இவாள் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர். பெரிய மிராசு. வியாபாரமும் உண்டு. எல்லாம் போதாது என்று சமீபகாலத்தில் ஜில்லா கான்டிராக்ட் வேறு எடுக்கத் தொடங்கியிருக்கிறார். ரத்தினவேலு முதலியார் என்று பெயர்’’ என்றார் மம்மேலியார்.

‘‘நமஸ்காரம்’’ என்று முதலியாரைக் கும்பிட்டேன் நான்.

சதாசிவ மம்மேலியார் சொன்னார்: ‘‘ரத்தினவேலு என்கிற பெயர் வெறும் பெயர் அல்ல. ரத்தினப் பரீக்ஷையிலே மிகவும் தேர்ந்தவர் இவர்.’’

நான் கும்பிடக் கை தூக்கியபோது என் கை மோதிரம் மம்மேலியாருடைய கண்ணில் பட்டுவிட்டது போலும்.

அவர் ரத்தினவேலு முதலியாரிடம் சொன்னார்: ''ஐயா ஒரு நீலக்கல் மோதிரம் போட்டிருக்கிறார். ரொம்ப நல்ல கல்'' என்று சொல்லிக் கொண்டே என் கை மோதிரத்தைக் கழட்டித் தரச் சொல்லி, ''இதைப் பாருங்கள்'' என்று முதலியாரிடம் கொடுத்தார்.

முதலியார் அலட்சியமாக வாங்கி, அலட்சியமாகவே பார்த்துவிட்டு, ஒரு நிமிஷத்தில் ''புது நீலமுங்க'' என்று தீர்ப்புச் சொல்லிவிட்டு, என் கையில் மோதிரத்தைக் கொடுத்தார்.

எனக்கு என் மோதிரக் கல் பழைய நீலமா புது நீலமா? அது என்ன மோதிரம் என்பதையெல்லாம் பற்றிக் கவலையே இல்லை. அதை வைத்து இந்த மனிதர்கள் இருவரும் தங்கள் குணபாவங்களைப் பறைசாற்றிக் கொண்டார்கள் என்பது திருப்தியளித்தது.

என் மோதிரக் கல் புது நீலம் என்று முதலியார் சொன்னது சதாசிவ மம்மேலியாருக்குக் கோபமூட்டியது போலும். ''புது நீலத்துக்கும் பழைய நீலத்துக்கும் இந்த அஸ்தமன வேளையிலே நடுத் தெருவிலே நின்று பார்த்தால் வித்தியாசம் தெரியாதுதான்'' என்றார் மம்மேலியார்.

இதைச் சொல்லிவிட்டு முதலியாரைப் பார்த்துக் கண்ணடித் தாரோ மம்மேலியார் என்றுகூட எனக்குச் சந்தேகம் சந்தேகந்தான். ஆனால் எனக்கு நிச்சயமாகத் தெரியாது.

ஒரு விநாடி கழித்துச் சதாசிவ மம்மேலியார் சொன்னார்: ''பணக்காரர்கள் வீட்டிலே மாப்பிள்ளைக்குப் போட்டிருக்கிற மோதிர நீலம் புது நீலமாமே! முதலியாருக்கு ரத்தினப் பரீட்சை அவ்வளவாகச் சரியாக வராது போலத்தான் இருக்கு'' என்றார்.

பிறகு, ''நில்லுங்க நீங்க. முதலியார், நாங்கள் வரோம்'' என்று கூறிவிட்டு கம்பீர நடைபோட்டு மேலே நடந்தார் மம்மேலியார். நான் பத்தடி முன்னால் போய் விட்டுத் திரும்பிப் பார்த்தேன். முதலியார் முகத்திலே பெருத்த ஏமாற்றம் படர்ந் திருப்பதுபோல் இருந்தது.

நாங்கள் பணக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்தறிந்துகொண்டு, அதைச் சாமர்த்தியமாக வெளியிடவும் வெளியிட்டு என் மதிப்பைச் சம்பாதிக்க முயன்ற மம்மேலியாரின் சாமர்த்தியத்தை வியந்து கொண்டே நான் அவரைப் பின் தொடர்ந்தேன், ரயில்வே ஸ்டேஷனை நோக்கி.

# 7

புது ஆற்றின் பாலத்திலிருந்து ரெயில்வே ஸ்டேஷன் போய்ச் சேருவதற்குள்ளாக ஏழெட்டுப் பேர் வழிகளைப் பார்த்தோம். அதாவது சதாசிவ மம்மேலியார் பார்த்தார்; கும்பிட்டார்; நின்று இரண்டொரு வார்த்தைகள் பேசினார். என் தொழில், நிலை எல்லாவற்றையும் கெட்டிக்காரத்தனமாக இரண்டொரு பிரச்சனோத்தரங்களில் தெரிந்துகொண்ட மம்மேலியார், எதிர்ப் பட்ட தம் நண்பர்கள் எல்லோருக்கும் பெருமையாக என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

மம்மேலியாருக்கு வேண்டியவர்கள் என்று அன்று நான் சந்தித்த ஏழெட்டுப் பேர்வழிகளையும் பற்றி ஒரு விஷயம் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அவர்கள் எல்லோருமே சதாசிவ மம்மேலியாரைப் போலவே நடுத்தர வயதினர். ஓரளவு நல்ல ஸ்திதியில் இருந்தவர்கள் மாதிரியே காணப்பட்டார்கள். அவர்கள், கூடிய வரையில் மம்மேலியார் அருகில் நின்று அதிக நேரம் பேசாமல் தப்பித்துக்கொண்டு போய்விட முடியுமானால் தப்பித்துப் போய்விடுவது என்கிற உத்தேசத்துடன் அவசரமாக நகர்ந்துவிட்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றிற்று. ஆனால் அவர்களிடம், ஒரு பெரிய மனிதர் தோரணையில், சற்று அதிக உயரத்திலிருந்து பேசுகிறவர் மாதிரித்தான் பேசினார் மம்மேலியார். அவர்கள் ஏழெட்டுப் பேரும் என்னைப் பார்த்த பார்வையும் எனக்குப் புரிகிற மாதிரி தான் இருந்தது. ஓர் அசட்டுச் சிரிப்புடன், வெளியே சொல்ல முடியாத ஒரு சிந்தனையுடன் "யாரடா இவன், இவருக்கு அகப்பட்ட புதுச் சிநேகிதன்?" என்கிற பாவத்தில் என்னைப் பார்க்கிற மாதிரியாக எனக்குத் தோன்றியது. உண்மையோ, அல்லவோ; அவர்கள் எல்லாருமே என்னைப் பரிதாபப்பட்ட கண்கள்கொண்டு பார்ப்பது மாதிரித் தோன்றியது.

குடிகாரனாகவே இருக்கட்டும். அதனால் என்ன? தெரிந்தோ தெரியாமலோ குடிக்கிற மனிதர்கள் உலகில் எத்தனையோ பேர்வழிகள் இல்லையா? எத்தனை பெரிய மனிதர்கள் ரகசியத்தில் பெருங்குடியர்களாக இருக்கிறார்கள்? அதற்காக ஏன் இந்தப் பார்வை? இப்பரிபவம்? ஏன் இந்த.....

பாழ்த்துப் போய்விட்ட ஒரு பெருங் கோட்டையின் தனிக் கல்லாகவே, முட்டுக்கல்லாகவே இருக்கட்டும் இந்தச் சதாசிவ மம்மேலியார்; அவரோடு ஒருநாள், ஒரு மணி நேரம் பேசிக் கொண்டு போவதற்குள்ளாகவே எனக்கு அசட்டுப்பட்டமும் மற்றும் என்ன என்ன விதமான பட்டங்களோ கட்டிவிடுவார்கள் போல் இருந்ததே! அப்படி என்ன ஐயா இந்தச் சதாசிவ மம்மேலியாரிடம் விசேஷம்! அதைத்தான் அறிந்துகொள்வோமே என்று இருந்தது எனக்கு.

இது என்ன அதிசயம் என்று எண்ணியவனாக, சுற்றுப் புறத்தில் நடப்பதை எல்லாம் ஊன்றி கவனிப்பவனாக நான் நடந்தேன். மம்மேலியார் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் தயங்காமல் பதில் கொடுத்துக் கொண்டு வந்தேனே தவிர, என் மனம் சம்பாஷணையில் இல்லை. மம்மேலியாருடன் போய்க் கொண்டிருந்த என்னைப்பற்றி அந்தச் சமயத்தில் பார்த்தவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று, எதிர்ப்பட்டவர்களின் முகத்தை எல்லாம் கவனித்துக் கொண்டே நடந்தேன் நான். அவர் கேட்டதைப்போல் நூறு மடங்கு எண்ணிக்கையில் அதிகமான பிரச்சினைகள் என் மனத்தில் எழும்பிக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றையெல்லாம் நேரடியாகக் கேட்க முடியாது; கேட்டாலும் பதில் நேர்முகமாக வந்து விடாது. இருந்தும் நான் கேட்கிற கேள்விகளைக் கேட்டு விட்டால், அவற்றிற்கு வருகிற பதில்களைக் கொண்டு ஓரளவு சில விஷயங்களை அனுமானித்துக் கொள்ளலாம் தான். என் கேள்விகளுக்கு மம்மேலியார் தயங்காமல் பதிலும் அளிப்பார் என்றுதான் தோன்றிற்று. ஆனால் நான்தான் எதுவும் கேட்காமல் காலஹரணம் பண்ணினேன்.

சதாசிவ மம்மேலியார் சொன்னார்: ‘‘நீங்கள் இருக்கிற உயரத்துக்கு, ‘வாக்கிங் ஸ்டிக் வைத்துக் கொண்டால் நன்றாக இருக்குமே!’’

‘‘நன்றாக இருக்கும்’’ என்றேன் நான். சிரித்துக் கொண்டே.

‘‘தஞ்சாவூரிலே பத்து நாள் இருக்கிறீர்கள் அல்லவா? அதற்குள்ளாகவே, நான் உங்களுக்கு ஜோரான ‘வாக்கிங் ஸ்டிக்’ ஒன்று தயார் செய்து தருகிறேன்’’ என்றார் சதாசிவ மம்மேலியார்.

‘‘அப்படியானால் நீங்கள் கையில் வைத்திருக்கும் கழி நீங்களே தயார்செய்ததுதானா?’’ என்று கேட்டேன் நான் ஆச்சரியத்துடன். அவருடைய வாக்கிங் ஸ்டிக்கைக் கையில் வாங்கிப் பார்த்தேன். வழவழ வென்று தேய்த்து, கைப்பிடியில் சிவப்பும் பச்சையும் வெள்ளையுமாக எதையோ பதித்து வைத்திருந்தார். பளபளவென்று மெருகு ஏற்றியிருந்தது. நாகப் பாம்பின் தலைபோல் பிடியைச் செய்திருந்தார். ‘கொம்பிலே பாம்பின் நெளிவைக் காட்டுவதென்பது சிரமமான வேலை தான், அடேயப்பா!’ என்றேன் நான்.

‘‘பொழுது போவதற்கு வேலை எனக்கு ‘வாக்கிங் ஸ்டிக்’ தயார் செய்வதுதான். நேற்றைக்குத்தான் கொம்பிலே சீவி இதற்குப் பிடிபோட்டேன். அரம் பிடித்த கையைப் பாருங்களேன்’’ என்று உள்ளங்கையையும் விரல்களையும் காட்டினார் சதாசிவ மம்மேலியார்.

அவருடைய கட்டைவிரல், கட்டைவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையேயுள்ள இடம், உள்ளங்கை. விரல் நுனிகள் எல்லாம் காய்த்துப்போயிருந்தன. ‘‘சிரமமான வேலைதான். ஆனால் இந்த ‘வாக்கிங் ஸ்டிக்’ அழகாகத் தான் இருக்கிறது’’ என்றேன் நான்.

‘‘இதென்ன பிரமாதம், இதைப்போல் பத்து மடங்கு அழகான வாக்கிங் ஸ்டிக்கெல்லாம் வேலை செய்து யார் யாருக்கோ இனாமாகக் கொடுத்திருக்கிறேன். ஏரழிஞ்சிக் கழி என்று ஒன்று இருக்கிறது, அதற்கு அன்னப்பட்சி மூக்குப் போல் ஒரு பிடி தயார் செய்து கொண்டிருக்கிறேன். அதை வேலை செய்து உங்களுக்குத் தருகிறேன்’’ என்றார் சதாசிவ மம்மேலியார்.

அவர் வாக்கிங் ஸ்டிக்கை அவரிடம் திருப்பிக் கொடுக்கும் போது என் கை விரலிலிருந்த நீல மோதிரம் மீண்டும் அவர் கண்ணில் பட்டுவிட்டது போலும். அவர் சொன்னார்: ‘‘மடப்பயல், அந்த முதலி இதைப் போய்ப் புது நீலம் என்று சொன்னானே!’’

‘‘ஏது இந்த மோதிரத்துக்கே சனியன் பிடித்துவிட்ட மாதிரி இருக்கிறது’’ என்று எண்ணினேன் நான். அந்த விநாடியில்தான் எனக்குப் புரிந்தது; சற்றும் நிதானம் தவறாமல் என்னோடு வந்த அந்தச் சதாசிவ மம்மேலியார் ஏற்கனவே சற்றுக் குடித்திருந்தார் என்பது புரிந்தது எனக்கு. எங்கள் உபாத்தியாயர்களில் ஒருவர்,

“ஆளுக்கு ஆள்” என்று ஆல்கஹாலுக்கு வியாக்கியானம் செய்வார் அந்த நாட்களில். அதுபோல் மம்மேலியாருக்குள் வேறு ஓர் ஆள் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தான் என்பது எனக்கு அப்போதுதான் புரிந்தது. எனக்குக் குடிகாரர்களான சிநேகிதர்கள் பலர் உண்டு; அதாவது குடிகாரர்கள் என்று குறைகூறி நான் யாருடைய நட்பிலிருந்தும் விடுபட்டுக் கொள்ள முயன்றதில்லை. மற்றப் பாபங்கள் செய்பவர்களிடையேபோல், குடிகாரர்களிடையேயும் நல்லவர்கள் — வெகு வெகு நல்லவர்கள் உண்டு என்பதுதான் என் அநுபவம்.

இதற்குள் நாங்கள் ரெயில்வே ஸ்டேஷனை அடைந்து விட்டோம். மாலை வேளையில் இரண்டு மூன்று ரெயில்கள் வருகிற சமயம் அது. ஆகவே ஸ்டேஷனில் கூட்டம் அன்று அதிகமாகவேதான் இருந்தது. கூட்டத்தில் பலர் மம்மேலியாருக்குக் கைகூப்பிவிட்டு நகர்ந்தார்கள். ஸ்டேஷன் அதிகாரிகள் சிலர் கும்பிட்டார்கள். ஒருவரைக் கையைக் காட்டி அழைத்துத் தன் பந்து என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் மம்மேலியார்.

பிளாட்பாரத்திற்குள் போனதும் மம்மேலியார் “பார் வரையில் போவோமே!” என்றார் கொஞ்சம் பதற்றத்துடன். அதைச் சொல்லும்போது அவர் நாக்கு தாகத்தால் தவித்தது; நடை சற்றுத் தள்ளாடிற்று; குரல் லேசாகக் கம்மியது.

“பார் வரையில் போக ஆட்சேபம் இல்லை” என்றேன் நான்.

“நீங்கள் ஏதாவது சாப்பிடுவது உண்டா?” என்று கேட்டார் மம்மேலியார்.

“இல்லை; ஆனால் நீங்கள் சாப்பிடலாம். அதுபற்றி எனக்கு எதுவும் ஆட்சேபமில்லை. நான் உடன் இருக்கிறேன்” என்றேன் நான்.

ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அந்தக் கூட்டத்தில் இருவரும் அதாவது மம்மேலியார் நடக்க நான் பின் தொடர்ந்தேன். சற்று வேகமாகவேதான் நடந்தோம். அங்கிருப்பவர்கள் எல்லோரும் என்னையே உற்றுப் பார்த்ததுபோல் எனக்குத் தோன்றியது. ஆனால் சதாசிவ மம்மேலியாருடன் சிநேகம் கொள்பவர்கள், இதையெல்லாம் பாராட்டினால் சரிப்பட்டு வராது என்று என்னையே தேற்றிக் கொண்டு நடந்தேன் நான்.

இதுவரை இளம்போதை, மம்மேலியாருக்கு என்று தான் நான் எண்ணியிருந்தேன். அவர் பார் ரூம் கதவைத் திறக்கத் தடுமாறியபோது முக்கால் போதையில் இருந்தார் மனிதர் என்றுதான் எனக்குத் தோன்றியது. நான் இரண்டு லெமனேடுகள் சாப்பிட்டேன்; மற்ற நேரங்களில் ஒன்றன்பின் ஒன்றாகச் சிகரெட்டுகளைப் பற்றவைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். பில் எது ஆனாலும் தந்துவிடுவேன் என்பதை மம்மேலியார் கெட்டிக்காரத் தனமாக ஊர்ஜிதம் செய்துகொண்டு தேவைக்கு ஆர்டர் கொடுத்தார். எட்டு, ஒன்பது ரூபாய் வரையில் ஆகி விட்டது.

இருவருமே அதிகமாய்ப் பேசவில்லை. ஏதாவது நான் பேசினாலும் மம்மேலியார் ஒரு வார்த்தைதான் பதில் சொல்லுவார். மற்ற நேரம் எல்லாம் ஏகாக்கிர சித்தமாகத் தவம் செய்யும் மாமுனியைப்போல் எதிரேயிருந்த கிளாஸில் கண்களைச் செலுத்தி, கிளாஸிலிருந்த மதுவின் குணாதிசயங்களைப் பஜிப் பதிலும் ஆனந்திப்பதிலும் லயித்திருந்தார். அவர் லயத்தை நான் கலைக்க விரும்பவில்லை.

நான் சில சமயம் என்னையும் மீறிப் பேச்சை நகர்த்தப் பார்த்தேன். பேச்சு அவ்வளவாக நகர மறுத்தது. “என்ன சொல்றீங்க?” என்று கனவிலிருந்து விழித்தவர் போல் கேட்டார் சில சமயம் மம்மேலியார். அதற்குப் பிறகு என்ன கேட்டாலும் பதில் தரமாட்டார். என் குரல் கேட்கும்போது லயம் கெட்டு விட்டதுபோல் முகத்தைச் சுளித்துக் கொள்வார். ஏன் கேட்டோம் என்று இருக்கும் எனக்கு; என்ன கேட்டோம் என்பது மறந்து விடும்.

நான் வெளியே புஸ்தகக் கடைக்குப் போய் ஏதாவது புதுப் புஸ்தகம் வந்திருக்கிறதா பார்க்கலாமா என்று எண்ணினேன். அதே சமயம் கிளாசைக் காலியாகக் கீழே வைத்துவிட்டு மம்மேலியாரே எழுந்துவிட்டார். ‘இந்தக் கிழட்டுக் குடிகாரனிடம் ஏண்டா வந்து மாட்டிக் கொண்டோம் என்று இருக்கிறது உங்களுக்கு; அல்லவா?’ என்று கேட்டுக்கொண்டே. பிரியத்துடன் என் கையில் கை கோத்துக்கொண்டு எழுந்தார் அவர்.

பார் ரூமிலிருந்து வெளியே வரும்போது மீண்டும் அவர் கண்ணில் என் கை மோதிரத்திலிருந்த நீலக் கல் பட்டுவிட்டது. ‘அந்த நீலக் கல். வெகு நல்ல கல். எங்கே இப்படிக் கொடுங்கள் அதை’ என்று வாங்கிக்கொண்டார்.

தலைக்கு மேலே உயர்த்தி எலெக்டிரிக் லைட் வெளிச்சம் அதில்பட வைத்துக்கொண்டு அரைக்கண் மூடியபடியே அதையே ஒரு நிமிஷம் பார்த்தார். ''இது புது நீலம் என்றானே படுபாவி'' என்று அவன் அதை அப்படிச் சொன்னவன் மன்னிக்க முடியாத ஒரு பாவத்தைப் பண்ணிவிட்டவன் என்கிற தொனியில் கூறினார். இரண்டு நிமிஷங்கள் பூராவும் அப்படியே அந்த நீலக் கல்லைப் பார்த்துக் கொண்டு நின்றார், பிறகு மோதிரத்தை என்னிடம் கொடுத்தார்.

''நான் கொஞ்சம் மேம்பாலம் வரையில் — வாக் போய் விட்டுத் திரும்புகிறேன்'' என்று சொன்னேன் நான்.

''நானும் வருகிறேனே'' என்றார் மம்மேலியார்.

எங்கள் இருவருக்கும் எதிரில் இருந்த கதவுக்கு அப்பால் பிளாட்பாரத்திலிருந்து ரகுவின் குரல் என் காதில் விழுந்தது. ரகுவை நான் அச்சமயம் அந்த இடத்தில் எதிர் பார்க்க வில்லை. சதாசிவ மம்மேலியார் என்னுடன் இருக்கும் போது நான் ரகுவைச் சந்திக்க விரும்பவில்லை. அவருடன் என்னை அச்சமயம் பார்த்தால் அவன் தப்பாகவும் நினைக்கக்கூடும் என்றே தோன்றிற்று. அவனுக்கும் மம்மேலியார்களுக்கும் இடையே இருந்த மர்மம் என்ன என்பது எனக்குத் தெரியாது. அவனாகச் சொல்வதாக இல்லை. நானாகவே கேட்ட பல தடவைகளிலும் ''பின்னர்ச் சொல்கிறேன்'' என்று தட்டிக் கழித்துக்கொண்டே வந்தானே தவிர வேறு ஒன்றும் சொல்ல மறுத்துவிட்டான். அவன் சொல்ல விரும்பாததை நான் அறிந்து கொண்டுவிடக் கூடாது என்று நினைத்த ஒரு விஷயம் இருந்தது, வெளிப்படையாகவே தெரிந்தது. அவனாகச் சொல்ல விரும்பாததை நான் மம்மேலியாரிடமே கேட்டுத் தெரிந்துக் கொள்ள விரும்பி அவரை வலியத் தேடிப் போய்ச் சிநேகிதம் பிடித்துக் கொண்டதாக அவன் நினைக்கலாம். ''சீ! இவனையும் என் நண்பனாக எண்ணினேன்!'' என்று அவன் அலட்சியமாக நினைக்கலாம்.

இப்படித் தவறாக நினைக்க இடம் இருந்தது என்று நானே ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியதாக இருந்தது.

உண்மைதான். சதாசிவ மம்மேலியாரைத் தேடிப் போக வில்லை. ஆனால் அவர் அகஸ்மாத்தாக எதிர்ப்பட்டவுடனே மர்மத்தை விளக்கிக்கொள்ள ஒரு

சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்று எண்ணத்தான் எண்ணினேன். தெய்வாதீனமாக ஏற்பட்ட இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடக் கூடாது. மர்மம் ஏதாவது உண்டானால் அதை அறிந்துகொண்டுவிட இதுவே தக்க தருணம் என்று நான் எண்ணியது உண்மைதானே! அவருடன் சாமர்த்தியமாகப் பேச்சுக் கொடுத்து விஷயத்தைக் கிரகிக்க வேண்டும் என்று நான் எண்ணியது உண்டுதான். உண்மை தான்.

சுலபமாக யாருடனும் பார்த்தவுடன் பழகிச் சிநேகிதம் பிடித்துக் கொள்கிற சுபாவம் படைத்தவன் அல்ல நான். தவிரவும் என் நண்பன் ரகு அந்த மம்மேலியாரைப்பற்றி அவ்வளவு அலட்சியமாகப் பேசியபின் அவருடன் பேசவேண்டும் என்கிற ஆசையே எனக்கு இல்லாமல்தான் போயிருக்கவேண்டும். ஆனால் எதிர்பாராத விதமாக இந்த மம்மேலியார்கள் விஷயமாக என் மனத்தில் ஓர் ஆவல் ஏற்பட்டு விட்டதே! ஒரு கதை. அதுவும் சுவாரசியமான கதையாக இருக்கும் போல் இருந்தது, கிடைக்கிறது என்பதுடன், இதில் ஏதோ அநாவசியமாகவே என் ஆவலும் சேர்ந்துகொண்டது ஏன் என்று எனக்குத் தெரிந்தது என்று சொல்லமுடியாது. ஆனால் காரணமற்ற இந்த ஆவல் தூண்டியதால்தான் நான் முதல் முதல் அவரைச் சந்தித்தபோது அவருடன் பழகிப் பேசத் தொடங்கினேன். என் பர்ஸிலிருந்து பணம் கொடுத்து, அவருக்கு மதுபானங்கள் வாங்கிக் கொடுத்து, எதிரிலும் ஒரு கிளாசுடன் (அதில் நான் அருந்தியது வெறும் கலர்தான் என்றாலும்) பாரில் உட்கார்ந்திருக்கச் சம்மதித்தேன்.

ஆனால் மம்மேலியார்களுக்கும் ரகுவுக்கும் இருந்த உறவுபற்றி, நான் சதாசிவ மம்மேலியாரிடமிருந்து அறிந்து கொண்டது மிகமிகச் சொற்பமே! உண்மையில் விஷயம் எதுவும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ரகுவுக்கு அவரிடம் துளியும் மதிப்பில்லை. ஆனால் அவரோ ரகுவைப்பற்றி மிகவும் உயர்வாகவும் மதிப்புடனும் பேசினார். அவர் ரகுவை நன்றாகத் தெரிந்துகொண்டிருந்த மாதிரித்தான் இருந்தது.

ஆனால் ரகுவுக்குத் தன்னைப்பற்றி என்ன அபிப்பிராயம் என்று அவருக்குத் தெரியாதா? தெரிந்து கொள்ள இவருக்குச் சாமர்த்தியம் போதாதா? என்று அவரை சந்திக்க விரும்பாமல் தான் ரகு என்னையும் அழைத்துக் கொண்டு

ஆஸ்பத்திரி ரோட்டில் திரும்பினான் என்பது தெரிந்திருக்க வேண்டாமா? இப்படிப்பட்ட அறிவாளி. அவர் அறிவாளி தான். சந்தேகம் என்ன? இதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டாமா என்று நினைத்துக் கோபம் வந்தது எனக்கு!

யோசித்துப் பாக்கப் போனால் நான் செய்ததில் ஒன்றும் தவறில்லைதான். ஆனால் ரகு தவறாகவே நினைத்துக் கொள்வானே என்பது துன்பமாக இருந்தது. தனக்கு விரோதி என்று அவன் நினைத்த ஒருவனுடன் நான் பழகினேன். அவன் விஷயத்தை அறிந்து கொள்வதற்காக, என்று அவன் நினைப்பானோ என்று தான் எனக்குப் பயமாக இருந்தது, எங்கள் நட்புக்குத் துரோகம் இழைக்க நான் எண்ணியதாகவே என் மனம் என்னைக் குற்றம் சாட்டியது. தவறிழைத்து விட்டவன்போல் தயங்கினேன் நான்: துணுக்குற்றேன். எங்கேயாவது தப்பி ஓட முயலுபவன்போல் நாலுபுறமும் சுற்றும்முற்றும் பார்த்தேன்.

பிளாட்பாரத்தில் அச்சமயம் ரகுவின் குரல் கேட்டது. என் மனச்சாட்சியே போலக் குற்றம் சாட்டியது. சுரீர் என்று சவுக்கால் சொடுக்கி அடிப்பதுபோல் இருந்தது.

உரத்த குரலில் ரகு யாருடனோ சொல்லிக் கொண்டிருந்தான்! “தப்பித்துக்கொண்டு விடுவித்துக்கொண்டு வரச் சிரமப்பட்டு விட்டது. வெகு சிரமப்பட்டுத்தான் வர முடிந்தது” என்று.

இரும்புக் கண்களாலான கதவுகள்தான் எங்கள் இருவருக்கும் இடையில் இருந்தது. பார் ரூமுக்குப் பக்கத்தில், பிளாட்பாரத்தில் இருக்கிறது புஸ்தகக் கடை. அந்தப் புஸ்தகக் கடையில் நின்று தான் ரகு பேசிக்கொண்டிருந்தான். அவன் பேசியதில் இந்தக் கடைசி வாக்கியம் மட்டுமே என் காதில் விழுந்தது. முந்திப் பேசியதில் எதுவும் காதில் விழவில்லை. பிந்திப் பேசியதை நான் காதில் வாங்கவில்லை. ஏனென்றால் என் மனம் அந்த வாக்கியத்தைத் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது.

யாரிடமிருந்து தப்பித்துக்கொண்டு வருவது பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான் என்பது எனக்குப் புரியவில்லை. என்னைப் பற்றித்தான் இப்படி நினைத்து, இப்படிப் பேசினானோ என்று பளிச்சென்று ஒரு சந்தேகம் என் மனத்தில்

தோன்றியது. அப்படி யானால்... அப்படியானால் .... நான் என்னை வெறுத்த ஒரு மனிதனிடமா அப்படி நட்புக் கொண்டாடிக் கொண்டிருந்தேன்?

'அப்படி இராது! அப்படி இராது!' என்று எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்.

ரகு அன்று மாலை என்னிடமிருந்து பிரியும்போது வேறு ஒருவரைப் பார்க்கப் போவதாகவும் அஸ்தமிப்பதற்கு முன் என்னை மேம்பாலத்திற்கு மேற்கே பார்ப்பதாகவும் சொன்னான். இப்போது அஸ்தமித்து வெகு நேரம் ஆகிவிட்டது. போன இடத்தில் விடுபட்டுக் கிளம்ப நேரமாகிவிட்டது போலும். அதைத்தான் ரகு சொல்லிக் கொண்டிருந்தான் போலும். அப்படித் தான் இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

இல்லாவிட்டால் எனக்கு ஏதாவது சாக்குச் சொல்லி விட்டுத் தப்பித்துக் கொண்டு போகத்தான் ஆரம்ப முதலே யோசித்திருந்து, அதைப்பற்றித்தான் இப்போது சொல்லிக் கொண்டிருந்தானோ, அப்படி என்னிடம் சாக்குச் சொல்லக் காரணம்? அவன் கசந்து கொள்ளும் படியாக எதையும் நான் சொன்னதில்லை. எதுவும் செய்ததுமில்லையே? அவன் என்னிடமிருந்து எதையும் ஒளித்து வைக்கவேண்டும் என்று முயலும்படியாக நான் என்னதான் செய்தேன்? அல்லது சதா சர்வதா நான் பேசிக்கொண்டிருந்த புஸ்தகம் புஸ்தகம் என்ற பேச்சும், எழுத்து எழுத்து என்ற பேச்சும்தான் அவனுக்குக் கட்டோடு பிடிக்காது கசந்து விட்டதோ? என்னால் எது என்ன என்று ஒரு விதமாக முடிவு செய்யக்கூட வில்லை.

சதாசிவ மம்மேலியார் குறுக்கிட்டு என் சிந்தனைகளைக் கலைத்தார்; 'ரகுவின் குரல்மாதிரி இருக்கிறதே? பார்க்கலாமே' என்றார்.

ரகு எப்பொழுதுமே மம்மேலியர்களைப் பற்றிப் பேசும் போது முகத்தைச் சுளித்துக் கொண்டு எல்லையற்ற அருவருப் புடன் பேசினான். அதற்கு நேர் மாறாக நான் கவனித்த வரையில் சதாசிவ மம்மேலியார் அவனைப் பற்றி ஒரு பிரியத்துடனும் அன்புடனும், மரியாதையுடனும் பேசினார். எனக்கே இந்த வித்தியாசம் ஆச்சரியம் மூட்டுவதாக இருந்தது.

இரும்புக் கண் கதவை நடுங்கிய கைகளுடன் திறந்து கொண்டு மம்மேலியார் வெளியேறினார். பிளாட்பாரத்துக்குள் எனக்கிருந்த ஆவலில் நான் அவரைத் தொட்ட மாதிரியே பின் தொடர்ந்தேன்.

விளக்குகள் எல்லாம் பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தன. ஊருக்குப் போக டிக்கெட் வாங்கியவர்களும் சும்மா ஸ்டேஷனுக்குள் வந்தவர்களுமாகக் கூட்டம் ஏராளமாகத்தான் இருந்தது. தெற்கேயிருந்தும் வடக்கே யிருந்தும் வண்டிகள் வரவேண்டிய சமயம் அது. ஒரு நிலையில் நிற்காத, வண்டி வந்துவிடுவதற்கு முன்னதாகவே, ஏறிக்கொள்ளச் சௌகரியமான இடம் எது என்று பார்த்து ஏறிக்கொள்ள, நிலைகொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தார்கள் பிரயாணிகள். பல குழந்தைகள் குரல்கள் எழுப்பின? பிளாட்பாரத்து வியாபாரிகள் அவசியமான பொருள்களையும் அவசியமே அற்ற பொருள்களையும் உரக்க விலைகூவிக் கொண்டிருந்தார்கள்; தூரத்தில் ஸ்டேஷன் ரிப்பேர் ஷாப் வேறு எந்த நேரத்திலும் பலவிதமான சப்தங்களை எழுப்பிக் கொண்டிருந்தது; தவிரப் பிளாட்பாரத்துக்கு அந்தண்டைப் பக்கத்தில் பல என்ஜின்கள் 'கூ கூ!' என்று ஊதிக் கொண்டும், 'குப் குப்!' என்று சப்தம் செய்துகொண்டும் நடமாடித் திரிந்து கொண்டிருந்தன. இதெல்லாமாகச் சேர்ந்து விவரிக்க முடியாத ஒரு குழப்பத்தையும் சந்தடியையும் உண்டாக்கிக் கொண்டிருந்தன. பத்தடிக்கு அப்பால் இருக்கிற மனிதரைக் கண்ணால் கண்டு விட்டாலும்கூட கிட்டப்போகப் பத்து நிமிஷம் பிடிக்கும். ஜன நெருக்கடியும் போக்கும் தனி மனிதனைப் பல திக்குகளிலும் மோதி, பல திக்குகளிலிருந்தும் மோதித் தள்ளின.

இன்றைய நமது நாகரீகத்தின் தன்மையையும் தரத்தையும் அவசரத்தையும் அறிந்து உரைக்க முயலுபவன் முதலில் ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரங்களில், ரெயில்கள் வரும் நேரத்தில், நிற்க வேண்டியது அவசியம்; நின்று பார்க்கவேண்டியது மிக முக்கியம். ஒரு விநாடியில் நாகரீகத்தின் தத்துவம் புரியத் தொடங்கிவிட்ட மாதிரித் தோன்றும்.

இரும்புக் கண் கதவைத் திறந்துகொண்டு நாங்கள் வெளியே வந்த இடத்தில் சற்று அதிகமான கும்பல் தான். புஸ்தகக் கடையில் பேப்பர். புஸ்தகங்கள் பார்ப்பதற்கென்று பலரும், வாங்குவதற்கென்று சிலரும் நின்று

கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில், முதல் வரிசையில், ஏதோ புஸ்தகத்தைக் கையில் எடுத்துப் பார்த்துக்கொண்டு ரகு நின்றான்.

ரகுநாதன் கவனிக்கவில்லையே, நாமும் கவனிக்காத மாதிரிப் போய்விடலாம் என்றுதான் நான் நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்ய சதாசிவ மம்மேலியார் இடம் தரவில்லை. ரகுவைப் பார்த்தவுடனேயே, 'ரகு, ரகு ரகு!' என்று மூன்று தடவைகள், ஒரு தடவையைவிட மறு தடவை உரக்கக் கூப்பிட்டார்.

கையில் பிரித்த புஸ்தகத்தில் ஆழ்ந்திருந்த ரகுவின் காதில் மம்மேலியாரின் மூன்றாவது குரல்தான் விழுந்தது போலும்; அல்லது, கூப்பிட்டது சதாசிவ மம்மேலியார் தானே. அவர் கூப்பிட்டதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே இருந்து விடலாமே' என்றுதான் எண்ணினானோ ரகு; எனக்கு நிச்சயமாகத் தெரியாது. மம்மேலியார் மூன்றாவது குரலும் கூப்பிட்ட பிறகு, ரகு நிமிர்ந்து எங்கள் பக்கம் பார்த்தான் — முகத்தைச் சுளித்துக் கொண்டே பார்த்தான்.

நல்ல ஜுரம் அடிப்பவனுடைய முகம்போல் ஒரு விநாடி அந்த வெளிச்சத்தில் அவன் முகம் பளபளத்துத் தெரிந்தது. பிறகு அப் பளபளப்பு மங்கியது. ரகு முகத்தைச் சுளித்துக்கொண்டே தன் பக்கத்தில் நின்ற, ஒருவரிடம் ஏதோ கூறினான்; அவர் சிரித்தார்.

சதாசிவ மம்மேலியாருக்குப் பின்னால் நான் நின்று கொண்டிருப்பதை ரகு கவனிக்கவில்லை என்பது தெரிந்தது. நான் சும்மா இருந்திருக்கக் கூடாது? நானும் "ரகு!" என்று ஒரு தரம் குரல் கொடுத்தேன்.

ரகு மீண்டும் நின்ற இடத்திலிருந்தே திரும்பிப் பார்த்தான். இந்தத் தடவை என்னையும் பார்த்தான். பிறகு லேசாகத் திரும்பி என் பக்கத்தில் புன்னகை அரும்ப நின்ற சதாசிவ மம்மேலி யாரைப் பார்த்தான். கையிலிருந்த புஸ்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு அவனுடைய நண்பன் பின்தொடரப் புஸ்தகக் கடையைச் சுற்றி நின்ற கூட்டத்தில் முண்டியடித்துக்கொண்டு வந்தான். எங்களை நோக்கி வந்தான்.

பிளாட்பாரத்திலே யாரோ, "கையிறக்கியாகி விட்டது!" என்று சொன்னது என் காதில் விழுந்தது. அடுத்த விநாடி யாரோ "எந்த ரெயில் முன்னால் வரும்?" என்று கேட்டதும். "திருச்சி யிலிருந்து வருவதுதான் முதலில் வரும்" என்று

யாரோ பதில் அளித்ததும் என் காதில் விழுந்தது. பிளாட்பாரத்தில் கும்பல் நெருக்கடி அதிகரித்துக் கொண்டே யிருந்தது. “ரெயில் அந்தக் கோடிக்குப் போய்விடுமே இங்கே நிற்காதீர்கள்!” என்று எங்களுக்குப் புத்திமதி கூறிவிட்டுச் சென்றார் ஒருவர். பழைய காலத்தை சேர்ந்த தலையாட்டிப் பொம்மைகள் முதல், இன்றையப் பத்திரிகைகள் வரையில் வியாபாரம் செய்கிற வியாபாரிகள் எல்லோரும் தட்டைத் தூக்கிக் கொண்டு பாய்ந்து பாய்ந்து ஓடி வியாபாரம் கூறத் தயாராக நின்றார்கள். “ஓரத்திலே போய் நிற்காதேடீ! கழுதை! ரெயில் வருதடீ” என்று ஒரு தாயின் குரல் அதட்டலாக மற்ற எல்லாக் குரல்களுக்கும் மேலாக ஓங்கி நின்று ஒலித்தது.

திருச்சியிலிருந்து வருகிற ரெயில் மேம்பாலம் தாண்டி ஸ்டேசன் பிளாட்பாரத்தில் நின்ற எங்கள் கண்களில் படுகிற அளவுக்கு வரும்போது, ரகு எங்கள் அருகிலே வந்தான்.

அப்பொழுது அவன் முகத்தைப் பார்த்து நான் திடுக் கிட்டேன், அசாதாரணமான ஒரு பாவம் அவன் முகத்திலே படர்ந்திருந்தது. பேய் அறைந்தவனுடைய கண்கள்போல் அவன் கண்கள் மிரண்டு பீதி காட்டின.

வந்த ரகு, என்னைச் சிறிதும் கவனியாமலே, சதாசிவ மம்மேலியாருக்கு நேரில் நின்று, அவர் தோள்பட்டைகளின் மேல் தன் இரண்டு கைகளையும் போட்டு அழுத்திக் கொண்டு சொன்னான்: “உன்னைப் போன்றவர்கள் மனிதர்கள் என்கிற பெயருடன் உயிர்வாழ லாயக்கற்றவர்கள்” என்றான்.

அவன் வார்த்தைகள் தடிப்பாக, குடித்தவனுடைய வார்த்தைகள் மாதிரி, ஒரு குழறலுடன் வெளிவந்தன. அதற்கு நேர்மாறாக, நிதானம் இழந்துவிடாமல், மிகவும் தெளிவான குரலில், ‘நிஜமாகவா!’ என்று கேட்டார் சதாசிவ மம்மேலியார். “நீயும் மனிதனா? அல்லவே அல்ல! புழு! புழுவிலும் கேவலமானவன். சாக்கடைப் புழு நீ! குதிகாலின் கீழ்ப் போட்டுத் தேய்க்க வேண்டும் உன்னை. ஆம்? உயிர் வாழ லாயக்கற்றவன் நீ!” என்றான் ரகு. ஆத்திரமாக, அழுத்தமாக, எல்லையற்ற ஒரு வேகத்துடன்.

ரகு அந்த மாதிரிப் பேசியதை நான் கண்டதேயில்லை. ஜன சந்தடியில் ரகு பேசியதை வேறு யாரும் கவனித்திருக்க முடியாது. ஆனால் என் காதில் மட்டும் அவன் வார்த்தையைத் தவிர வேறு எதுவும் ஒலிக்கவில்லை. இந்தச்

சொற்களுக்கு எதிரில் ரெயில்வே ஸ்டேஷன் ஒலிகள் பூராவும் அமுங்கி அழிந்துவிட்டன.

ரகுவின் முகத்தையும் சதாசிவ மம்மேலியாரின் முகத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டே நின்றேன் நான். மம்மேலியார் நிதானம் இழக்கவேயில்லை. அவர் குடித்திருந்தது உண்மைதான் என்றாலும் ரகுவினுடைய முகம்தான் அச்சமயம் குடித்துவிட்டு வந்திருந்தவனுடைய முகம்போல் இருந்தது.

சதாசிவ மம்மேலியார் புன்சிரிப்புடன் சொன்னார். "நீ அப்படித்தானே நினைக்கிறாய்? சரி, வழி விடு. ரெயில் வந்து விட்டது!" என்று.

என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே ரகு நகர்ந்து அவருக்கு வழிவிட்டான்.

பிளாட்பாரத்துக்குள் வந்து கொண்டிருந்த திருச்சி ரெயில் இரண்டாவது லைனிலிருந்து முதல் லைனுக்கு மாறுகிறதற்கு நாலு கஜம் முந்தி பிளாட்பாரத்தில் நின்ற ஜனங்களை ஓர் எட்டில் தாண்டி சதாசிவ மம்மேலியார் ரெயிலுக்குமுன் லைனில் விழுந்துவிட்டார்.

கண் மூடிக் கண் திறப்பதன் முன் நடந்து விட்டது. இது ரெயில் பிரேக் போட்டு ஒரு குலுக்குக்குலுக்கி ஒரு நிமிஷம் கழித்து நின்றது.

# 8

அந்த அநுபவத்தை எப்படி விவரிப்பது? வார்த்தைகளுக்கு அகப்படுவதற்கு முன்னால் அது மனத்துக்கு அகப்பட்டாக வேண்டுமே! என் மனதுக்கு இத்தனை வருஷங்கள் கழித்து அதை மனத்தில் வைத்து நினைவு படுத்திக் கொண்டு எழுதுகிற எனக்குகூட அந்த அநுபவம் இன்னமும் பூராவுமாக உருவாகி விட்டது. கடைசி உருவம் பெற்றுவிட்டது என்று சொல்லத் தெரியவில்லை.

நேரில் கண்ணெதிரே கண்ட அக்காட்சி என் கண்ணை விட்டு அகல மறுக்கிறது! என் உயிருள்ள வரையில் அது என் கண்ணை விட்டு அகலாது என்றுதான் நினைக்கிறேன்.

சதாசிவ மம்மேலியாருடைய அந்தக் கடைசிக் காரியம் எவ்வளவு மகத்தானது என்று நினைக்க நினைக்கப் பெரிதாகிறது. ஒரு தாண்டில் ஒரு லைன் தாண்டி அடுத்த லைனில் விழுந்து விட்டார். வருகிற ரெயில் நிற்கப் போவதற்காக மெதுவாகத் தான் வந்து கொண்டிருந்தது என்றாலும் பிரேக் போட்டு நிற்பதற்குள் என்ஜின் பூராவும் அடுத்த பெட்டியில் பாதியும் அவர்மேல் ஓடிவிட்டன. உருத்தெரியாமல் சிதைந்துவிட்டார் சதாசிவ மம்மேலியார். அவருடைய சாந்தம் நிறைந்த புன் சிரிப்பும் அழகான மீசையும்.

பிளாட்பாரத்திலிருந்து தாண்டும்போது அவர் கை வாக்கிங் ஸ்டிக் கீழே விழுந்தது. முதல் காரியமாக செய்கைக்கு வேண்டிய அளவு சக்தி எனக்கு வந்தவுடன் அந்த வாக்கிங் ஸ்டிக்கை நான் என் கையில் எடுத்துக் கொண்டேன்.

சதாசிவ மம்மேலியாரின் தீர்மானத்தை நானோ, வேறு யாரோ மாற்ற எண்ணியிருந்தாலும் கூட அதற்குப் போதிய அவகாசம் தரவில்லை அவர். நடந்த காரியத்தை நடக்கப் போகிற காரியத்தை — நாங்கள் பிரக்ஞையில் வாங்குமுன் நடந்து விட்டது காரியம்.

அதன் விளைவாக நானும் ரகுவும், போலீஸ் விசாரணை முதலிய முறையான காரியங்களை முடித்துவிட்டு, சொல்லக் கூடியதைச் சொல்லிவிட்டு, விடுபட்டு வீடு திரும்ப யத்தனிக்கும் போதே மணி பத்து ஆகிவிட்டது — சற்று அதிகமாகக் கூட ஆகிவிட்டது.

அந்த மரணத்துக்கு ரகுவைத்தான் பொறுப்பு என்று சொல்லவேண்டும். அவன் சொன்னதற்குக் காரணம் எது வானால் என்ன? ஒரு மனிதனைத் தற்கொலைக்குத் தூண்டுகிற வகையிலே பேசி....

சிந்தனையின் இந்தக் கட்டத்தில், எனக்கும் பொறுப்பு உண்டு அந்தச் சாவில் என்று தோன்றியது எனக்கு. மம் மேலியார் அன்று வழக்கத்துக்கும் அதிகமாகவே குடித்திருந்திருந்தார். அதற்குப் பொறுப்பும் என்னுடையது. அவருக்கு அப்போது இருந்த மனநிலையில், ரகுவின் வார்த்தைகள் தார்க்குச்சியாகக் குத்திக் கிளப்பி விட்டன அவரை. ரகுவின் வார்த்தைகள் முடிவான, கடைசி வார்த்தைகளாக அவருக்குப் பட்டிருக்க வேண்டும். அதற்குமேல் ‘அப்பீல்’ எதுவும் இருக்கும் என்று அவருக்குத் தோன்ற வில்லை. ஒரு விநாடியில் ஏற்பட்ட தீர்மானத்தின் விளைவு — “இவ்வளவு நல்ல மனிதன் ரகு சொல்கிறான் — தான் வாழ லாயக்கற்றவன் என்று: ரெயில் வந்து கொண்டிருக்கிறது; சரி” என்கிற முடிவுக்கு அவரை வரச் செய்தன ரகுவின் வார்த்தைகள்.

‘ஓடுகிற ஜலம் என்னை அன்புடன் அழைக்கிறது’ என்று ஒரு கவி கூறியிருப்பதன் தத்துவத்தைச் சிந்திக்கத் தொடங்கினேன் நான்.

ரகுவின் உள்ளத்தில் என்ன இருந்தது என்பது எனக்குத் தெரியாது. மம்மேலியாரிடம் சொன்ன அந்த வாக்கியங்களுக்குப் பிறகு அவன் வெகுநேரம் யாருடனும் எதுவும் பேச வில்லை; என்னுடன் கூடப் பேசவில்லை. போலீஸ்காரர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கூடக் கூடியவரையில் அந்த விஷயத்தில் ரகுவின் பங்கை மறைத்து நான் தான் பதில் சொல்லி வந்தேன். சதாசிவ மம்மேலியாருடைய தம்பி வந்த பிறகுங்கூட ரகு எதுவும் வாய் திறந்து சொல்லவில்லை. எவனோ குடிகாரன் குடித்துவிட்டு ரெயிலின்கீழ் விழுந்து தற்கொலை செய்து கொண்டான் என்பது போலீஸ் முடிவு.

மம்மேலியார்களைப்பற்றி ரகுவினுடைய அபிப்பிராயம் என்னதான் ஆனால் என்ன? ரகுவைப்பற்றி மம்மேலியார்களுக்கு மிகவும் நல்ல அபிப்பிராயம் தான் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. சதாசிவ மம்மேலியாருடைய தம்பியும் ரகுவினிடம் அந்த அசாதாரணமான சமயத்திலுங் கூட மிகவும் மரியாதை யுடன்தான் பேசினான். ரகுநாதன் பதில் பேசவில்லை.

சதாசிவ மம்மேலியாரின் சடலத்தை ஸ்டேஷனிலிருந்து கிளப்பிவிட்டு, நாங்களும் கிளம்பும்போது மணி பத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஜுர வேகத்துடன் எழுந்து நடப்பவன்போல் நடந்தான் ரகு. அவன் முகத்திலே ஒரு பயங்கரமான பாவம் நிறைந்திருந்தது.

வெளியே தெருக்களில் ஒன்றிரண்டு வெற்றிலைபாக்குக் கடைகளையும், சாத்திக் கொண்டிருந்த இரண்டொரு ஹோட்டல் களையும் தவிர மற்றக் கடைகள் எல்லாம் மூடியாகிவிட்டன. ஏதோ எங்களைப் போல் இரண்டொரு பேர்வழிகளைத் தவிர அங்கே பொதுவாக ஜன சந்தடியும் இல்லை. ஜன சந்தடியும், கூட்டமும் நெருக்கமும் இருந்தாலாவது நாங்கள் இருவரும் ஏதாவது பேசியிருப்போமோ, என்னவோ? சந்தடியே சிறிதும் இல்லாதது எங்கள் மௌனத்துக்கே அநுகூலமாக இருந்தது. புதுக் கார் ஒன்று சீறிக்கொண்டு பாய்ந்து அவசர ஜோலியாக ஓடியது. தூரத்தில் அதன் சீறல் அடங்குமுன் வேறு ஒரு கார் அத்திக்கிலிருந்து சீறிக் கிளம்பித் தாண்டிப் பாய்ந்தது.

பேசாமலே, நாங்கள் இருவரும் எங்கள் மனத்தில் தோன்றிய சிந்தனைகளை வளர்த்துக்கொண்டே நடந்தோம். அப்படி அவசியம் மனத்தில் மலரவேண்டிய சிந்தனைகள்தான் அவை என்று சொல்லுவதற்கில்லை.

ஆனால் மனிதன் எவ்வளவு அவசரமாக எங்கே சென்றுதான் என்ன பலன்? தன் சிந்தனைகளைத் தப்பவிட முடியாது. அவன் என்பது என்னவோ அசைக்க முடியாத உண்மை. கருமத்தையும் அதன் விளைவுகளையும் மனிதன் தப்பமுடியாது என்றும் இப்படித்தான் அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள்.

புதுப்பாலம் தாண்டிவிட்டோம். இருட்டில் எதிரே மணிக் கூண்டு நிமிர்ந்து நின்றது பேய் உருவமாக. மணிக் கூண்டுக்கு எதிரில் ஒரு டீக்கடையிலிருந்து 'காயாத கானகத்தே' என்று ஒரு கிராமபோன் அலறிற்று. அந்த அலறல்

எங்களை ஒரு பர்லாங்குக்கும் அதிகமாகப் பின் தொடர்ந்து நெட்டித் தள்ளிக் கொண்டு வந்தது.

ரகு சொன்னான்: "இரவின் அமைதியையும் புனிதத் தன்மையையும் கெடுத்துக்கொண்டு...." அதற்குமேல் வாக்கியத்தைச் சொல்லி முடிக்காமல் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான் ரகு.

நான் சிந்தித்தேன் — "இன்று இரவு அவனுக்கோ எனக்கோ நிம்மதியோ அமைதியோ கிடைக்காது" என்று நான் சிந்தித்தேன். நிம்மதியைக் கெடுத்தது மம்மேலியாரோ, காயாத கானகத் தேயோ — எதுவாக இருந்தால் தான் என்ன?

கீழ வீதியிலே ஓர் குடிகாரன். வயிற்றில் கொள்ளாத பானம் கடைவாயில் வழிய, ஆடிப் பாடிக்கொண்டு உற்சாகமாக வந்து கொண்டிருந்தான். அவன் எங்களருகில் வருவதற்குப் பத்து நிமிஷத்திற்கு முந்தியே அவனைப் பார்த்துக்கொண்டு வந்த ரகு அவனை அணுகியதும் அவன் எதிரே போய் நின்றுகொண்டு, "உன்னைப் போல் இருக்கக் கொடுத்துவைக்கவில்லையே எனக்கு, ஏன்?" என்றான்.

தன் போதை லயத்திலிருந்து விடுபட்டு அந்தக் குடிகாரன் ஒரு விநாடி நிமிர்ந்து பார்த்தான். பிறகு மீண்டும் போதையில் ஆழ்ந்து உல்லாசமான ஒரு முடிவற்ற குடிகாரச் சிரிப்புடன், உளறும் நாக்குடன் கேட்டான்: 'குடித்தது நீயா நானா? ஏனப்பா குடிச்சவன் மாதிரிப் பேத்தறே நீ?' என்றான்.

ரகுவை அங்கிருந்து நகர்த்தி குடிகாரனுடன் தோழமை கொண்டு விடாமல் விடுவித்து, மேலே அழைத்துச் செல்வதற்கு முன் எனக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. ஆனால் அங்கிருந்து நகர்ந்த பிறகும் அந்தக் குடிகாரனுடைய போதையில் ஒரு பகுதி என் நண்பனைப் பற்றிக் கொண்டு விட்டதுபோல் இருந்தது. பஞ்சதந்திரக் கதையில் ஐந்தாவதாகிய அஷம்பிரேஹய காரித்வம் என்கிற பகுதியில், தலையில் சக்கரம் சுற்ற நிற்ப வனுடைய கதை ஞாபகம் வந்தது எனக்கு. "ஏனப்பா உன் தலையில் இப்படிச் சக்கரம் சுற்றுகிறது?" என்று ஆச்சரியப் பட்டுக் கேட்டு விட்டால் உடனே 'திகிரியான்' தலையில் இருக்கும் சக்கரம், கேட்டவன் தலைக்கு வந்து சுற்றத்

தொடங்கி விடுமாம்! அதே போல் குடிகாரர்களுடன் பேசுகிறவர்களுக்கும் போதை வந்து விடும் என்று இருந்தால்... என்று சிந்தித்தேன் நான்.

"சதாசிவ மம்மேலியார் குடிக்கும்போது, அவருடன் பார் ரூமில் உட்கார்ந்திருந்த காரணத்தினால் நானும் கூடக் குடித்து விட்டவன் மாதிரித்தானே?" என்கிற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. "ஆமாம். சந்தேகம் என்ன? குடித்து விட்டவன் மாதிரித்தான்" என்று எனக்கு நானே பதிலளித்துக் கொண்டேன்.

இதற்குள் ரகு ஏதோ சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. "மம்மேலியாருடன் நெருங்கிப் பழகிய நாட்களில் நானும் குடிக்கக் கற்றுக் கொள்ளாதது எவ்வளவு பெரிய பிசகு என்பது இப்பொழுதுதான் எனக்கே தெரிகிறது" என்றான் ரகு.

"குடிபோதை போதாது!" என்றேன் நான்.

"குடிகாரனுடன் பழகுகிறவனுக்கும் குடிகாரன் என்கிற பெயர் வந்து விடுகிறது: பெயர் மாத்திரம் சம்பாதித்துக் கொண்டு குடிப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாமலிருந்து விடுவதில் லாபம் என்ன?" என்றான் ரகு.

கீழ வீதியையும் தாண்டிவிட்டோம். வடக்கு வீதியில் திரும்பினோம்.

வடக்கு வீதியிலே, வழக்கமான மேளதாளங்களுடன் 'காஸ் லைட்டு'கள் வெளிச்சம் காட்ட, பத்து பேர் வழி நெடுகப் பாவாடை விரிக்க, பூப்பந்தும் எலுமிச்சம் பழப் பந்தும் இரு புறமுமிருந்து பலர் அம்மானையாட, கடைசி யாத்திரை சென்று கொண்டிருந்தாள் ஒருத்தி, ஒரு வயது முதிர்ந்த ஸ்திரீ.

அதைத் தாண்டிப் போகிற சமயத்திலே, என் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் ரகு மெல்லிய குரலில்: "நான் இன்றுவரை செய்துள்ள பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தமாக முன்பின் தெரியாத இந்தப் பிணத்துடன் சுடுகாடுவரை போய் இருந்து முழுகிவிட்டு வரப்போகிறேன்" என்றான்.

"வேண்டாமே இந்தப் பைத்தியக்காரத்தனம்" என்று சொல்ல வாயெடுத்தேன், இது பைத்தியக்காரத் தனந்தானா என்று எனக்கே சந்தேகம் தோன்றிவிட்டது.

வேண்டாம் என்று சொன்னால் ரகு அச்சமயம் கேட்ப வனாகத் தோன்றவில்லை. அவனுக்கு அப்பொழுது இருந்த மனநிலையில் அவனைத் தனியாக விட்டு விட்டால், எவ்வளவு பைத்தியக்காரத்தனமான, என்ன என்ன காரியங்களைச் செய்வானோ என்கிற பயம் எனக்கு. என்னைத் தஞ்சாவூரில் அச்சமயம் கொண்டு வந்து சேர்த்த என் தலைவிதியையும் என் நண்பனையும் நொந்து கொண்டே அந்தச் சவ ஊர்வலத்தை நானும் பின் தொடரத் தயாரானேன்.

சில நாழிகைகளுக்கு முன் வரையில் ஒரு குடும்பத் தலைவியாகவும் உயிருள்ள ஸ்திரீயாகவும் இருந்துவிட்ட அந்தச் சவத்தை நாங்கள் இருவரும் பின் தொடர்ந்தோம். அதனுடைய உறவினர்கள் எங்கள் இருவரையும் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டே நடந்தார்கள். வடக்கு வீதி மத்தியில் சுடுகாட்டுக்குப் போகும் பாதை தொடங்கி மைல் கணக்காக வடக்கே, வட வாற்றங்கரை வரையில் போகிறது. அந்த நீள வழி நெடுக முன் பின் தெரியாத நாங்கள் இருவரும் தங்களைப் பின் தொடர்வது பற்றி அவர்கள் ஆச்சரியப்படுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லையே!

நடந்தோம்! நடந்தோம்! சவ ஊர்வலத்தைப் பத்தடி தூரத்தில் பின் தொடர்ந்தோம். நள்ளிரவுக்குள் சுடுகாட்டில் பிணத்தைச் சேர்த்துச் சுட்டுவிட்டுத் திரும்பி விடவேண்டும் என்கிற அவசரத்தில் ஊர்வலம் சற்று அவசரமாகவே தான் சென்றது எங்களுக்கும் ஆட்சேபம் இல்லையே! சவத்தின் மாஜி உறவினர் களுடன் கலந்து கொள்ளாமலே தூரத்தில் இருந்தபடியே, கிரியைகள் பூராவும் ஆனபிறகு வடவாற்றின் ஓர் ஓரத்தில் தேங்கியிருந்த அழுக்கு ஜலத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, மற்றவர்கள் திரும்பும் போது நாங்களும் திரும்பினோம். முன் பின் நாங்கள் அறியாத அந்த ஆத்மா சாந்தி அடைவதற்காக நரன் போட்ட முழுக்கு என் ஆத்மாவுக்குச் சாந்தி அளிப்பதாக இருந்தது என்றுதான் நான் நினைத்தேன். என் வேஷ்டி சட்டைகைள ஈரம் இல்லாமல் பிழிந்து கட்டிக் கொண்டு நான் கிளம்பினேன். ரகு தன் துணிமணிகளை பிழிந்துக் கூட கொள்ளவில்லை. ஈரம் சொட்டச் சொட்ட, வேஷ்டி காலைத் தடுக்க அவன் நடந்தான்.

ஒற்றைக் ‘காஸ்லைட்’ தூரத்தில் வழிகாட்ட நாங்கள் திரும்பும் போது சற்று மெதுவாகவே நடந்தோம். சுடுகாட்டை விட்டு நள்ளிரவுக்குமுன் திரும்பிவிட்டோம் என்கிற தைரியம் போலும் அந்த உறவினர்களுக்கு. “நாம் வேகமாக நடந்து வீடுபோய் விடலாமே” என்று ரகுவிடம் சொல்லிப் பார்த்தேன். அவன் சம்மதிக்கவில்லை. அவர்களுக்குப் பின், அவர்கள் கதியிலேயே நடக்கவேண்டும் என்பது அவன் விருப்பம் போலும்.

சுடுகாட்டில் விட்டு வந்தவளின் உறவினர்கள் சற்றுத் திகைப்படைந்தவர்களாகவே. திரும்பித் திரும்பிப் பார்த்தவர் களாக நடந்தார்கள். ஒருவர் சற்றுப் பின்தங்கி ரகுவுடன் பேச்சுக் கொடுக்கப் பார்த்தார். ஆனால் ரகு அவரை வெறுப்பாக ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கையைக் காட்டினான் “போ” என்று. சிறிது பயந்தவராகவே அவர் நகர்ந்துவிட்டார். அதற்குப் பிறகு யாரும் நாங்கள் யார் என்று அறிந்துகொள்ள முயற்சி செய்ய வில்லை.

தஞ்சாவூருக்குள் வரும்போது வடக்கு வீதித் திருப்பம் திரும்பும்போது மணி பன்னிரண்டே முக்கால் ஆகிவிட்டது. நாய்கள் திவ்வியமான குரலெடுத்து ஊளையிட்டு எங்களை வரவேற்றன.

“நாய்கள் ஊளையிடுகின்றன. மனிதர்கள் அறிவாளிகள். விவாதங்கள் நடத்துகிறார்கள்” என்றான் ரகு.

“ஆமாம்” என்று ஆமோதித்தேன் நான். ஆமோதிக்காமல் ஆட்சேபித்து லாபம் என்ன? முடிவற்ற தத்துவ விசாரங்களால் இதுவரை மனிதன் கண்டுவிட்ட பலன்தான் என்ன? உமர் கையாம் பாடியுள்ள மாதிரி எவ்வளவோ வழிகள் உண்டு என்று உள்ளே கூடிக்கூடிப் பேசினாலும் வெளியே தெருவுக்கு வர வேண்டியது அதே பழைய வாசற்படியாலேதானே?

நாங்கள் வடக்கு வீதியில் மேற்கே திரும்பினோம். சவத்தின் உறவினர்கள் கிழக்கே திரும்பினார்கள்.

வீட்டை அணுகிய போது ரகு சொன்னான்: “எனக்குத் தூக்கம் வருகிற மாதிரியில்லை; இன்னும் கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வரலாம்” என்றான்.

நான் தயங்கினேன். எனக்குக் கால் வலித்தது அன்று பூராவுமாகக் குறைந்தது இருப்பத்தைந்து முப்பது மைல்களாவது நான் நடந்திருப்பேன். ''வீட்டுக்குப் போய் வேறு வேஷ்டி கட்டிக் கொண்டு வரலாமே!,'' என்று சொல்லிப் பார்த்தேன்.

ரகு பதில் சொல்லாமலே வீட்டைத் தாண்டி நடந்தான். நானும் பின் தொடர்ந்தேன். வேறு என்ன செய்வது? அவனைத் தனியாக அந்த நேரத்தில் விட எனக்கு இஷ்டம் இல்லை. மேலவீதி, தெற்கு வீதி, கீழவீதி, வடக்குவீதி என்கிற நாலு வீதிகளையும் அப்பிரதஹுணமாகச் சுற்றிக் கொண்டு வந்தோம்.

எனக்குச் சொல்ல முடியாத அலுப்பு. நானாக வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. தன் உள்ளத்தைப் பிய்த்துச் சின்னா பின்னமாக்கிக் கொண்டிருந்த ஓர் எண்ணத்திலிருந்து தப்பி ஓடிவிட விரும்புகிறவன் போல ரகு அதி வேகமாக நடந்தான். அவன் எவ்வளவு வேகமாக நடந்தானோ அவ்வளவு வேகமாகவே அந்தச் சிந்தனையும் அவனைப் பின் தொடர்ந்தது போல்தான் இருந்தது.

கீழ வீதியிலிருந்து வடக்கு வீதி திரும்பும்போதே வெட வெடவென்று நடுங்கத் தொடங்கிவிட்டது ரகுவுக்கு. என்மேல் சாய்ந்து கொண்டுதான் அவனால் நடக்க முடிந்தது. வாய் ஓயாமல் பிதற்றிக் கொண்டே அவன் தள்ளாடி நடந்தான். இத்தனை நேரமும் மௌனமாக இருந்ததற்கெல்லாம் பிராயச் சித்தம் செய்துவிட விரும்புபவன்போல் அவன் பிதற்றினான்.

வீட்டை அடைந்து திண்ணையில் ரகுவை உட்கார வைத்து விட்டுக் கதவைத் தட்டி உள்ளே பாயைப் போட்டு அவனைப் படுக்க வைத்து நாலு போர்வையைப் போர்த்திவிட்டு நானும் படுக்கப் போகும்போது மணி இரண்டும் அடித்து விட்டது.

பிரக்ஞையே இல்லாமல் பிதற்றலும் ஓய்ந்து படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான் ரகு.

# 9

அதற்கு மறுநாளும், பின்னர் இரண்டு நாட்களும் ரகுவுக்குப் பிரக்ஞையே இல்லை. குளிரும் நடுக்கலுமாக அவன் உடலைத் தூக்கித் தூக்கிப் போட்டது. மிகவும் கடுமையான ஜுரம் — ஜன்னி என்றுதான் சொல்லவேண்டும். பிரக்ஞை வருகிற சில நேரங்களில் யார் எது சொன்னாலும் காதில் வாங்காமல் பிதற்றிக் கொண்டே இருந்தான்.

நான் டாக்டரை அழைத்து வந்து காட்டினேன். ஏதோ மருந்து கொடுத்தார் — ஊசி போட்டார். இரண்டு மூன்று நாள் போனால்தான் நிச்சயமாக எதுவும் சொல்லமுடியும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். மூளைக்குத் திடீரென்று ஏற்பட்ட ஓர் அதிர்ச்சியால் எழுந்த ஜுரம் என்றும், உடல் தேறி எழுந்த பிறகும், பல நாளாகும் மனம் சரியாவதற்கு என்றும் சொன்னார். ஆயுள் பூராவும் அந்த அதிர்ச்சியின் பலன் தாக்கினாலும், தாக்கும் என்றும் சொன்னார். இது வெறும் பய முறுத்தல் என்றுதான் நான் நினைத்தேன். இருந்தாலும் பயமாகவுந்தான் இருந்தது.

இத்தனைக்கும் ஆதி காரணமாக அமைந்தவன் நான் தானே என்று ஒரு துக்கம் பீரிட்டு வந்தது எனக்கு. அந் தரங்கத்திலே இந்த உணர்ச்சி தோன்றி என்னை மிக மிக வாட்டிற்று. என்னை நானே குற்றம் சாட்டிக் கொண்டேன். சதாசிவ மம்மேலியாரை அன்று அகஸ்மாத்தாகச் சந்தித்து, அவரை நான் பார் ரூமுக்கு அழைத்துச் செல்லத் தூண்டிய என் கதை — ஆசையை நொந்து கொண்டேன். மம்மேலியார்களைப் பற்றிய வரையில் ரகுவின் ரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆவலால் உந்தப்பட்டு, அக்காரணத்தினால்தானே நான் அன்று அவருடன் ஸ்டேஷன் பக்கம் போனேன்? நானேதான் அவரை அழைத்தேன். அல்லது அவர் கூப்பிட்டவுடன் போகச் சம்மதித்துவிட்டேன். தெய்வாதீனமாக அது அவருடைய கடைசி ‘வாக்’காகி விட்டது — என்னுடன் சென்று அதுவே பார் ரூமுக்கு அவருடைய கடைசி விஜயம் ஆகிவிட்டது.

இதை எல்லாம் எதிர் பார்த்தா நான் செய்தேன்? இப்படி எல்லாம் நேரவேண்டும் என்றா நான் உத்தேசித்தேன்?

விதி யாரைக் குற்றம் சாட்டினாலும் சரி என்னைக் குற்றம் சாட்டாது என்றுதான் எனக்குத் தோன்றியது.

சதாசிவ மம்மேலியாரின் சாவுக்கும் ரகுவின் சாவின் எல்லையை எட்டிப்பார்க்கிற ஜன்னிக்கும், யாராவது பொறுப்பு என்று குற்றம் சாட்ட முடியுமானால் விதியையும் தெய்வத்தையும் குற்றம் சாட்டலாமே தவிர வேறு எதையும், யாரையும் குற்றம் சாட்ட இயலாது என்றுதான் தோன்றிற்று எனக்கு.

ஒவ்வொரு சமயம் ‘இவ்வளவு குழப்பத்துக்கும் நீதானேடா பொறுப்பு?’ என்று என் மனச்சாட்சி என்னைக் குற்றம் சாட்டியது. அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், விதி தெய்வம் என்கிற குற்றவாளிகள் எங்கேதான் போய் ஒளிந்து கொண்டார்களோ எனக்குத் தெரியவில்லை!

மொத்தத்தில் ரகுவுக்கு உடம்பு தேறும். பிழைத்து எழுந்து மறுபடியும் நடமாடுவான் என்கிற நிச்சயம் வருவதற்கு மூன்று நாட்கள் ஆயின. அந்த நிச்சயம் கடைசியாக வந்ததும் அந்த தஞ்சாவூர் டாக்டரால் அலல. அந்த மூன்று நாட்களும் மூன்று யுகங்களாகத்தான் கழிந்தன. என்னைப்பற்றிய வரையில் என்று சொல்வது மிகையே யாகாது. அது வெறும் உபசாரமாக அதிகப் படுத்திச் சொல்கிற வார்த்தையே அல்ல.

அந்த மூன்று நாட்களும் நான் பட்ட பாட்டை வர்ணிக்க முடியாது என்பதற்காக வர்ணிக்காமலே விட்டு விடுகிறேன். ரகுவின் படுக்கையண்டை அவன் முனகுவதையெல்லாம் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டு நான் உட்கார்ந்திருந்த இடத்தைத்தான் பூலோகத்திலே நரகம் என்று சொல்லவேண்டும். அந்த மூன்று நாட்களிலும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் போல வேறு யாருக்காவது, எப்பொழுதாவது ஏற்பட்டிருக்குமோ என்பது சந்தேகந்தான். அடிப்படையான பல உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு என்றும் இல்லாத ஆத்ம விசாரத்திலே என்னை ஆழ்த்தவிட்டன அவை.

மூன்று நாட்களில் இரண்டொரு தடவைகளில்தான் அம்பி ஐயர் ஹோட்டலுக்குப் போக முடிந்தது. அந்த இரண்டொரு தடவைகளிலுங்கூட நான் அந்த அம்பியிடம் மம்மேலியார்களைப் பற்றிப் பேச்சுக் கொடுக்கவில்லை. அவனாகவே பேசத் தொடங்கியபோதுகூட நானாகக் கத்தரித்துக் கொண்டு நகர்ந்து விட்டேன்.

என் நண்பனுடைய இளங்குழந்தைகளைப் பார்ப்பேன். அவை வந்து சீக்காளி படுத்திருந்த இடத்தில் எட்டிப் பார்த்து விட்டு 'அப்பா' என்று பயத்துடனும் பக்தியுடனும் மெல்லிய குரலில் ஒரு தரம் கூப்பிட்டுவிட்டு ஓடிவிடும். "அப்பாவுக்கு உடம்பு நாளைக்குச் சரியாகப் போயிடுமா மாமா?" என்று ரகுவின் பையன் ஓடிவந்து என்னைக் கேட்டு விட்டுப் போகும் போது, என் கண்கள் நிறைந்து விடும் — பதில் என்ன சொல்வது என்று அறியாமல் இருந்துவிடுவேன்.

இரவு பகல் தூங்க நேரமில்லை. எனக்கு விநாடிக்கு விநாடி நோயாளிக்கு ஆகாரம் செல்லுமா என்று பார்ப்பதும், அவனுக்குக் குளிரும் ஜுரமும் தாங்காமல் தூக்கி வாரிப் போடும்போது போர்வைகளை இழுத்துப் போட்டுக் கட்டி, இறுக அணைத்துப் பிடித்துக் கொள்வதும், அயர்ந்து ஒரு விநாடி அவன் தூங்கினாலும் மூச்சு வருகிறதா? மூச்சு வருகிறதா? என்று பார்ப்பதும், டாக்டர் சாதித்து விடப் போகிற அதிசயத்தை எண்ணி எதிர்பார்த்து, அவர் சொல்கிற மருந்துகளைச் சொல்லுகிற வேளை தவறாமல் வலுக்கட்டாயமாகப் புகட்டுவதுமாக நாளில் அறுபது நாழிகை கழிந்து கொண்டிருந்தது.

மூன்றாவது நாள் டாக்டர் என்னையே கடிந்துகொண்டார். "அவருக்குச் சிசுரூஷை செய்வதிலே உமக்கே உடம்புக்கு வந்துவிடும்போல் இருக்கிறதே! ஜாக்கிரதையாக இரும் ஐயா" என்றார்.

நான் இதற்கு நேரடியாகப் பதில் சொல்லவில்லை — எனக்கும் ஜுரம் வந்துவிட்டால் தேவலை போலத்தான் இருந்தது; ஜன்னி வந்துவிட்டால் தேவலை என்றிருந்தது; பிரக்ஞையற்றே போய்விட்டால் தேவலை என்றுதான் இருந்தது. ஒரு சிறிது நேரம் டாக்டரைத் தூக்கமற்ற கண்களால் வெறித்துப் பார்த்துவிட்டுக் கேட்டேன்: "அவன் பிழைத்துவிடுவானா? சொல்லுங்கள்" என்று.

டாக்டர் கோபித்துக் கொண்டார். ‘‘என்ன ஐயா, எல்லாம் தெரிந்தவர். நீரும் — ஏதும் அறியாத குழந்தை மாதிரிப் பேசுகிறீர்? இந்த மாதிரியான கேஸ்களில் எதை என்று நிச்சயமாகச் சொல்லுவது? என் கையிலா இருக்கிறது, இதெல்லாம்? அதற்குள் எதுவும் சொல்ல முடியாது. டாக்டர் எத்தனை செய்யலாமோ அத்தனையும் செய்கிறேன்... சரி. நான் வரட்டுமா?’’ என்று கோபமாகவே, தம்முடைய அன்றைய பீஸைக்கூடக் கேட்கத் தாமதியாமலே நடந்துவிட்டார் டாக்டர்.

மத்தியான்னப் போதிலேயே. ரகுவின் நிலைமை அபி விருத்தி அடையத் தொடங்கிவிட்ட மாதிரி எனக்குத் தோன்றியது. ஜுரம் குறைந்தது என்று நான் நினைத்தேன்.

அன்றுமாலையில் சதாசிவ மம்மேலியாரின் தம்பியும் அவருக்கு மூத்தவரின் பிள்ளைகள் இருவரும் வந்தார்கள். ரகுவின் உடல்நிலையைப் பார்த்துப் போக.

‘‘ரகுவுக்கு உடம்பு எப்படி இருக்கிறது?’’ என்று விசாரித்தார் தம்பி.

‘‘இன்று சற்றே தேவலை என்றுதான் சொல்ல வேண்டும்’’ என்று சாவதானமாக அமைதியாகவே பதில் அளித்தேன். என் மனத்தில் அவர்களிடம் சொல்லிக் கொள்ள முடியாத ஒரு கோபம் வந்தது.

‘‘சதாசிவத்தின் கிட்ட ரகு உயிரை வைச்சிருந்தார். அவர் கண் எதிரே சதாசிவம் விஷயம் இப்படி நடந்துவிட்டது, பாவம்....’’ என்று அவ்வளவாக ஈடு பாடில்லாமல் விதியை நொந்துகொள்கிற பாவனையில் சொல்லி நிறுத்தினார்.

‘‘சித்தப்பாவுக்கும் ரகுவிடம் ரொம்பப் பிரியம்’’ என்றான் வாலிபர்களில் ஒருவன்.

‘‘என்னவோ நல்லபடி ஆகவேண்டும்! ரகுவைப் போன்ற ஆசாமி உலகத்திலே ஆயிரத்திலே ஒருத்தர் அகப்படுவது சிரமம்’’ என்று கூறிவிட்டு என்னிடம் விடைப் பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள் அந்த மம்மேலியார்கள்.

அரைகுறையாகப் பிரக்ஞை ஏற்பட்டது ரகுவுக்கு. அன்றிரவு நள்ளிரவுச் சமயத்தில் ஏதேதோ பிதற்றினான். அரைப் பிரக்ஞையில் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அவன் பிதற்றிய சில வார்த்தைகளிலிருந்து மம்மேலியார்களுக்கும் ரகுவுக்கும் இடையே இருந்த ரகசியம் இந்தத் தலைமுறையை மட்டும்

சேர்ந்தது அல்ல என்று எனக்குத் தெரிந்தது. வேறு சில விஷயங்களும் திடீரென்று என் மனத்தில் பளீரிட்டன.

ரகுவின் உயிருக்கு ஆபத்து இல்லை என்பது ஒரு வழியாகத் தெரிந்ததால் மம்மேலியர்களைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவல் மீண்டும் என் மனத்தில் அடக்க முடியாத படி தலை தூக்கியது.

# 10

மரணப் படுக்கையில் கிடந்தெழுந்த ரகுவுக்குச் சதாசிவ மம்மேலியாரைப் பற்றித் தவிர வேறு எவ்விதமான சிந்தனையும் இருந்திருக்க நியாயமில்லை என்றுதான் எனக்குத் தோன்றியது. அவன் மனத்தில் முழுப் பிரக்ஞையுடன் கடைசியாகக் கண்ட சதாசிவ மம்மேலியாரின் கோர மரணக்காட்சிதான் இருந்திருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். இப்படி மனத்துக்கு உகக்காத ஒரு விஷயத்தைப்பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து உடம்பை அலட்டிக்கொண்டு அவன் அவஸ்தைப்படுவதைக் காணக் காண எனக்கு என்னவோபோல் இருந்தது. பிரக்ஞை தோன்றத் தொடங்குமுன் அவனுக்கு இருந்த நிலைமையே தேவலை என்று என்னால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

தெருவோடு போய்க் கொண்டிருந்த ஏதோ ஒரு பிணத்துடன் சுடுகாடு வரையில் போய் நள்ளிரவில் முழுகிவிட்டு வந்து மகாப் பிராயச்சித்தம் செய்து கொண்டு மனக்கிளர்ச்சியை மறைத்து வைத்துக் கொள்ளச் செய்த முயற்சி பலிக்க வில்லை. அவன் மனம் அந்த அரைப் பிரக்ஞை நிலையில் அதிகமாக விழித்துக் கொண்டு விட்டது என்று எனக்குத் தோன்றியது.

அரைத் தூக்கத்தில் விழித்துக்கொள்வான் ரகு. “சதாசிவம்! என்னை மன்னித்துவிடு!” என்று உருக்கமான குரலில் உரக்கக் கத்துவான்.

மீண்டும் மவுனத்தில், தூக்கத்தில், பிரக்ஞையின்மையில் ஆழ்ந்துவிடுவான் ஒரு மணி நேரம். இரண்டு மணி நேரம் கழித்து மீண்டும் விழித்தெழுந்து கோபமாக. ரௌத்திராகாரமாகக் கத்துவான். “போடீ வெளியே! போ! என் வீட்டுப் பக்கம் இனி வந்தாயோ தெரியுமா....? அந்தச் சதாசிவனோடே நீ தொலை! என் கண் காணாமல் தொலைந்து விடு” என்று கத்துவான்.

“என் கண்முன் மீண்டும் வந்தாயானால் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவேன் ஆமா? இந்த கையாலேயே கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுவேன்—” என்பான். அப்பா செய்து விட்டுப்போன பாவத்திற்கு

பிராயச்சித்தம் செய்வதற்கு நான்தான் ஆளா? அவர் செய்த பாவத்துக் கெல்லாம் பலியாக வேண்டுமா நான்?'' என்று அழுவான் சில சமயம்.

''ஏன், உண்மை யாருக்கும் சுலபத்தில் தெரிந்து விடுவது கிடையாது? மறைந்து மறைந்து காணவேண்டியதாக இருக்கிறது? கண்டாலும் பலன் தருவதில்லை. ஏன் இது?'' என்று கேட்டான் ரகு.

''உண்மை தெரியும்போது அது நமக்குப் பலனே தருவ தில்லையே, ஏன்?'' என்று கேட்டான் ரகு. அது என்னைக் கேட்கிற மாதிரி இருந்தது. ஆனால் எது உண்மை. எது உண்மை யல்ல என்று சொல்ல நான் யார்? தெரிந்துகொள்ளவே என்னால் முடியவில்லையே? ரகுவுக்கு என்னால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? நான் மௌனமாகத்தான் இருக்கவேண்டி இருந்தது.

தெய்வம்தான் அவன் கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டும்! இந்த மம்மேலியார்களுக்கும் ரகுவுக்கும் இடையே இருந்த விவகாரம் என் பொறுமையை அதிகமாகவே சோதித்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும் — ஊர் திரும்புவது எப்போது என்றிருந்தது எனக்கு. தஞ்சாவூருக்கு நண்பனுடன் சிறிது காலம் இன்பமாகக் காலம் கழிக்கலாம் என்று வந்தது எவ்வளவு மடத்தனமான காரியம் என்று எனக்குத் தோன்றியது.

இதெல்லாவற்றிற்கும் மேலாக மம்மேலியார்களைப் பற்றி அறிந்து கொண்டு விட்டால்தான் தேவலை என்னும் காரண காரியமற்ற ஆவலும் என் உள்ளத்தில் பேயாய்த் தலை விரித் தாடியது. எனக்கு இன்னமும் இந்த ஆவல் இருந்தது தவறுதான்; ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இவ்வளவும் நடந்தான பிறகு நான் எப்படி விஷயம் பூராவும் அறிந்து கொள்ளாமல் — அறிந்து கொள்ள ஆசைப்படாமல் இருக்க முடியும்?

ரகு திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு சொன்னான்; லேகர் உண்டை போட்டவன் குரலில்; ''சதாசிவம், என்னை மன்னித்து விடு! நீ தவறு செய்து விட்டாய் என்று நான் எண்ணி உனக்கும் என் மனைவிக்கும் அழிக்க முடியாத தீங்கு இழைத்து விட்டேன். எப்படி அழிக்கப்போகிறேனோ அது தெரியாது....'' என்று மிகவும் உருக்கமான குரலில், சதாசிவ மம்மேலியார் அவன் கண்முன் நிற்பது போலவும் அவரிடமே மன்னிப்புக் கேட்டுக் கொள்பவன் போலவும் சொன்னான்.

மறுநாள் — சதாசிவ மம்மேலியார் எங்கள் கண்முன் ரெயிலின் கீழ் விழுந்து இறந்து ஏழு நாட்கள் ஆகிவிட்டன. அன்று ரகுவுக்கு உடம்பு சற்றே தேவலை என்றுதான் சொல்ல வேண்டும். பிதற்றல்களும் பினத்தல்களும் முதல் நள்ளிரவு முதலே நின்றிருந்தன. காலையில் கொஞ்சம் இரண்டாவது தடவை ஓவல்டினும் சாப்பிட்டிருந்தான். இரண்டு தலை யணைகளை அடுக்கிக்கொண்டு சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந் தான். மருந்து எடுத்துக் கொடுத்தேன். முகம் சுளிக்காமல் சாப்பிட்டான். சாப்பிட்டுவிட்டு ''இனியும் நம்பிக்கை வைத்திருக் கிறாயே! நீ உண்மையிலே திடசாலிதான்'' என்றான்.

இன்னொரு கிளாஸ் ஓவல்டின், அவனாகவே கேட்டான். ஆற்றிக் கொடுத்தேன். அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது நான் சொன்னேன். ''அதெல்லாம் சரி தான் ரகு, எனக்கும் இன்னமும் விஷயம் சரிவரப் புரியவில்லை. இந்த மம்மேலியர் களுக்கும் உனக்கும் என்னதான் சம்பந்தம்? உன் வாழ்வில் அவர்கள் குறுக்கிட வேண்டிய காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

ஓவல்டின் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, கையில் கிளாசுடன் யோசனையில் ஆழ்ந்தான்.

நான் தொடர்ந்து சொன்னேன்: ''எனக்கு ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை; அதனால்தான் கேட்கிறேன் சதாசிவ மம்மேலி யாரும்....''

அதற்குமேல் என்னால் பேச இயலவில்லை. அதற்குள்ளாகவே அவனுடைய முகத்தில் விகாரமான ஓர் பாவம் படரத் தொடங்கி விட்டது. அவன் கண்களில் ஒரு பயங்கர ஒளி பரவியது. ஏன் இப்படி நேரடியாக கேட்டோம் என்றிருந்தது எனக்கு.

ரகு ஓவல்டின் கிளாசை என் கையில் கொடுத்தான். ''ஆறிப் போய்விடுமே! சாப்பிட்டு விடேன்'' என்றேன் நான்.

''வேண்டாம், போதும்'' என்றான் ரகு அப்போதும். மம்மேலியார்களைப் பற்றித் தானாக அவன் வாய் திறந்து எதுவும் பேசவில்லை.

அவ்வளவு அமுத்தலாக, அழுத்தமாக வேறு எந்த விஷயத்தைப்பற்றியும் ரகு எனக்குத் தெரிந்து இருந்தது கிடையாது. நான் இனி அந்தப் பாழும்

மம்மேலியார்களைப் பற்றி அவனிடம் பேச்சுக் கொடுப்பதில்லை என்று தீர்மானித்துக் கொண்டேன்.

ஆனால் நண்பகலில் மருந்து சாப்பிட்டான். கஞ்சி ஒரு வாய் சாப்பிட்டுவிட்டு, ரகு தானாகவே தொடங்கினான்: ‘‘இத்தனை நாளும் நான் மனம்விட்டு உன்னிடம் இந்த மம்மேலியார்களைப் பற்றிப் பேசாதது தவறுதான். சொல்லியிருக்கத்தான் வேண்டும். வேறு எதையும் உன்னிடமிருந்து மறைத்ததில்லை நான். உன்னிடம் முதலிலேயே சொல்லியிருந்தால், ஓரளவு எனக்கும் ஆறுதலாக இருந்திருக்கும். இவ்வளவு தூரம் கோரமான விளைவுகள் ஏற்படாமலும் இருந்திருக்கும்.’’

‘‘சொல்லு, உன் மனத்திலிருக்கும் பாரத்தை இறக்கி வைத்துக்கொள். அது நல்லது’’ என்று தூண்டினேன் நான். சற்று ஆவலுடன்தான் தூண்டினேன் என்று சொல்லவேண்டும்.

என் ஆவல் அவனைத் துன்புறுத்தியது போலும்! சற்று நேரம் மௌனமாக இருந்தான். அவன் முகத்திலே ஒரு விதமான குறி படர்ந்து பரவியது என்று நான் கவனித்தேன். நாலு நிமிஷம் கழித்துச் சொன்னான் ரகு. ‘‘எனக்குச் சற்றே குளுருகிற மாதிரி இருக்கிறது. கம்பளியையும் துப்பட்டியையும் எடுத்துப் போர்த்தி விடு’’ என்றான். போர்த்திவிட்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் தூங்கி விட்டான் ரகு.

எனக்குச் சற்று ஏமாற்றமாகவேதான் இருந்தது. ஏதோ சொல்ல ஆரம்பித்தவன் நிறுத்திக்கொண்டு விட்டானே! ஆனால் மம்மேலியார்களுடைய நினைவே அவனுக்கு விஷமாக இருக் கையில், நானும் சேர்ந்து அவர்களைப் பற்றிப் பேசிப் பேசி அவனைத் துன்புறுத்துவது சரியல்லதான் என்று எண்ணினேன். மம்மேலியார்களைப் பற்றி அறவே மறந்து விடுவது என்றுதான் எண்ணினேன். இந்தத் தடவை அவனாகவே பேச்செடுத்தால் கூட அதைப் பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம் என்று அடக்கி விடுவது என்று தீர்மானித்தேன்.

மாலையில் கண் விழித்த ரகு ‘‘குளிருகிறது.’’ என்றான். ‘‘எங்கப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா நீ?’’ என்று கேட்டான் ரகு.

‘‘நீ சொன்னதைத் தவிர எனக்கு ஒன்றும் தெரியாது’’ என்றேன் நான்.

“அவர் செக்கச் செவேலென்று, மூக்கும் முழியுமாக மன்மதனாட்டமாக இருப்பாராம்.”

ரகுவே பார்க்க அழகாகத்தான் இருப்பான். நான் தலையை ஆட்டினேன்.

“அவர் அந்த நாட்களில் கொஞ்சநாள் தஞ்சாவூரிலே இருந்தார்...”

ரகு இப்படிச் சொல்லி வரும்போது எனக்கு விஷயம் ஓரளவு புரியத் தொடங்கியது. மறைமுகமாக மம்மேலியார்களைப் பற்றித்தான் ரகு பேசுகிறான் என்பதை அறிந்து கொள்ள எனக்கு இத்தனை நேரமாகிவிட்டது. என்ன அசட்டுத்தனம்! “அப்புறம் பார்த்துக் கொள்ளலாமே! இப்போது இதெல்லாம் எதற்கு?” என்றேன் நான், ரகுவிடம்.

“இந்தச் சந்தர்ப்பம் தவறினால் பிறகு உனக்குச் சொல்ல எனக்குச் சந்தர்ப்பமே கிடைக்காது” என்றான் ரகு தீர்மானமாக. அவன் குரலில் தொனித்த ஒரு பாவம் என்னைத் திடுக்கிடச் செய்தது.

அவன் வியாதியஸ்தனின் பலஹீனமான நிலையில் ஓர் அசாதாரணத் திடத்தை ஏற்படுத்திக் கொண்டு பேசுகிறான் என்று எண்ணினேன் நான். விளையாட்டாகவே சொன்னேன் நான்; “டேய் ரகு! நான் அதற்குள்ளாக ஊருக்குப் போய் வருவதாக உத்தேசமில்லை. எனக்கு எங்கேயும் வேலை ஜோலி கிடையாது. நீ எழுந்து நடமாடத் தொடங்கியவுடன் நானே இடம் பார்த்து ஒரு பெண்ணைப் பார்த்து அவள் கையில் உன்னை ஒப்படைத்து விட்டுத்தான் போகப் போகிறேன். உனக்காக இல்லாவிட்டாலும், உன் குழந்தைகளுக்காகவேனும் நீ மறு கலியாணம் செய்து கொண்டுதான் ஆகவேண்டும்” என்றேன்.

ரகு கேலியாகச் சிரித்தான். “உனக்குத் தெரிந்தது அவ்வளவு தான்” என்றேன். பிறகு கேலியும் கோபமும் அற்ற குரலில் சொன்னான்; ‘ஏதோ சாதாரணமான விஷயத்தைச் சொல்கிற மாதிரிச் சொன்னான்; “ஒருத்தியைக் கொன்றுவிட்டேன். இப்போது இரண்டாவது ஒரு சாவுக்கும் நான் காரணமாகி விட்டேன். இனி நான்...” வாக்கியத்தை முடிக்காமல் சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.’

பிறகு ‘‘கேள் பாக்கியையும்!’’ என்று தொடர்ந்து சொன்னான்; ‘‘தஞ்சாவூருக்கு நான் வந்த பிறகு இந்த மம்மேலியார் எனக்கு மிகவும் நெருங்கிய சிநேகிதர் ஆனார். அப்பொழுது என் தகப்பனார்தான் மம்மேலியார்களுடைய தாயாருடன் சிநேகமாக இருந்த டாக்டர் என்பது எனக்குத் தெரியாது. அந்தக்கதை — அதாவது என் தகப்பனாரின் பூர்வ காலக் கதை தெரியுமே தவிர அதில் சம்பந்தப்பட்ட ஸ்திரீயைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஒரு நாள் குடி வெறியிலே சதாசிவ மம்மேலியாரே சொல்லித்தான் எனக்குத் தெரிந்தது.’’

என்னையும் அறியாமலே கதையில் ஈடுபட்டவனாக தான் கேட்டேன். ‘‘சதாசிவ மம்மேலியாருக்கு?’’ என்று.

‘‘அந்த டாக்டரின் பிள்ளைதான் நான் என்று சதா சிவத்துக்குத் தெரியாது என்று தான் நான் இப்போது நினைக்கிறேன். ஆனால் என் மனத்திலே மூர்க்கமான ஒரு கோபம் மூண்டது. தெரிந்து கொண்டு வேண்டுமென்று என் தகப்பன் செய்த பாவத்திற்கு என்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சதாசிவம் திட்ட மிட்டிருப்பதுபோல் எனக்குத் தோன்றியது. இதற்குக் காரண மில்லைதான். ஆனால் காரணமற்ற கோபத்திற்குத்தானே ஆழமும் அழுத்தமும் அதிகமாக உண்டு?’’

மீண்டும் நீண்டதொரு பெருமூச்சு விட்டான் ரகு. சற்றே ஆயாசமடைந்தவனாகத் தலையணையில் சாய்ந்து கொண்டான்.

‘நேரம் எனக்கு அதிகமில்லை. சீக்கிரமே சொல்லி முடித்து விடுகிறேன். ஆனால் சிரமமான விஷயம். சாதாரணமாகச் சகோதரன் போல் என் மனைவியுடன் சதாசிவ மம்மேலியார் பழகியது என் மஞ்சள் காமாலைக் கண்களுக்கு... வளர்த்தி, விவரித்துச் சொல்வானேன். நீ புரிந்துகொள்வாய். கதாசிரியன் அல்லவா? அவள் என் சொற்கள் தாங்காமல் மனமுடைந்துதான் செத்தாள்.’

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. அப்படியா சமாசாரம்? இது எதிர்பாராத விஷயம். ‘‘இப்போ அதெல்லாம் பற்றி எதற்கு ரகு? உடம்பையோ மனத்தையோ அலட்டிக் கொள்ளாமல் படுத்துக்கொள்’’ என்றேன் நான்.

“இந்த விஷயம் என் மனத்திலே கிடந்து உழலாத விநாடிதான் ஏது? உனக்குக் கூறுவதில் எனக்கே ஆறுதல் கிடைக்கும்.... என் கண்முன் என் மனைவி மெலிந்து நலிந்து இறந்தாள். அதற்குப் பிறகு சதாசிவ மம்மேலியாரைக் காணும் போதெல்லாம் எனக்கு அவரை வெட்டிப் போட்டு விடலாம் போல இருந்தது. அவர் கண்ணில் படாதவண்ணம் சமாளித்துக் கொண்டேன்.... பிறகு நீ வந்த பிறகு நடந்ததெல்லாம்....”

அலுப்புடன், ஆயாசத்துடன் படுக்கையில் சாய்ந்து விட்டான் ரகு.

அன்றிரவு மீண்டும் பிரக்ஞை இழந்து பிதற்றத் தொடங்கி விட்டான் ரகு. நள்ளிரவுக்கு மேல் மீண்டும் ஜுரம் வந்து விட்டது. மறுநாள் அதிகாலையில் ஜன்னி என்கிற மாதிரித்தான். வந்து பார்த்த டாக்டருக்கு விஷயம் விளங்கவில்லை. மருந்து கொடுத்தார்; “பயன் இராது” என்று சொன்னார்.

மூன்று நாள் பிரக்ஞையற்றுக் கிடந்தான் ரகு. பிறகு மரணத் தறுவாயில்தான் சற்று தெளிவு வந்தது. தன் குழந்தைகளைக் கூப்பிட்டு என்னிடம், “நீ பார்த்துக் கொள்” என்று ஒப்படைத்தான்.

ரகு என்ற பிரியமான பெயரை நீக்கிவிட்டு, அந்தச் சவத்துடன் மீண்டும் ஒரு தரம் வடவாற்றங்கரை வரை நடந்து விட்டுத் திரும்பினேன் நான்.

அவன் ஆத்மாவுக்குச் சாவிலோ, சாவைப் போன்ற ஓர் உணர்ச்சியற்ற தன்மையிலோ தான் அமைதி கிடைத்திருக்கக் கூடும் என்று உணர்ந்த நான். அவன் இறந்ததற்கு வருந்த வில்லை — இருந்து பட்டதற்கெல்லாம் தான் .

*